பதிவு எண் 2041

# KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4. | ஈரோடு, விபவ ஞு வைகாசி 14மீ௳ (27—5—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 5.

## தானியம் அரைக்கும் கை - யந்திரம். -



மாவு, கோதுமை, காப்பி முதலியன அரைக்கலாம்.

மணி 1க்கு ஆறு பட்டணம் படி அரைக்கக்கூடியது.

**யந்திரம் 1க்கு விலை ரூபாய் 67—8—0.**

இன்ஜினினால் ஓட்டப்படக்கூடிய 'பிரீமியர்' என்ற பிரசித்திபெற்ற அரைக்கும் யந்திரங்களும் சலிசாக கிடைக்கும்.

MASSEY & Co LTD
ENGINEERS

மாசி அண்ட் கம்பெனி, Ltd.
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்
கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்சி, 26 வெள்ளாளத்தெரு, வேப்பேரி மதராஸ

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0 தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்

## இனாம்! இனாம்!
## ஸில்க் அங்க வஸ்திரம்.
### பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டூப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனாம் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துக்கொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனாம் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனாம்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

## நல்ல சாமான் விலை சரசம் இனாம்

முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் சார்ஜ் இனாம். ரூபாய் 1-க்கு டஜன் 16 காலர் கலர் கிளாஸ் பொத்தான். கொஞ்சம் ஸ்டாக் இருக்கிறது. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

K. பாலய்ய செட்டி,
ஷாப் நாகூர், S. I.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறலாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

---

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ.1-0-0 வெளி நாடுகளுககு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனும்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

---

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

---

# முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமன்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12: மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

---

# 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,
ஹெட்நர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

---

# மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

# இந்து மதமும் மனுஸ்மிருதியும்.

(ஸ்ரீதரசுவாமி எழுதுவது)

மதம் என்றால் கொள்கை என்று பொருள். மனிதர்கள், தங்களுடைய ஜீவிதத்தை புனிதமாகச் செய்து, இன்பத்துடனும் அன்புடனும் சகஜீவிகளாக வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் கொள்கை என்னும் மதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். மனிதர்களுக்காக மதமேயன்றி, மதத்திற்காக மக்கள் ஏற்படவில்லை யென்பது உண்மை. மதங்களின் பெருமையும், சிறுமையும், அவைகளின் கொள்கைகளை பொறுத்திருக்கும். சமத்துவம், சகோதரத்வம், சத்யம், சம உரிமை, அன்பு, பரோபகாரம் முதலான உத்தம குணங்களை கற்பிக்கும் மதங்களை ஒருவரும் ஒருபோதும் குற்றஞ் சொல்லமாட்டார்கள். பிறப்பில் உயர்வு தாழ்வுகளையும், ஜாதி பேதங்களையும் கற்பித்து ஒற்றுமையை கெடுத்து தீண்டாமை, நெருங்காமை, பார்க்காமை முதலான பேதத்தை விர்த்தி செய்து மூடக் கொள்கைகளை பரப்பி மக்களின் அறிவைக் கெடுத்து மனிதர்களை மனிதர்கள் அடிமைப் படுத்தும் மாதிரியான மதங்கள் ஒருபோதும் மதங்களாகா. அவைகளை அறிவாளிகள் அங்கீகரிக்கவும் மாட்டார்கள். அத்தகைய மதங்கள் இருந்து உலகத்தை கெடுப்பதைவிட, இல்லாமலிருப்பதே மேல். உலகில் கிறிஸ்து மதம், மகம்மதிய மதம், புத்த மதம் முதலான அநேக மதங்கள் இருக்கின்றன. இம்மதங்களை ஏற்படுத்தினவர்கள் இன்னார்களென்றும், இன்ன காலத்தில் ஏற்படுத்தினார்களென்றும் ஒரு வகையில் தெரியக்கிடக்கின்றன. இந்து மதத்தை எடுத்துக் கொண்டால் அது எந்தக்காலத்தில், யாரால் ஏற்படுத்தப்பட்டதென்று அறிய முடியாது. ஆனதுபற்றி அது 'அபௌருஷேயம்' என்றும், 'அனாதி' என்றும் சொல்லப்படுகின்றது. (அனாதி-முதன்மையற்றது) (அபௌருஷேயம்—புருஷர்களால் (மனிதர்களால்) சிருஷ்டிக்கப்படாதது). முதன்மையில்லாததும், மனிதர்களால் சிருஷ்டிக்கப்படாததும் ஆகிய மதமே இந்து மதம். இது 'சனாதன தர்மம்' என்றும் சொல்லப்படுகிறது. இவ்வண்ணம் காலவரையில்லாததும், நாதனில்லாததும் ஆகிய இந்துமத சனாதன தர்மத்தை அறிவிக்கும் சாஸ்திரங்கள் அநேகமுண்டு. அந்த சாஸ்திரங்களை எடுத்துப் பார்த்தால் அது சிவனால் சொல்லப்பட்டதென்றும், விஷ்ணுவால் சொல்லப்பட்டதென்றும், பிர்மனால் சொல்லப்பட்டதென்றும், கடவுளால் சொல்லப்பட்டதென்றும், ரிஷிகளால் சொல்லப்பட்டதென்றும் சொல்லியிருக்கின்றன. ஆகையால் அத்தகைய புத்தகங்கள் கடவுள் வாக்கென்றும் நிர்பந்திக்கப் பட்டிருக்கின்றன. அதில் சிரேஷ்டமானதும் முதன்மையானதும், மனுதர்ம சாஸ்திரமாகையால் மனுஸ்மிருதியில் கடவுள் சொல்லியிருக்கும் சில சுலோகங்களின் கருத்தை இங்கு எழுதுகிறேன். இதை நேயர்கள் கவனிப்பார்களாக.

மனு. அ. 1 சு. 31. 'உலகாபிவிருத்தியை கருதி பிர்மாவானவர் தம் முகம், தோள், துடை, கால் என்ற நான்கு அவயவங்களிலிருந்தும் முறையே முகத்திலிருந்து பிராமணனையும், தோளிலிருந்து க்ஷத்திரியனையும், துடையிலிருந்து வைசியனையும், காலிலிருந்து சூத்திரனையும் சிருஷ்டித்தார்' (பஞ்சமர்களையும் ஸ்திரீகளையும் எதிலிருந்து சிருஷ்டித்தாரோ).

அ. 1 சு. 86. கிருதயுகத்தில் தபசும், திரேதாயுகத்தில் ஆத்ம ஞானமும், துவாபரயுகத்தில் யக்ஞம் (யாகம்) முதலானதும், கலியுகத்தில் (பிராமணர்களுக்கு) தானம் கொடுப்பதையும் சிரேஷ்டதர்மமாக விதிக்கப்பட்டிருக்கிறது'

சு. 87. 'பிர்மாவானவர் தம் முகம், தோள் துடை, கால் இவைகளிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட பிராமணர் முதலான ஜாதிகளுக்கு வெவ்வேறாக கர்மங்களை சிருஷ்டித்தார்'

சு. 91. 'அதில் சூத்திரர்களின் தர்மம் என்னவென்றால், பிராமணர்களுக்கு பணிவிடை செய்வதும், அவர்களுக்கு அடிமையாயிருப்பதுவும், மிகவும் மோக்ஷத்திற்கு ஏது கரமென்று கருதி அதை சிருஷ்டித்தார். அதும் அசூயையின்றி செய்ய வேண்டும்'

சு. 92, 93. 'புருஷ சரீரம் பரிசுத்தமாயிருக்கிறது. அதில் நாபிக்கு மேல் பாகம் அதிக பரிசுத்தமானது. ஆகையால் பிர்மாவின் முகம் அதிலும் அதிக பரிசுத்தமாயிருக்கிறது. பிர்மாவின் முகத்திலிருந்து ஜனித்தவனாயிருப்பதாலும் மற்ற ஜாதிகளுக்கு தர்மத்தை உபதேசிக்க வேண்டியிருப்பதாலும் வேதத்தை தரிப்பதாலும் இவ்வுலகில் பிராமணன் கடவுள் ஆகிறான்'

சு. 94. 'சுயம்புவாகிய பிர்மாவானவர், தேவர்களுக்கும், பிதுர்க்களுக்கும், யாகம் சிரார்த்தம் முதலானவைகளை செய்து மற்றுள்ள ஜாதிக்காரர்களுக்கு மோக்ஷத்தை அளிப்பதற்காக தன் முகத்திலிருந்து முதலில் பிராமணனை சிருஷ்டித்தார்'

சு. 95. 'பிராமணனால் சொல்லக்கூடிய மந்திரத்தின் பலத்தினால் தேவர்களும் பிதுர்க்களும் பரிபூரணத்திருப்தியை அடைகின்றனர். ஆகையால் பிராமணனைவிட உயர்ந்தவர்கள் இவ்வுலகில் ஒருவருமில்லை'

சு. 96. 'உலகிலுள்ள பொருள்களில் பிராணனுள்ள பொருள்கள் சிரேஷ்டம். அதில் அறிவுடன் ஜீவிக்கும் பசு முதலான பிராணிகள் சிரேஷ்டம், அதிலும் மனிதர்கள் சிரேஷ்டம். மனிதர்களுக்குள் பிராமணர்கள் சிரேஷ்டமானவர்கள்'

சு. 100. 'பிராமணன் எல்லா ஜாதியிலும் உயர்ந்தவனாகையாலும் பிர்மாவின் முகத்தில் ஜனித்ததினாலும் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜாதிக்காரர்களின் சொத்தை யெல்லாம் கொள்ளையடிப்பதற்கு அருகனாகிறான். (உரிமையுடையவன்.')

சு. 101 "ஆகையால் ஒரு பிராமணன் மற்றவர்களிடமிருந்து எதை வாங்கினாலும், அது அவனுடையதே, ஏன் என்றால் எல்லாம் அவனுடையதாயிருப்பதாலும் அவன் கிருபையின்றி மற்றவர்கள் வாழமுடியாமையாலும் தான்'

சு. 102, 103 "இந்த பிராமணர் முதலானவர்களின் தர்மத்தைபகுத்தறிவதற்காக பிர்மனால் இந்த சாஸ்திரத்தின் மஹிமையை அறிந்த பிராமணன் தன் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கலாம் மற்ற ஜாதிக்கு உபதேசிக்கக்கூடாது"

சு. 105, "இந்த சாஸ்திரத்தைக்கூறும் பிராமணன் தம் 7 தலைமுறையையும் சுத்தப்படுத்துவான் அவன் இந்த பூமியை முழுதும் தானம் வாங்க உரிமையுடையவனாகின்றான்"

(கொடுப்பாரில்லை.)

அ. 2 சு. 20 "இந்த தேசத்தில் ஜனித்த பிராமணர்களிடமிருந்து மற்றுள்ளவர்கள் எல்லா தர்மத்தையும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்"

அ. 2 சு 10 11 "யாவனொருவன் இந்த சாஸ்திரத்தை தர்க்க சாஸ்திர யுக்தியினால் ஆட்சேபிக்கின்றானோ அவனை மகான்கள் அப்புறப்படுத்த வேண்டும். அவன் வேதநிந்தகனும் நாஸ்திகனும் ஆகிறான்"

அ. 2 சு. 24 "சூத்திரன் வேறு தொழில்செய்வதற்குபிராமண சுசுருஷை(பணிவிடை)யை மட்டும்செய்து கொண்டிருக்க வேண்டும் அத்தகைய தேசங்களில் பிராமணர்கள் வசிக்கலாம்மற்றதேசங்கள் மிலேச்சதேசங்களாகும்"

சு. 31 "சூத்திரனுக்கு நாமகரணம் செய்யும் பொழுது எப்பொழுதும் அடிமை தாசன் என்ற தாழ்ந்த ஸ்திதியைக் குறிக்கும்நாமங்களைச் சூட்ட வேண்டும்"

சு. 135 10 "வயதுள்ள பிராமணனுக்கும் 100 வயதுள்ளக்ஷத்திரியனுக்கும் பிதாபுத்திரன் என்ற மரியாதையோடு நடக்க வேண்டும் அதாவது பிராமணனைபிதாவாகவும்க்ஷத்திரியன்பிராமணனுடைய புத்திரனாகவும் கருத வேண்டும்"

அ 2 சு 137 "90வயதிற்கு மேல்சூத்திரனுக்கு எல்லோரும் மரியாதை செய்யலாம்" அதுவரையில் அவன் மரியாதைக்கு பாத்திரனல்ல"

நேயர்களே மனுதர்ம சாஸ்திரத்தின் அதர்மத்தைப் பார்த்தீர்களா? இந்த சுலோகங்களை பார்க்கும் பொழுது முற்காலத்தில் பிராமணர்கள் பிராமணரல்லாதாரை எவ்வளவு தூரம் கொடுமைப் படுத்தியிருக்கின்றார்கள் என்பது விளங்கும். மேலும் பிராமணரல்லாதார்களுக்கு இரும்பைக் காய்ச்சி ஆசனத்தில் ஏற்றுவதும் நாக்கை அறுப்பதும், ஈயத்தைக்காய்ச்சி ஊற்றுவதும் கைகால்களை வெட்டுவதும் ஆகிய அநேகசுலோகங்கள் இதில் மலிந்து கிடக்கின்றன அதை யெல்லாம் எடுத்து விரிக்கின் பெருகும்.

இத்தகைய ஸ்மிருதிகளையும் வேதங்களையும், புராணக்குப்பைகளையும் நம்பி ஏமாற்றமடைந்து வந்ததும் வருவதும் போதாதா? பார்ப்பானையே கடவுளென்றும் மற்றையோர்களை சூத்திரரென்றும் கூறி நம்மை பாதாளத்தில்அழுத்திவைத்தது போதாதா? இதைப்பார்த்து யார் தான் வருந்தாமலிருக்கமுடியும். இத்தகைய சாத்திரக் குப்பைகளை கடவுள் செய்தாரென்று சொல்லி ஜனங்களை நம்பச் செய்துவிட்டார்கள், உலகிற்கு பரமபிதாவெனப்படும் கடவுள் ஒருகூட்டத்தார்கள் உயர்ந்தவரென்றும் மற்றவர்கள் அவர்களுக்கு அடிமையாயிருக்க வேண்டுமென்றும்சொல்வாரா? உலகிலுள்ள ஜலம், நெருப்பு, காற்று, சூரியன், சந்திரன் முதலான உயர்ந்த சிருஷ்டிகளையெல்லாம் சிருஷ்டித்து அதெல்லாம் பொதுவாக எல்லோர்க்கும் பக்ஷ பாதமின்றி உபயோகமாகும்வண்ணம்ஸ்ருஷ்டித்துள்ள கடவுள் இதைப் போன்ற ஆபாசக் களஞ்சியக் கதைகளை நிர்மாணிப்பாரா? அநியாயமாக இதை அவர்தலையில் சுமத்தலாமா? என்னே! சுயநலக்காரர்களின் சூழ்ச்சி ஒரு பெரிய சமூகத்தை அடிமைப்படுத்தி தங்கள் காரியங்களை சாதிக்கவேண்டி எழுதிவைத்த சாத்திரங்களையும்வேதங்களையும்ஒழித்து நியாயமான வழியில் ஜனங்களை முன்னேற்றமடையச் செய்து சுயமரியாதையைக் காப்பாற்றவேண்டுமென்று சொல்லும் "குடி அரசை"யும் நம் தலைவரையும் குற்றஞ் சொல்லுவதும் எதிர்ப்பதும் ஆகியகிளர்ச்சி செய்கின்றார்களே என்ன அநியாயம்! உண்மையை அழிக்க ஒருவராலும் முடியாதென்று இயம்புவோர் 'மத தூஷணம்! பிராமண தூஷணம் என்று சொல்லுவதின் கருத்துஎன்ன? உண்மையை அழிக்க முடியாதென்ற கருதின்தைரியத்தை அவலம்பிக்கலாமல்லவா? உண்மை மதத்தை சுயமரியாதை-மதத்தை-சகோதரத்துவமதத்தை-அன்பு மதத்தை ஒருவரும் குறைகூறவில்லை. ஆபாசங்களிருந்தால் அதை கண்டிக்க வேண்டியதவசியம் தான் முகம், தோள், கால், முதலான விடங்களிலிருந்து ஒருவரும் பிறக்கமாட்டார்கள் எல்லாரும் ஒரே வழியாகத்தான் பிறக்கிறார்கள் என்று 'குடி அரசு' சொல்லுகிறது மனிதர்களுக்குள் பசி, நித்திரை, சுகதுக்கங்கள் எல்லாம்சமமாயிருக்க பார்ப்பானுக்கு மட்டும் தர்மம் செய்தால் மோக்ஷம் கிடைக்கு மென்று சொல்வது தவறென்றும் தர்மம் செய்தால் அது எல்லோர்க்கும் சமத்துவமாயிருக்க வேண்டுமென்றுந்தான் 'குடி அரசு' சொல்லுகிறது. சூத்திரர்கள் என்றபதம் இழிவான பொருட்களை கொண்டிருப்பதால் அது ஒரு பெரிய ஜன சமூகத்திற்கு அவமானத்தை உண்டு

பண்ணக்கூடியதாயிருக்கிற தென்று தான் 'குடி அரசு' சொல்லுகிறது. பிராமணர்மணர்களுக்கு பணிவிடை செய்வது தான் சூத்திரனுடைய தொழில் என்று சொல்லுவதும் அவர்கள் காலில் விழுவதும் ஆகிய காரியங்கள் மானங்கெட்டசெய்கை யென்று தான் 'குடி அரசு' கூறுகின்றது. மக்களெல்லோரும் சமமாயிருக்க 'நான் உயர்ந்தவன் நானேகடவுள்' என்று சொல்லிஏமாற்றுவதுமனித அறிவிற்கு மாறுபட்டதென்றுதான் 'குடி அரசு' சொல்லுகிறது. ஆலயங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் எல்லோருக்கும் சம உரிமை வேண்டும். கடவுளை வணங்கதரகர் அவசியமில்லை. என்றும் பால்ய விவாஹம் ஒழியவேண்டும், ஸ்திரீகளை கடவுள்பேரால் விவசாரிகளாக்கக் கூடாதென்றும் திதி என்ற பெயரால் ஒரு கூட்டத்தார்களின் வயிற்றை நிறப்பவேண்டாம் என்றும் தான் 'குடி அரசு' சொல்லுகிறது. ஆளுக்கு ஒரு ஜாதியும் ஆளுக்கொரு கடவுளுமாக வைத்துக் கொண்டு சண்டையிட்டு வீணாக மண்டை உடைக்க வேண்டாமென்றும் தான் 'குடி அரசு' முறையிடுவது. நாட்டின் நலத்தைக் கருதி சொல்லும் நல்ல கொள்கைகளை கேட்கும் பொழுது மதம் போச்சு என்று சொல்ல வேண்டாம். எல்லா பதார்த்தங்களிலும் குண தோஷங்கள் கலந்துதானிருக்கிறது. தோஷத்தை நீக்கி குணத்தைமட்டும் ஏற்றுக் கொள்வது தான் இயல்பு. செல்லின் உமியை நீக்கி அரிசியையும், கரும்பின் தோல், சக்கை முதலானவைகளை நீக்கி ஸாரமான ரசத்தையும்தான் ஸ்வீகரிக்கின்றோம்.

ஆகவே, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்களிலுள்ள ஆபாசங்களையும், மூடக்கொள்கைகளையும் நீக்கி விடுவதால் மக்களுக்கோ மதத்திற்கோ ஒரு ஆபத்தும் வராது. மூடக்கொள்கையை மதங்களென்று கருதியிருந்தால். அது அழிய வேண்டியதவசியம். அழிந்து விடுவதும் உண்மை, கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும் நிகழும் அக்கிரமங்களைக் கண்டிக்கும் பொழுது 'மதம் போச்சு, நாஸ்திக மாச்சு, கடவுள் இல்லை' யென்று சத்தம் போடவேண்டிய அவசியம் சிலருக்குண்டு. அதனால் இழிவடைந்துக்கொண்டிருக்கும் சிலர் அவருடன் சேர்ந்து கூப்பாடு போடுவதன் அவசியம் இன்னதென்றுதான் தெரியவில்லை. ஆயிரக்கணக்கான வருஷங்களாக, 'மிருகங்களிலும் கேவலமாக பாதாளத்தில் அழுந்திக் கிடப்பது போதாதென்று அவர்கள்கருதுகின்றார்போலும்.

மனுஸ்மிருதியைபழயபாட்டிகதையென்றும்அதை யாரும் பொருட்படுத்துவதில்லை யென்றும்சிலர்கூறுகிறார்கள், ஆனால்பழைய பாட்டிகதையின் அஸ்திவாரத்தில் கட்டியுள்ள மாடிகளில் மக்கள் உலாவுகின்றார்களே? அங்கு வர்ணாச்சிரமப்பேய்தான் நிறைந்திருக்கின்றன. மக்கள் அம்மாடிகளில் வர்ணாச்சிரம பேய்பிடித்து. ஆடுகின்றார்கள். இப்பேயை ஓட்ட யார் என்ன மந்திரத்தை கண்டுபிடித்திருக்கின்றார்கள் ? எந்த மந்திரங்கட்கும் பாட்டி அசையமாட்டாள். பாட்டிக்குமிருத்துஞ்சய ஓமம் பிர்ம்மதேவர்களால் செய்யப்படுகிறது. இதனால் பாட்டிக்கு ஆயுள் நீண்டுக்கொண்டே போகும் ஆகையால்பாட்டிகட்டிவைத்தகட்டிடங்களும்அதனுள்ளிருக்கும் வருணாச்சிரம பேய்களும் உடைக்கப்பட்டாலன்றி தேசத்திற்கோ, ஜனங்களுக்கோ ஒரு நன்மையும் உண்டாகாதென்பது நிச்சயம்,

ஹிந்து மதத்தை அழிக்க முயலுகின்றார்னென்று கருதுபவர்கள் அதே ஹிந்து மதத்திலுள்ள சில பிரமாணங்களை கவனிப்பார்களாக.

வாசிஷ்டம்:— 'யுக்தி யுக்த முபாதேயம் வசனம் பாலகாதபி. அந்யத்ருண மிவதியாஜ்யம் அப்யுக்தம் பத்மஜன்மனு'

## ஸ்ரீ கைவல்ய சுவாமிகளும் 'மனிதன் எதனால் உயர்ந்தவன்' என்னும் வியாசமும்.

சீர்சான்ற ஞானச் செல்வர்களே!

நமது தமிழ் நாட்டில் வெளி வந்தலவும் பத்திரிகை பலவற்றுள்ளும் 'குடிஅரசு' என்னும் இப்பத்திரிகை உலகம் ஒழுகும் இயல்புகளையெல்லாம் ஒருங்கு திரட்டி உருண்டை வடிவமாக உள்ளதை யுள்ளபடியே காட்டி ஒளிர்வதாகும். நல்லதும் அல்லதும் அளாவிச் சில காணப்படினும் நல்லதைத்தான் நல்லவர்கள் போற்றிப் புகழ்தல் வேண்டும். பண்டைக் காலந்தொட்டே சில முரணான வழக்க ஒழுக்கங்கள் நம் நாட்டில் அடிப்பட்டு வேரூன்றிப் படர்ந்துவிட்டன, அவற்றைக் களைந்தெறிய வேண்டியது அறிவாளர்களது கடமை. அதுபற்றிச் சிலர் புறவுரை கூறி அலைவது அவர் கடமையாக ஆய்விட்டது ஆகவே எப்பொழுதும் உண்மை உண்மையாகவே மாறி வந்துவிடும். பரமேசன், ஒருவர் உணரும்படி முன் உணர்த்திப் பின்பு அவர்மூலம் அனைவரையும் உணரச்செய்கிறான். இந்த இயக்கம் பல இடங்களிலும் படர்ந்து தழைத்ததும், தெய்வநிர்ணயமன்றிஒருவர் முனைத்தெழுந்து செய்யும் காரியமல்லவாகும்.

முன்னைய யுகங்களில், வேதியர், அந்தணர், ஐயர், என்பன வாதியாய பெயர்களிட்டழைத்ததும், அவர்களது சீலமான தவக்கோலம் பற்றியும், இறைவனை யன்றி மற்றொன்று எண்ணா ஏற்றமும் பற்றியே. இக்கலியுகத்திலோ, அச்செயல்கள் யாவுங் குன்றுதலுடையனவாகியும், பெயர்கள் மட்டும மறைந்திலவாகும். "குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின்" என்னும் அறவுரை நமது உத்தரவேத முழக்கம், விரதன் வருகையை வருணிக்குமிடத்து நம் கவி சிரேஷ்டர், கலிகாலத்தையும் இழுத்துச் சொல்லி விளையாடுகிறார். அறிஞர்கள் யாரும் மகிழத்தக்கதொன்றாகும்.

"(மா) மந்த பாதகம் விடங்கனல் வயங்கி நிமிரக்
கங்கு பூசி வருகின்ற கலிகால மெனவே"

என்பதாக.

'திருமகள் விலாசம் மங்குவதற்குப் பிறக்கும் பாவமானது, விஷமும் அக்கினியும் போல விளங்கி ஓங்க, இருளையே பூசிக்கொண்டு வருகின்ற கலிகாலத்தைப்போல' என்பது தாற்பரியம். இதனால் பெறப்படுவது யாதெனில், இக்கால சீர்மை நற்செயல்கள் யாவுங் குன்றி தீச்செயலே தலை சிறக்குமென்பது. மேலையார் அறத்துறை ஒழித்து புறத்துறை புகுந்ததும் கலியின் வலியென்பதன்றி மற்றொன்றும் கூறுவதற்கின்று. ஆகவே பொய்க்கூட்டுப் பொமமையை மனித வுருவமாகப் பாவித்தல் எத்துணை ஞானசூன்யமோ, அதுபோல் முன்னைய தவத்திற்கான பெயர்களான அருமைப் பெயர்களை இப்பொழுதும் ஒழுக்கங் குன்றியவர்கள் மேலேற்றி அழைத்தலும் ஞான சூன்யமாம். வேதமும் போய், கீதமும் போய், நாதமும் போய், எல்லாம் போய், உடலைப் பருக்க வைக்கவும், பருக்கவே, தேக உராய்ப்புக்குமாகவே சிலர் உலக நூல்ஓதி, அதனால் உத்தியோக அமைப்புப் பெற்றுப் பணப்பேய் பட்டந்தர்ம்கப் பெற்றுத் தன்னைப்போலப் பிறரைச் சிந்திக்காமல் மிருக உணர்ச்சி கைகூடப் பெற்று தவம் பெற்ற தமிழ் நாட்டில் உலாவுந்தன்மை நிறைந்து விட்டது. அருந்தல் இன்பம், பொருந்தல் இன்பங்களோடு, உலகம் அவர்களுக்கு முடிந்துவிட்டதாகும்.

கைவல்ய சுவாமிகள் இத்தனை காலமாகக் 'குடி அரசு'ப் பத்திரிகையில் எழுதிவந்த வியாசங்கள் பலவற்றுள்ளும், "மனிதன் எதனால் உயர்ந்தவன்" என்னும் வியாசம், நல்ல வாக்கிய அமைப்புகளுடனும், சீவன்முத்த புருஷ லக்ஷணங்களையும், பரமேசன் ஆன்மாக்களை வினைக் கயிற்றாற் கட்டி இயக்கும் அழகுகளையும், உலகம் ஒழுகும் உன்னதத்தையும், வேறு பிறவும் மிகச் சீலமாகக்கூறி வெளி வந்ததாகும். இவ்வியாசத்தைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் புத்துணர்ச்சி உதிக்குமென்பது எனது கருத்து.

கைவல்யம் எனபதற்குச் சித்தி, மோக்ஷம், என்பது பொருளாகலின், பெயர் உரிமைக்கேற்ப அரிய வியாஸத்தைப் பலருக்குங்கொடுத்துதவிய சுவாமிகளுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தை யானுங் கொடுக்கின்றேன்.

இங்ஙனம N. ராமசாமி பிள்ளை, குன்னூர்.

காருடம்:— 'ஸ்வஸ்வ வர்ணாச்சிரமாசார, நிரதா சர்வமானவ: நஜானந்தி பரம் தர்மம் வ்ருதா கஷ்யந்திடாம்பிக'

சிவஞ்ஞ தீபிகை:-நானாகபடசாஸ்த்ராணிப்ரபஞ்சகத்திதாஞசித்ருஷடா விஸ்வாச பூர்வந்தவித்வா சபிசலத்யவேறா.

1 கருத்து:-'யுகதிக்கும் அனுவத்திற்கும் ஒத்திருக்கும் விஷயங்களை ஒரு குழந்தை சொன்னாலும் அங்கிகரிக்கவேண்டும். அதற்கு முரண்பட்டவைகள் பிர்மனால் சொல்லப்பட்டதாயினும் நிராகரிக்கவேண்டும்'

2. 'ஜனங்கள் வர்ணங்களிலும் ஆச்சிரமங்களிலும் ஆசாரங்களிலும் கட்டுப்பட்டு மயங்கி உண்மையான என்னுடைய பரதர்மத்தை அறியாமல் வீணே டாம்பீகர்களாய்நசித்து போகின்றார்கள்'

3. 'உலகில் அநேக உண்மைக்கு மாறான திருட்டு நூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை நம்பி வித்வான்களும் மோசம் போனார்கள்' என்பதாம்.

இதனால் பிராமணர்களால் எழுதபட்ட திருட்டு சாத்திரங்களை நம்பக்கூடாதென்றும் யுக்தி அனுபவங்கட்கு ஒத்ததையே அங்கிகரிக்கவேண்டுமென்றும் வர்ணாச்சிரமதர்மத்தை கட்டி அலைபவர் டாம்பீகர்களாய்வீணாக நசித்து போகின்றார்கள் என்றும் ஏற்படுகிறது.

## நாகூரில் பார்ப்பனீயமற்ற திதி

இவ்வூரில் பிரபல ஜவுளி வியாபாரியும், மிராசுதாரும், திராவிட சங்கத்தின் தலைவரும் செல்வாக்கும் உள்ளவரான திருவாளர் எம். மகாதேவச் செட்டியார் அவர்கள் தம் அருமைத் தகப்பனாரின் திதியை 16-5-28 புதன்கிழமை பார்ப்பனர்களை அறவே நீக்கி பார்ப்பனரல்லாத பெரியோர்களைக் கொண்டு சிறப்பாய் நடத்திவைத்து வந்திருந்த பெரியோர்கள் சுற்றத்தார் சினேகிதர் முதலானவர்களுடன் அருஞ்சுவையுணவருந்தி கடவுளை வாழ்த்தி சுயமரியாதையைப் போற்றி எல்லோரும் மகிழ்ச்சியுறும்படி செய்தனர். ஒரு நிருபர்.

# 'குடி அரசுக்கு'

## 'குமரன்' வாழ்த்து.

### கைவல்ய சாமியார் எழுதுவது

இல்ல வாழ்த்தானது நமது ஜீவன் இப்போது வைதிகர்களின் கட்டுப் பாடென்னும் சாஸ்திரத்திற்குப் பயந்து குருட்டாச்சாரமென்றதனை பூண்டு புழுதியில் கிடப்பதை நீக்கி, அதன் சகஜ நிராகார நித்ய ஜயாமிருத ரூபமான ஆத்ம ரூபத்தில் சேரும்படி நமது தேசத்தின் குலதெய்வமான 'குமரன்' கூறினதாகும். "அடிமேல் அடிஅடித்து 'ஆத்மா நம் வித்தி' தன்னை ஆறி" என்பதுபோல இருக்கிறது. உண்மையைக் கெஞ்சி அறிவுச்சுடர் கொளுத்தும் வீதிவழியே செல்லுகையில், நாளுக்கு நாள் வெற்றி கொண்டு முன்னேறும்போது, உலக முழுதும் எதிரொலி கேட்கத்தக்கதாக உண்டான ஆரவாரம் குன்றுகளிலிருக்கும் குமரனையும் கூட்டிப் பிடித்துக்கொண்டு 'குமரன்' பத்திராலயத்துக்குள் நுழைந்து அவர்களும் தானுமொன்றாகிக் கலந்து வருவதால் புறத்திலிருந்து இடைவிடாமல் நம்மீது அவமானமும் கஷ்டமும் பட்டுப் பட்டு தீண்டலாயிருப்பதைச் சுத்திபண்ணிக் கொள்ளுங்கள். சென்ற காலப்புழுதியும் சருகும் புதியஉதயத்தை மறைக்காமல் செய்து கொள்ளுங்கள். தானாக விரும்பி, தான் உழைத்தல் என்னும் ஓமத்தைச் செய்து சுத்தி பண்ணுங்கள். அந்த ஓமத்தீயில் நம்முடைய பாவங்கள் வெந்துபோகும்; அஞ்ஞானப் புகை விலகும்; சோம்பற்குணம் சாம்பலாகும் என்பது போல் வாழ்த்துதலிருக்கிறது.

ஜன சமூகங்கள், எவ்வளவு நிர்ப்பந்தத்தில் அகப்பட்டுக் கிடந்தாலும், தங்களுடைய இப்போதைய ஜீவித காலத்தை இரட்சித்துக் கொள்வதிலேயே இச்சையுள்ளவர்களாய், தன்னை இரட்சித்துக்கொள்வதற்கு ஆயுதமாக இழிந்த தந்திரம், வஞ்சகம், கபடம், இவற்றை கையாளும் சுயநல ரூபமாய், தம்மைவிட பலமுள்ளவர்களின் பாதங்களைத் தாங்கி, தங்களிலும் பலவீனர்களை மறிக்கும்படி தாக்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களின் மத்தியில் 'குடி அரசு'க்கு நான்காம் ஆண்டு பிறந்து ஏழாயிரம் பிரதியும் வெளியில் வந்துவிட்டது. மனுஷிய ஜாதியை அவமானப் படுத்தி அதை என்றும் அடிமையாக வைத்துக்கொள்ள அதற்கெதிரே போய் தேசாபிமான கர்வத்தை ஓயாமல் நிறுத்துவதற்குச் செய்யும் அத்தனை பிரயத்தனமும் 'குடி அரசை' இனியும் பத்தாயிரம் பிரதியாக்கச் செய்யுமென்பதற்குக் 'குமரன்' பத்திரிகாசிரியரின் வாழ்த்துதலே சாக்ஷி.

'குமரன்' பத்திராதிபர் 'குடி அரசை'ப் பற்றி எழுதின தலையங்கத்தில் காணப்படும் விஷயங்கள் பல இருப்பினும், "தமிழ் மக்களுடைய அகக் கண்களையும் புறக்கண்களையும் கெடுத்துவைப்பதே பார்ப்பனீயத்தின் முக்கிய நோக்கமென்பதை நமது தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது. இன்னிலையை மாற்றவேண்டுமென்பதே இன்று தோன்றி வளர்ந்துவரும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் நோக்கமாகும்" என்னும் வாக்கியத்தால் நமக்கு உண்மையான சத்தியத்தை எடுத்துக்காட்டுகின்றார். இதை தமிழ் உலகம் கவனிப்பதோடு நன்றியும் செலுத்தவேண்டும். அவரின் சிறு வயதில் முதிர்ந்த பிரத்தியக்ஷ அனுபோகம் வந்து அதையும் தைரியமாகவெளியிடவந்த மனப் பரிசுத்தத்திற்காக அவருக்கு எனது நமஸ்காரமே நான் செலுத்தும் நன்றி. அவர் வாலிப முகமான இரு கண்ணின் காம்பீர தோற்றத்துக்கேற்ற பரிசுத்தமான அன்பை நம்மக்கள்பேரில் வைத்திருப்பதே அவரை என்றைக்கானாலும் நம் கூட்டத்தில் உயர்ந்தவராகச்செய்யும். அவர் எண்ணம், பிறருக்காக தங்கள் கூட்டத்தின்மேல் தாங்களே படை எடுத்து அக்கொடுமைத் தொழிலில் லாப நஷ்டங்களை பங்கிட்டுகொள்ளும் கூட்டுறவிலே பிறந்ததன்று. யாதேனுமொரு லாபேக்ஷையினால் அவசியமாகும் சங்கத்தில் தோன்றியதுமன்று. ஆனால் குடுபத்தின் விஸ்தாரம், இருதய விஸ்தாரம், விசாலமான க்ஷேத்திரத்தில் நீண்டகாலத்தில் இயல்பதான விஸ்தாரம், இதுபற்றியே இப்போது 'குடி அரசை'க் குற்றம் சொல்லும் மாறுதலை நான் கண்டு கவலையற்றிருக்கிறேன்.

காரியத்தைஉணர்ந்து இரக்கம் மிகுந்து அபூர்வமான மனோபலம் வாய்ந்தவர்கள் சிலராவது இல்லாமலில்லை. அவர்கள் ஒருதரம் மேனோக்கினால் மறுபடியும் அவர்களை திருப்புவதற்கு எவ்விதமான தூண்டுதல்களாலும் முடியாது. அவர்கள் உண்மைப் பொருளைக்காணவே விரும்புகிறார்கள். என்றைக்கேனும் உயிர் போவது நிச்சயமாதலால் கௌரவமான வெற்றிக்காக அவ்வுயிர் போகட்டுமென்கிறார்கள். மனிதனுக்குள்ளிருக்கும் தாழ்ந்த மிருகத்தன்மையை வெல்வதைக் காட்டிலும் கௌரவமான வெற்றி வேறென்ன இருக்கிறது? நன்மை தீமை, ஜீவன் மரணம், மோக்ஷம் என்னும் தத்துவங்களின் சூட்சுமங்களைக் காணுவதைவிட உயர்த்த கௌரவம் வேறு இல்லை என்று பேசிக்கொண்டு, அதுவே இந்து தர்மத்தில் மேலானதென்று உபதேசித்து, எளியவர்களையும் ஜன சமூகங்களையும் மதம் சாஸ்திரமென்னும் வைதிக கொடுமைக்குட்படுத்தி, மனிதனை மனிதன் அடிமை கொண்டு துன்புறுத்துவதிலிருந்து தூக்கிச் ஜன சமூகங்களைச் சுயமரியாதைக்கு விடுவதே 'குடி அரசின்' பிரசாரம்.

நினைவிலும் செய்கையிலும் ஸ்வதந்திரமே ஜீவிதகாலத்திற்கும், வளர்ச்சிக்கும், சுக வாழ்விற்கும், சொர்க்கத்திற்கும் ஒரே லட்சணமாகும். அது எங்கில்லையோ. அங்கு மனிதன், ஜாதி, ஜன சமூகம், எல்லாம் கீழே போகத்தான் வேண்டும் என்பது மதவாதிகளின் நிச்சயத்திலும் ராஜீயவாதிகளின் கொள்கைகளிலும் ஒப்ப முடிந்த விஷயம். ஆனதால் உள்ளும் புறமும் மானிட வர்க்கமானது விருத்திசெய்திருக்கிற சிறந்த எண்ணங்களை எல்லாம் மிகமிகத்தாழ்ந்தவர்கள் எளியவர்கள் இவர்களுடைய வாசல்களுக்குக் கொண்டு சென்று கொடுத்து அவர்களை தாங்களே ஆலோசித்துக் கொள்ளும்படியாக விடவேண்டுமென்பதே 'குடி அரசின்' கொள்கை,

மதத்திலும் ராஜ்யத்திலும் எல்லாருக்கும் சம உரிமை உண்டு என்பதை தடுப்பதற்கு எந்த மனிதனாவது, வகுப்பாவது, ஜாதியாவது, ஜன சமூகமாவது, ஏற்பாடாவது, கொள்கையாவது, வழக்கமாவது, முயற்சித்தால் அப்படிப்பட்டவர்களின் பேய்க்குணங்களை உலகறியச் சொல்லி அதை ஓட்டவேண்டுமென்பதே 'குடி அரசின்' பிரசாரம்.

எப்பொழுதும், வறுமையிலும், அறிவீனத்திலும், முழுகி யிருப்பவர்களுக்கு மனமிரங்கி அவர்களுக்கு வழி யென்னவென்று நினைத்து அவர்கள் அறிவையோ, கல்வியையோ, தொழிலையோ காண்பதில் பிரயத்தனப்பட்ட நற்குணம்வாய்ந்த புருஷர்களின் கிருகங்களில் தெய்வமே வாழும் என்னும் நிச்சயமுடையவர்களின் ஒழுக்கத்திலோ, மத கிரந்தங்களிலோ 'குடி அரசு' பிரவேசிக்காது.

படிப்பு மிகுந்துள்ள நம்மவர்களுக்குள், நாம் பார்க்கிறபடி ஜாதி துவேஷத்தினால் கட்டுப்பட்டு மூடபக்தி மிகுந்து, இரக்கமில்லாமல் மதக்குறியணியும் அளவில் ஒழுக்கமென்று ஒருவாய் தண்ணீர் குடித்து, ஆசாரமென்று அங்கத்தை குறுக்கி, அடக்கமென்று முகஸ்துதி மலிந்து, ஏழைகள் விஷயத்தில் பொறுமை என்று ஓரம்பேசி, தன் வீட்டையலங்கரிக்கவும்' தன் பெண்ஜாதி பிள்ளை சந்தோஷத்திற்கும், தன் சுகத்திற்கும், எல்லா புரட்டும் செய்து, ஆஸ்திகனாகவிருந்து, வேலை ஒழிந்த நேரத்திலோ, கூலியாள் மூலியமாகவோ சாகையில் பக்கமிருப்பவர்கள் சொல்லிக்கொடுத்தோ, அரகரா வென்றோ, ராமா! ராமா! வென்றோ சொல்லிக் காசி, ராமேஸ்வரத் தண்ணீரை வாயில் ஊற்றி, உடனே , பசு பாப்பானுக்குத் தானம் கொடுத்துவிட்டு. திருப்பதிக்கோ, சிதம்பரத்திற்கோ ஒரு கட்டளை ஏற்படுத்திச் செத்துப்போனால் சொர்க்கம் வந்துவிடும், கடவுள் கூட்டிக்கொள்வார், அவன் வீடு பாலாய்ப்பொங்கும்" என்னும் எந்த சாஸ்திரத்தையும் அதிலுள்ளதையும் அது எழுதப்பட்ட விபரத்தையும் அதனால் மனிதன் ஏமாந்து நரகத்தை யடைவதையும் சொல்லவேண்டுமென்றே 'குடி அரசு' உண்டாயிற்று.

---

## "தெம்மாப்பட்டு வேளாளர்களுக்கோர் வேண்டுகோள்."

சகோதரர்களே! நம் நாட்டில் பன்னெடுநாட்களாகபார்ப்பனரின் சூழ்ச்சியால் ராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களிலும் மநு முதலிய நூற்களிலும் நாட்டின் நிலைமைக்கேற்ப பார்ப்பனருக்குச் சாதகமான சட்டதிட்டங்களை எழுதி வைத்து நம்மவர்களை வஞ்சித்து பொருள்பறித்து வயிறு வளர்த்து வரும் தந்திரங்களையும் ஒருகுலத்துக்கொரு நீதியளிக்கும் நூல்களின் புரட்டுத்தனத்தையும் கண்டு பிடித்து நம்மைப்பார்ப்பனச் சூழ்ச்சியினின்றும் விடுவிக்க சுயமரியாதைத் தலைவர்கள் செய்து வரும் பிரசாரம் "குடி அரசு" "திராவிடன்" போன்ற பத்திரிகைகள் வாசிக்கும் அபிமானிகள் நன்கு அறிந்ததேயாகும்.

அத்தகைய கொடிய சூழ்ச்சியினின்றும் விடுதலை பெற்று சுயமதிப்புடனும் சுயமரியாதையுடனும் வாழவேண்டுமானால் நம் சமூகத்தில் நடைபெற்று வரும் சுபாசுப காரியங்களைபார்ப்பனரல்லாப் பெரியோர்களைக் கொண்டு நடத்த முயல்வோமாக இம்முயற்சிக்கு ஊறு விளைவிக்காது ஆதரித்து நடத்தி வரும்படி யாவரையும் கைகூப்பி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஓர் அன்பன்.

---

## தாயகம் செல்கிறார்.

இவ்வூர் (சிங்கப்பூர்) இரகசியப்போலீஸ் இலாக்காவில் சென்ற பதினான்கு வருஷங்களாக மிகத்திறமையாக வேலை செய்து நற்பெயரெடுத்த திரு. ம. வீரப்பபிள்ளை அவர்கள் சென்ற சில தினங்களுக்குமுன் கண்ணில் உபத்திரவம் காரணமாக பென்ஷன் பெற்று தாயகம் திரும்புகிறார்கள் என்பதைக்கேட்க இச் சிங்கப்பூரிலுள்ள தமிழ் மக்கள் வருத்தமடைகிறார்கள் என்பது பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. குற்றம் செய்வதே பிறவிக்குணமாகவுள்ளவர்கள் பெரும்பான்மையோராக வதியும் இவ்வூரில் தமது சாமார்த்தியத்தினால் நற்பெயரெடுத்து வந்ததுடன் ஏழை இந்தியருக்கு, முக்கியமாக தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு,பெரும் உதவியாளராக விளங்கினார். தாயகம் சென்று தமது சாமார்த்தியத்தை விருதாவாகப் போக்காமல் கஷ்டப்படும் ஏழை மக்களுக்கு உதவியாக இருப்பாரென்று எண்ணுகிறோம்.

லெ. சோமசுந்தரம், சிங்கப்பூர்.

# திருக்குறளிலும் ஐயம்

'குடிஅரசு' 6-5-28 தேதிவெளியீட்டில்தே. திக. மு. நித்தியானந்த மடிகள் என்பவர் திருக்குறள் 'ஐய வினுக்கள்' என்ற தலைப்பின்கீழ், மெய்ச்சைவத்தை யுணர்த்தி உயிர்கள் யாவிற்குமே தொண்டாற்றப்புகட்டும் தமிழ் மறையாம் திருக்குறளில் எக்காலத்திலோ ஆரியர்களால் சிற்சில குறிப்பிட்ட இடங்களில் சில சொற்களும் எழுத்துக்களும் பொருளும் திருத்தியும் மாற்றப் பெற்றும் உள்ளதென வெளிக்காட்டப் புகுமடியவனின் திருக்குறள் ஐய வினுக்களை மட்டும் அறிவித்துக் கொள்ளுகிறேன், என்று கூறி 17 குறட்பாக்களுள் ஐயவினு விடுக்கிருர். அவர் வினுவுக்கு விடை கொடுக்குமுன் குறளைப்பற்றியும் அவர் வினுவின் நோக்கத்தைப் பற்றியும் சிறிது கூறவேண்டியிருக்கின்றது.

நண்பர் கூறுவதிலிருந்துதிருக்குறளில் ஆரியக் கதைகளுக்கு ஆதாரமான சில சொற்களும் நம்பத்தகாத பொய்ச் சொற்கள் சிலவும் கலந்திருக்கின்றதாக அவைகளை எடுத்துக் காட்டி திருத்துமுன் சில குறட்பாக்களிலுள்ள சொற்களை வினுவிப் பார்க்கின்ருர். இது அறியாமை வினுவல்ல என்பது வாசகர்களுக்குத் தெரியும். இவ்வாறே, தமிழில் உயிராயுள்ள சில நூற்களையும் முன்பின் பாராமல், ஆரிய மாற்ற மென்றும் யுக்திவாதத்திற்கும் தர்க்கத்துக்கும் ஒவ்வாதவைகளென்றும் வெறுக்கவும் திருத்தவும் முற்பட்டாமல் நமக்குத் தகுதியான நூல் வேறு எது. 1 'ஐந்தவித்தா...கரி, என்ற குறளில் இந்திரன் சாட்சி தமிழ்மொழி தத்துவத்திற்குப் பொருந்துமா? என்கிருர். ஒரு மொழிக்காகவே சில தத்துவங்கள் உண்டா? இல்லை.ஒருமொழியைப் பேசும் மக்கள் பலருள் ஒரு சாரார் சிலவற்றை நம்புவர்; சிலவைகளை நம்பார். தமிழ் மொழியைப் பேசுவார் எல்லாரும் எக்காலத்திலும் ஒரே கொள்கையுடையவர்கள் என்று கூற முடியுமா? ஒரே காலத்தில் ஒன்றை நம்பலாம் அதையே மற்ருெரு காலத்தில் நம்பாமலும் போகலாம் நண்பர் வினுக்களைப் பார்க்கும்பொழுது திருக்குறளே வேறு திருத்தி எழுதவேண்டிவரும் போலிருக்கிறது. ஆசிரியருக்கு உடன் பாடில்லாதவையாயிருப்பினும் அக்காலத்து மக்கள் பெரும்பாலோர் நம்பும் ஒன்றையே உதாரணங்காட்ட வேண்டியுமிருக்கும்.

2. 'மடியிலாமன்னவன் எய்தும் அடியளந்தான்ருய அயதெல்லா மொருங்கு' இதில்-சோம்பலில்லாத முயற்சியையுடைய ஒரு அரசன் எல்லாத் தேசங்களையும் ஒருங்கு அடைய முடியும்-என்பது கருத்து. இறைவனுக்கு மூன்றடி என்றும் மூன்றடியாக அளந்த உலகு என்று அதன் பரப்பும் பெருமையும் காட்டவேண்டி இதைக்கூறினுரே யன்றி வேறில்லை. இதை விடுத்து 'அரசனுக்குக் கிடைக்க வேண்டிய பாக்கியம் மூன்றிலொன்று தானுகிட்டும்' என்று ஏதோ பொருள்கூறிக் கொண்டு'இல்லவே இல்லை படுமோசம்' எனகிருர்

3. கல்லாதான் சொற்கா முறுதல் என்ற பாவில் வரும் முலை என்றபதம்கொச்சை இது சுத்த இழிவு இதனைத் தெளிவாய் விளக்குக,என்ெருரு வினு? இந்த முலையென்ற சொல்லை பழந்தமிழ் நூற்களில் மிகுதியுங் காணலாம் 'ஆன் முலையறுத்த' 'பொல்லாவறு முலை' என்றெல்லாம் பலவிடத்துங் கூறியுள்ளார்கள் இப்படிப்பட்ட கொச்சைப்பதங்களுக்கு இடக்கரடக்கல் என்ற விதிப்படி சிறிது மறைவுபடுத்தி பிறதி பதங்கண்டே கூறுவது என்பது தெளிவாகும். அன்றியும் இச்சொல்லே அக்காலத்து இடக்கரடக்கல் என்னும் மறைவுச் சொல்லாகவேயிருந்துஇப்பொழு அந்த வார்த்தைஎல்லாரிடமும்பவிரயபொழுது கொச்சையாகக்காணலாம். நண்பர்இதற்குப்பொருள்கூறும் பொழுது வேண்டுமானுல் கொச்சையில்லாத மறைவுச்சொல்ஒன்று கண்டு கூறலாமேயன்றி அந்த உவமானத்தை ஒரு நாளும் மாற்றமுடியாது.

5 'பொய்மையும்வாய்மையிடத்து நன்மைபயக்குமெனின்' என்பதில் 'பொய்மை' உண்மையை உள்ளபடியே சொல்லவேண்டுமென்ற அவசியத்தை வற்புறுத்திக் கூறிவிட்டு விதிவிலக்காக சில சமமங்களில் கூறும் பொய்யானது குற்றமாகாது என்றும் காட்டுகிருர். பொய் மெய் யென்ற பாகு பாடானதுபிறருக்குத் தீமை விளைப்பனவாயின் பொய்யும் மெய்யோ டொக்கும்,மெய்யும் பொய்யோடொக்கும் என்பதும் பொய்யோமெய்யோ அது பிறருக்கு (பொது மக்களுக்கு நன்மை பயப்பதாயிருக்க வேண்டுமென்பதும் ஆசிரியர் கருத்து. அன்றியும் நித்தியானந்த மடிகளுக்கு, அந்தணர் அறுதொழில் ஊழ் இருமை மேலுலகம் முதலிய சொற்களே பிடிக்கவில்லை. திருககுறளாசிரியர் தம்நூலில் அந்தணர் என்போர் யார் என்பதை நன்கு விளக்கியிருக்கிருர். தற்காலத்தில் நிலைத்து நிற்கும் அந்தணர் வேறு; அவர் சொல்லும் அந்தணர் வேறு. அந்தணர் என்பவர் வழி வழி வரும் ஒரு ஜாதியாரல்லர் என்பதும் தனக்கென வாழா பிறர்க்குரியாளர் என்பதும் அவர் கருத்து. அந்தணத்தன்மை யென்பது எல்லா உயிர்க்கும் அன்பு கொண்டு ஒழுதுவதென்றும் பொது மக்கள் சமஉரிமையடையும் பொருட்டுத் தன்னலங்களை நீத்தவர் அவர்கள்என்றும் உலகம் ஒழுங்குடன் நடைபெற்று வருவதற்கும் மக்கள் சமாதானத்துடன் வாழ்வதற்கும் அவர்களே முதற்காரணம் என்றும் நீத்தார்பெருமையைமுதலில் வெளியிடுகிருர் அவர்காலத்திலே நடந்த வேள்வியென்னும்வீண் சடங்கைசிற்சிலஇடங்களில் இழித்துக் கூறுகிருர் இவரது கொள்கை கடவுளுண்டென்பதும் கடவுளோடு பொருந்தி வாழு மின்பமொன்றுண்டென்பதும் முற்பிறப்பு, மறுபிறப்பு, பழவினை ஊழ் எழுபிறப்பு (மரணத்துக்குப்பின் எழுபடிகள்) உண்டென்பதும் மனத்துக் கண் மாசிலனுகுதலும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல் நான்கும் இழுக்காயின்றது. அறம் என்பதும் ஒரு மகன் இவ்வறங்களை மேற்கொண்டொழுகுவானுயின்இன்ப நிலையையடையலாமென்பதும் அவர் கொள்கைஇவ்வறங்களினின்றும்வழுகுவானுயின் துன்ப நிலையையடையக்கூடுமென்பதையும் விளக்கிக்காட்டுகிருர். மக்களுள் ஏற்றத்தாழ்வின்றி ஒருவருக்கொருவர் அன்புடையவர்களாயும் உபகாரியாயும்சமாதானத்துடனும்நல்வாழ்வு வாழ வேண்டு மென்பதற்காகவே மக்களுக்கு இயல்பாகவுள்ள சில குணங்களை அதிகப்படுத்திக கொள்ளவும் சில குணங்களைக் குறைத்துக் கொள்ளவும்வேண்டு மென்பதைப் பாகு படுத்திக் கூறுகிருர். தன்மதிப்பு,சுயமரியாதை,வீரம், அறம் முதலிய உயர் குணங்களை யுடையவரே மக்களென்றும் இவையில்லாதவர்கள் கயவர்கள் என்றும் அவர்களை வேறு பிரித்துக் காட்டுகிருர். நண்பர் மேற்கொள்ளும் சுயமரியாதை இயக்கத்துக்கு வேண்டிய தகுந்த உதாரணச் செய்யுட்கள் எவ்வளவோ அந்நூலிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். நண்பருக்குப் பிடிக்காத பதங்களை எந்த இடத்தில் எதற்காக உபயோகிக்கிருர் என்று பாராமல், கொல்லன் மீது கோபங்கொண்ட ஒருவன் ஔவையார் கொல்லனே வேண்டாமென்று கூறியிருக்கிருரெனறு உதாரணமாக "நன்றி ஒருவர்க்குச் செய்தக்காலன்னன்றி யென்று தருங்கொலெனவேண்டாம்" என்று சொன்ன கதைபோலிருக்கிறது.

திருக்குறளை முற்றும் படித்து அவரது கொள்கை யென்ன? அவர் எதை மறுக்கிருர்? எதை ஆதரிக்கிருர்?எதை உலகத்தில் மக்களிடத்து பரப்ப வேண்டு மென்று கருதுகின்ருர்?நூலின் பாகுபாடு, என்பவைகளையும் தானேரிடத்துக் கூறியதை மற்ருேரிடத்திலும் வற்புறுத்திக்கூறுதல் முதலிய நுட்பங்களையும் கவனித்துப் பாராமல் தானேதோ ஆரியக் கலப்படம் என்று சில சொற்களையும் சில பாக்களையும் திருத்தி எழுதப்புகுவது அறிவுத்தன்மையாகாது. நண்பர் தானெடுத்துக் காடடப்புகும் குறட் பாக்களை தனது முழு அபிப்பிராயத்துடன் எழுதுவாராயின் மறுமுறை விரிவாக ஒவ்வொன்றுக்கும் தகுந்த ஆதாரங்காட்டி எழுதுகின்றேன்.

மீ. குமாரசாமி,
கொறுக்கை.

---

## பார்ப்பன வரிச்சனியனைத் தொலைத்தேன்.

பார்ப்பனீயத்தைஒழித்துவருபவர்களில்நா னும் ஒருவன். மதுரையில்நடந்த பத்தாவது பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் போது நான் சுயமரியாதை உணர்வு பெற்று அவ்வருடம் வந்த என் காலஞ் சென்ற தகப்பனுர் இருளப்பநாடார்அவர்களின் வருடாந்திரத்திதியின் போது திதி தினத்தைச் சொல்லவந்த பார்ப்பனப்புரோகிதனை "என் தகப்பனுரை வணங்கவும் அவர்இறந்த தினத்தைக் கொண்டாடவும் எனக்குத் தெரியும் தரகருக்கு வரி செலுத்த வேணடுவதில்லை" யெனச் சொல்லி அனுப்பி விட்டேன். இது கேட்ட பாழும் பார்ப்பனீயத்திலே ஆழ்ந்திருந்த என் பெரியோர்கள் நான் எவ்வளவோ தததுவங்களை எடுத்துக் கூறியும் ஒரே பிடிவாதமாக என் நன் முயற்சியைத் தடுத்துப் பாழும்பார்ப்பனீயத்துக்குள்ளானுர்கள்.

பின்னர் என் பெரியோர்கள் என்னுல் கொடுக்கப்பட்ட சுயமரியாதை தத்துவங்கள் நிறைந்த புத்தகங்களையும் எனது அரும்பெரும் 'குடி அரசை' யும் வாசித்து வந்ததின் பயனுக அவர்களிடம் நிறைந்திருந்த பாழும் பார்ப்பனீயம் அறவேதகர்த் தெறியப்பட்டது. சென்ற வருஷம் போலவே கொள்ளை கொள்ளலாம் என வந்த பார்ப்பனப் புரோகிதன் இந்த வருஷம் வந்த வழியே அனுப்பப்பட்டான். நானும் என்சுற்றத்தார் யாவரும் நிகழும் விபவ வருஷம் சித்திரைமாதம் 10 ம் தேதி (22-4-28)ல் என தகபபனுரின் திதி தினத்தன்று கடவுளையும் என் தகப்பனுரையும் பூஜித்துவறைச் சிறவர்களுக்கு தேங்காய் பழம் கொடுத்து பந்துக்களுடன் சில ஏழைகளுக்கு அன்னமிட்டு நாங்களும் உண்டு கொண்டாடினுேம்.

க. இ. எக்குனி மதுரை.

## மலாய் நாட்டில் பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

1 மூவார் என்னும் நகரில் வசிக்கும் ஸ்ரீமாந் ரு. ம. தண்ணிமலை செட்டியார் காலஞ்சென்ற தம் தாயின் ஞாபகார்த்தமாக இம்மதி எட்டாம் நாளன்று பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்து இருபது ஏழைகமக்ளுக்கு அன்னமளித்தார்.

2 ஸ்ரீ மூரு சொக்கலிங்கம் செட்டியாரும் காலஞ் சென்ற தமது தகப்பனுரின் ஞாபகார்த்தமாக இம்மதி எட்டாம் நாளன்று பார்ப்பனபுரோகிதத்தை ஒழித்து சுமார் நாற்பது ஏழைகளுக்கு போஜனம் அளித்தார்.

ஓர் சந்தாதாரர்.

## பார்ப்பனீய மொழிந்த திதி.

மலாய் நாட்டில் தைப்பிங் நகரில் பிரபல சுருட்டுக்கடை ஸ்ரீமான் கி. சு. க. வடிவேல் பிள்ளை யவர்கள் தம் தகப்பனுர் வருஷாந்திர திதியை சித்திரை மாதம் 14-தேதியில் பார்ப்பன புரோகிதத்தை ஒழித்து சுமார் 50 ஏழை சகோதரர்களுக்கு அன்னமளித்து பூர்த்தி செய்தார். கோதண்டபாணி

# தமிழரின் தெய்வ வழிபாடு.

(பு. நே. ரா.)

தமிழர் நிலை வரவர மூடநம்பிக்கைகளி லாழ்ந்து போய்க்கொண்டேயிருக்கின்றது. அவைகளை போக்கிவிடவேண்டுமென முன்வரும் சீர்திருத்தக்காரர்கள் பாமர மக்கள் பலரால் இகழப்படுகிறார்கள். ஒரு காலத்தில் தமிழர்கள் உருவ வழிபாடு யாதென்பதையே அறியாதிருந்தனர். தங்களின் தெய்வ வழிபாட்டை இயற்கையோடு சேர்த்து வணங்கி வந்தார்கள். கடவுள் ஒன்று உண்டெனவும், அஃது உருவமற்றதெனவும் கண்டு பிடித்தவர்கள் தமிழர்களே யாவர். அத்தகைய நுண்ணறிவு வாய்ந்த தமிழர் நிலை இன்று எவ்வாறிருக்கின்றது? தமிழ் நாட்டில் தெருத் தெருவுக்கும் மூலை மூலைக்கும் விக்கிரகங்கள் ஆயிரக்கணக்கான பெயர்களுடன் கிளம்பி விட்டன. அவ்விக்கிரகங்களுக்கு அவைகள் உண்டாவதற்குக் காரணமாயிருந்த புராண இதிகாசங்களின்படி உற்சவாதிகள் நடைபெறுகின்றன. லட்சக்கணக்கான நகைகள் அவ்விக்கிரகங்களுக்குப் பூட்டப்பட்டு மக்களின் உள்ளத்தில் பேராசையை உண்டு பண்ணச் செய்யப்படுகின்றன. வேசிகளின் நடனங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இன்னம் பல அக்கிரமங்கள் நடத்தப்படுகின்றன. "அந்தோ! இவ்வளவுதானா? மடைப்பள்ளிகள் நிறைந்து விட்டிருக்கின்றன. அவைகளில் நன்றாகத்தின்று விட்டு வீண் வார்த்தையாடும் வம்பர்கள் நிறைந்து விட்டனர். இத்தகைய அவகேட்டுக்கு நம் நாடு எப்படி யாரால் உள்ளானதென அறிய வேண்டுமல்லவா?

சுமார் 5,000 ஆண்டுகட்கு முன்னர் உலகெங்கும் ஜனங்கள் பயங்கரமான பலபல உருவங்களை வணங்கி வந்தனர். எகிப்து, அரேபியா, இத்தாலி, கிரீஸ், ஆப்பிரிக்கா, முதலிய தேசங்களில் மிருக உருவங்களும் வணங்கி வரப்பட்டன. இவ்வுருவ வழிபாட்டினால் ஆங்காங்கு பயங்கரமான மனித பலி போன்ற பலிகளும் நடந்தேறிக் கொண்டிருந்தன. இன்னும் வாய்விட்டுக் கூறமுடியாத பற்பல கொடுமைகளும் நடந்தேறின. அதே போன்று வட இந்தியாவில் வந்து குடியேறின ஆரியர்கள் (காகேஷியாவிலிருந்து பிரிந்து இந்தியாவிற்கும் மற்றும் மேனாடுகளுக்கும் சென்றவர்கள்) தம் வழக்கத்தை இந்தியாவில் கொண்டு வந்து புகுத்தி விட்டனர். ஆரியர்கள் முதன் முதலாகத்தமக்கு எவையெவை ஆச்சரியமாகத் தோன்றினவோ அவைகளையெல்லாம் தொழ ஆரம்பித்தனர். சூரியனை, சந்திரன், காற்று, நெருப்பு, மரங்கள் முதலியன அவர்களுக்குத் தெய்வமாயின. நாளடைவில் பாம்பு, எருமை, கருடன், போன்றவைகளைத்தொழஆரம்பித்துவிட்டார்கள். இந்தியாவில் பூர்வீகக் குடிகளைத் தம் வசப்படுத்தக் கருதித் தங்கள் யுக்திக்குத் தோன்றிய பல வேத புராண இதிகாசங்கள் செய்தனர், அவைகளில் அநேக தெய்வங்களின் பேர்களும் அவைகளுக்கு உற்றார் உறவினர்களும் ஏற்படும்படி செய்தனர். இவ்வாறே நாளடைவில் ஆயிரக்கணக்கான தெய்வங்களையும், கட்குடித்தல், புலாலுண்ணல், விபசாரஞ்செய்தல் போன்ற தீச்செயல்களையும், மந்திரங்கள், தந்திரங்கள், என்ற பெயரோடு தம் புத்தகங்களில் எழுதி வைத்துக் கொண்டனர்.

அவர்கள் எழுதிவைத்த புத்தகங்களில் திருடன் தனக்கு சாதகமாகவும், இன்னும் பலபலர் தத்தமக்குச் சாதகமாகவும், பல சுலோகங்களை அமைத்து எல்லோருக்கும் அவைகள் உதவுமாறு கருணைபுரிந்தனர். இவ்வளவு ஆபாசங்களோடு கூடிய புத்தகங்களை பாமரமக்கள் அக்காலத்தில் ஏற்றுக் கொண்டிருந்தனர். அவர்களின் ஆர்பாட்டங்களினிடையே தமிழ் மக்களின் நிலைமை கவனித்தால் மிக நேர்மாறாயிருப்பது நன்கு விளங்கும். தமிழ் நாடு அவ்வமயம் மிகப்பரந்திருந்தது. இப்போது அப்பகுதிகளைச் சமுத்திரம் கொண்டு விட்டது. தமிழர்களுக்கென தனி வேதங்களிருந்தன. அவைகளில் அரிய பெரிய உபதேசங்கள் நிறைந்திருந்தன. தமிழர்கள் இலகுவில் ஆரியர்களின் மோசங்களுக்கு இணங்கி விடவில்லை. அநேக முறை அவர்களை எதிர்த்திருக்கின்றார்கள். அப்படி எதிர்த்து நின்ற காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து ஆரியர்களுக்குக் கிடைத்த மேற்கண்ட நான்கு மறைகளினின்றும் கூர்ந்து எடுக்கப்பட்டதே இன்றுஞான உபநிஷத்துக்களாய்வேதங்களில் இருந்து வருகின்றன. இவர்களின் இத்தகைய போராட்டத்தைக் கண்ட ஆரியர் மெல்லமெல்லத் தமிழை நன்றாகப்பயின்று தமிழிலுள்ள அநேக நூல்களைத்தம் மொழியில்மாற்றியும் நாளடைவில்தமிழர்களுடன் சிநேகமாகித் தமிழர்களிடைதங்கள் சூதைப் பரப்பியும்வந்தனர். அதன்பயனாகவே தமிழர் நாளடைவில் தம் உயரிய கொள்கைகளைமறந்து தம்மிடமுள்ள மாணிக்கங்களுக்கொப்பான கலைகளை யறியுமாற்றலில்லாது அறிவிழந்து வந்தனர். அதற்கேற்றாப் போல் கசடர்களான ஆரியப பார்ப்பனர் தங்கள் வேதங்களைப் பார்ப்பது பாபமெனவும் பார்த்த கண்களையும் கேட்ட காதுகளையும் உச்சரித்த நாக்கையும் அறுத்தெறிய வேண்டுமெனவும் எழுதி வைத்து விட்டதோடு அரசாங்கங்களையும் அவர்கள் கவர்ந்திருந்தனர். அதன் பயனாக பாமர மக்கள்கடவுள் என்பது என்னவென்றே உண்மையில் அறியாது பலவிதமான மூட பழக்க வழக்கங்களில் உழன்று வந்தனர்.

சில விடங்களில் அசுத்தத்தின் காரணமாக அம்மை நோய் அணுகி விட்டால் எங்கும் சிறிய அம்மை, பெரிய அம்மை பயிரம்மை, கோணியம்மை, சேணியம்மை, பிடாரியம்மை, தண்டு மாரியம்மை அங்காளம்மை, காளியம்மை, குண்ணத்தம்மை, துலுக்காணத்தம்மை போன்ற அர்த்தமற்ற பயங்கர உருவவழிபாடுகள் கிளம்பிவிடுகின்றன. அவைகளின் பெயரால் ஆயிரக்கணக்கான உயிர்க்கொலைகள் நிகழ்த்தப்படுகின்றன, அவைகளின் பக்தர்களும் பிரதிநிதிகளும் (மருளாடிகள்) சிசா சிசாவாக மதுவையும சாராயத்தையும் குடித்துவிட்டு விபரீதமுறையில் அம்மனை வருணிப்பார்கள். பேதை மக்கள்பயபக்தியோடு அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். எப்போது காளி நம்மைக் கொன்று விடுமோவென்ற ஏக்கமும் பீதியும் நடுக்கமுமே மனத்தில் ஊன்றியிருக்கும். இந்நிலையில் குடித்து வெறித்திருக்கும் மருளாடிமேல் 'சாமி' வந்து விடும். அவைகள் துஷ்டதேவதைகளானபடியால் (அவர்கள் சொல்லிகொள்ளும் விதம்) கோபத்தோடே வரும். அப்போது குறைந்தது ஒருகோழியாவது பலிகொடுக்கவேண்டும். அதன் இரத்தத்தை உறிஞ்சின பிறகே அவ்வம்மன்கள் சாந்தமடைந்து நோயைப்போக்க முயற்சிப்பதாக வாக்கொடுத்துவிட்டு மலையேறி விடும். இன்னும் சில இடங்களில் இதைவிடக் கோரமான வழிபாடுகளும் நடைபெறுகின்றன. இவை போக,

ஒரு படி உயர்ந்தவரெனக் கூறிக்கொள்ளும் சைவ வைஷ்ணவர்களின் தேவாலயங்களையும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டாலோ அவைகள் கேவலம் நாசிகளினில்லாகவும் திருடர்களின் குகையாகவும் போலி பக்தர் நடமாடும் சத்திரமாகவும் இருக்கின்றன. அங்கு கொடூரமும் துவேஷமும் வஞ்சகமும் போலித்தனமுமே நடமாடுகின்றன. சைவக் கோயிலின் குருக்கள்வைஷ்ணவக்கோயில்பட்டாச்சார்யனிடம் போட்டி போட்டுகொண்டு இருசாராரும் ஒருவருக்கொருவர் தத்தம் விக்கிரகங்களை ஆயிரக்கணக்கான பணம் பெறும் இரவல் நகைகளைக் கொண்டு சிங்காரிக்கிறதும் வெளியில் நாயின் நடனத்தோடு அவ்வுருவம் ஊர்வலம் வருகையில் யாருடையசாமி நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது?" என்று பஞ்சாயத்து வைத்து முடிவு கேட்கிறதும். யாகங்கள் செய்து ஆடுகளைக்கொன்று மாமிசமுண்கிறதும் இன்னும் இவை போன்ற வேடிக்கையானசெய்கைகள் இன்றும் நடைபெற்று வருவதை நேயர்கள் அறிந்திருந்திருக்கலாம்..

அவை போக, மதக் குறிகளிடுவதிலோ பெருந் தொல்லை. வைஷ்ணவர்களிலே வடகலைக்கும் தென் கலைக்கும் போராட்டம். சைவரிலே ஸ்மார்த்தர்களுக்கும் வீரசைவர்களுக்கும் போட்டி. வைஷ்ணவர்களுக்கும் சைவர்களுக்கும் பெரும் போராட்டங்கள் நிகழ்ந்துகொண்டே யிருக்கின்றன, இதன் காரணமாய்ச் சிற்சில சமயங்களில் கொலைகளும் நிகழ்ந்து விடுதல் உண்டு. அதற்குரிய காரணம் என்னவென்று தெரியுமா? கடவுள் அணிந்திருந்தது எக்குறி என விளங்காமலிருப்பதே இஃது எவ்வளவு பேதைமையான செயல் என்பதை அறிவாளிகள் உணராமலில்லை, கடவுள் எல்லோருக்கும் உரியவர்; அவர் சர்வமத சித்தாந்தி; அவருக்கு வடகலை, தென்கலை, விபூதி, உருத்திராக்ஷ மாலை பணிதல் போன்ற குறிகளொன்றும் கிடையாது என்பதை இப்பேதை மக்கள் என்றுணரப் போகின்றனர்' தற்போது நடைபெற்றுவரும் அநேகமதச்சண்டைகள் (மதக்குறியினால் விளைபவைகள்) தொலைய வேண்டுமானால் வேற்றுமைப் படு-

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

## திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள்

அக்கிராசனத்தின் கீழ் 1928ஹு மேமீ 19௳ பூவிருந்தவல்லியில் கூடிய செங்கல்பட்டு ஜில்லா வடபாக ஆரம்பப்பள்ளிக்கூட உபாத்தியாயர் மகாநாட்டைத் திறந்து வைத்தபோது செங்கல்பட்டு ஜில்லா போர்டின் அக்கிராசனாதிபதி

திரு. ராவ்பகதூர்

## ம. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள்

நிகழ்த்திய

## வரவேற்பு சொற்பொழிவு.

சகோதர சகோதரிகளே,

இன்று உங்களை இங்கு காண நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கு கூடியிருக்கும் உபாத்தியாயர்களுக்கும் மற்றோருக்கும் என் நன்றி உரித்தாவதாக.

எதற்காக இன்று நான் உங்களை இங்கு கூட்டி இருக்கிறேன் என்று நீங்கள் எண்ணலாம். நான் செங்கற்பட்டு ஜில்லா போர்டின் அக்கிராசனம் வகிக்க ஆரம்பித்து நாலு வருஷகாலம் ஆகிறதெனினும், இப்பொழுதே முதல் தடவையாய் மகாநாடு கூட்டுவித்து உங்களை ஒன்று சேர்த்து உங்களிடையில் தோன்ற வேண்டுமென்ற கருத்துக்கொண்டே தான் உங்களை கூட்டுவித்தேன்.

இதுவரையும் உங்களைப்பற்றி நான் சிந்தனை இல்லாமல் இருக்கவில்லை. இதை நம்புங்கள். உங்களிடையில் உங்கள் வாழ்க்கை நிலையைப்பற்றி அதிருப்தி தோன்றியிருக்கிறது என்பதைப் பலமுறையும் கேட்டிருக்கிறேன். சேவைக்குத் தகுந்த வெகுமதியில்லையென்ற குறை உங்களுக்குண்டு. ஆனால் உங்களில் சிலர் சில சமயங்களில் சம்பளம் உயர்ந்து மேல் போவதைப் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களைவிட அவர்கள் எவ்விதத்திலும் சிறந்தவர்களல்ல என்றும் எண்ணுகிறீர்கள். அதோடு உங்களுடைய தகுதியை அதிகாரிகள் மெச்சாமல் போவதைப்பற்றிய சங்கடமும் உங்களுக்குண்டு. எஜமானனின் ஓர் வஞ்சகத்தால் மேல் போகிறார்கள் என்று சொல்லி ஆறுதல் அடைகிறீர்கள். ஆனாலும் உங்கள் நெஞ்சில் புண் ஆறினபாடில்லை. இவ்வித நிலையில் உள்ளோர் ஒருசாரார்.

இன்னும் சிலருக்கு வேறுவித சங்கடமும் இருக்கிறது. அதாவது அவர்கள் மேல் நோக்கும் மனப்பான்மை உடையவர்கள். தற்காலம் அவர்கள் வகிக்கும் உத்தியோகத்துக்கு மிஞ்சின பக்குவம் உடையவர்களாகத் தங்களை கருதிக்கொண்டிருப்பவர்கள். சிறந்த தலைமை வாய்ந்தவர்கள் காலக்கொடுமையால் இவ்வித நிலையில் இருக்கிறதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு பாடத்திட்டத்தில் மனம் சலிக்கிறது. மேலும் மேலும் ஒரேவித பாடங்களைக் கற்பிக்கவேண்டியிருக்கிறது. நிராத நிலைமையில் வெயிலின் கொடுமையைச் சகித்துக்கொள்வது போலவே வேலையின் கொடுமையையும் சகித்துக்கொள்ளுகிறார்கள். அரிய காரியங்களைச் சாதிக்கவல்ல ஆற்றல் வாய்ந்தவரென்ற உள்ளக்கருத்துண்டு. ஆனால் மேல்போக வழி தெரியாமல் தயங்குகிறார்கள். திறமையைக் காட்ட மிகவும் ஆசை கொள்ளுகிறார்கள். எவ்வித ஆற்றல் படைத்தவரென்று பிறர் அறிய மிகவும் விரும்புகிறார்கள். பிறருக்கு உபகாரமாய் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்களுக்காக நான் மிகவும் இரங்குகிறேன். அவர்களுடைய பரிதாப நிலைமையை நன்குணர்கிறேன். உங்களில் பலரும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களென்றே எண்ணுகிறேன். விதிவசமென்றெண்ணி எவ்விதத்தும் மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு சொல்ல வரவில்லை. அவர்களுக்கு அபயம் அளிக்கின்றேன்; ஊக்கம் கொடுக்கின்றேன். முன்னேறிச்செல்லும் மார்க்கம் ஒன்றிருக்கிறது. தம் திறமையைக் காட்ட வழி ஒன்றுண்டு அவர்களுடைய வேலை அங்கீகரிக்கபடும். காலக்கிரமத்தில் வேலைக்குத் தகுந்த வெகுமதியும் அடையக்கூடும். இம்மட்டல்ல வாணாளை வீணே போக்கவில்லையென்ற மன உறுதியும் அவர்களுக்கு ஏற்படும். வாழ்க்கையின் பயனை அடைந்த சமாதானமும் உண்டாகும்.

பாழும் பணத்தை மாத்திரம் கருதி பாடுபடாதீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுவேன். உங்கள் தொழிலின் சிறப்பை எளிதில் அளந்தெடுக்க முடியாது. பண்டுதொட்டு அரும் பெரும் மகரிஷிகளும் உபாத்திமைத் தொழிலையே தழுவி நின்றனர்; ஏனெனில் அத்தொழில் மூலமாகவே பொது மக்களுக்குத் தம் கடமையைச் செலுத்த முடியுமென்று கருதினர். மெய்ஞ்ஞானிகளும் உபாத்திமைத் தொழிலையே புரிந்துவந்தனர்; ஏனெனில் அத்தொழில் அவர்களுக்குச் சாந்தி அளித்தது. இன்னும் துறவிகள் உபாத்திமைத் தொழிலையே நடத்துகிறார்கள்; ஏனெனில் தம் தியாகச் சித்தத்தை நிரூபிக்க அதுவேவழியாக நிற்கிறது. தியாகச் சித்தமே உங்களுக்கும் துணையாய் நிற்கவேண்டும். அதுவே வாழ்க்கையில் ஆதனப்பற்றை ஏற்படுத்தும். அதுவே உங்களைப் பாமரர்களினின்றும் பிரித்து வேறான நிலைமைக்கு உயர்த்தும்; பொது மக்களைவிட உயரிய நிலைமையில் உள்ளோம் என்ற உணர்ச்சி உங்களுக்கே தோற்றச்செய்யும்; அல்லல் அகற்றும்; தொல்லையிலிருந்து உங்களை விடுவிக்கும்; உங்களைவாழ்க்கையில் இன்பறச் செய்யும்.

அன்றேல், நீங்கள் திரட்டும் அற்பபொருளுக்கு அடிமைகளென நீங்களே சம்மதித்தவராவீர்கள். வெகுமதிக்குத் தக்க அளவில் வேலையை அளந்து செய்வீர்கள். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் உங்களை நன்கு அறிந்து கொள்ளுவார்கள். உங்கள் தரத்தைத் தெரிந்து கொள்ளுவார்கள். அவர்களை நீங்கள் ஏமாற்றமுடியாது. உரிய விதத்தில் உங்களை நடத்தவும் ஆரம்பிப்பார்கள். பணத்தின் பெருமையை நான் மறுக்கவில்லை. பணம் வாழ்க்கையில் சில சௌகரியங்களை அளிக்கும். ஆனால் பணமே வாழ்க்கையின் முடிவான நோக்கமாகுமோ? அன்று. தியாகச் சித்தத்தை வளர்ப்பீர்களானால் மக்கள் எவ்விதம் உங்களை மேன்மைப் படுத்துவார்களென்பதையும் அது இல்லாதவிடத்து எவ்வளவு கேவலமாகக் கருதுவார்களென்பதையும் உன்னிப்பாருங்கள். தியாகச் சித்தம் இல்லாவிட்டால் நீங்கள் தப்பு வழியில்செல்லுவதாகவேகருதுவேன். நாளடைவில் வாழ்க்கையில் பற்றறும். உங்களில் சிறந்தவர் உங்களை அப்புறப்படுத்தும் காலமும் வரலாம். யோசிக்கும் வேளையில் உங்களுடைய நிலைமை கேவலமானதல்ல. உங்கள் தகுதிக்குத்தக்க நிலைமையிலேயே இருக்கிறீர்கள். திருஷ்டி தோஷமே உங்கள் மயக்கத்துக்குக் காரணம், மற்றவர்கள் உங்களைவிட மேலான நிலைமையில் இருப்பதாக எண்ணுகிறீர்கள். உங்கள் நினைவில் அல்லாமல் உண்மையில் அவர்கள் அவ்வித நிலைமையில் இல்லை. உங்கள் எண்ணம் தப்பானஎண்ணம். எண்ணித் துன்புறுகிறீர்கள். அதற்கு நான் என் செய்வேன்? மக்களிடையில் இன்பமும், துன்பமும் சம அளவிலேயே பங்கிடப்பட்டு இருக்கிறது. விஷயங்களின் உண்மையான தன்மையை நன்கு உணர்ந்தால் மாத்திரம் உபாத்திமைத் தொழிலை நடத்த உரியவராவீர்கள்.

தியாகச் சித்தமே உங்களுக்கு வாழ்க்கையில் வழிகாட்டிச் செல்லவேண்டும். தியாகச் சித்தமே உங்களுக்கு ஆஸ்பதமாய் நிற்கும். ஊராருடன் ஒத்து வாழுங்கள். ஊரார் நலமும் உங்கள் நலமும் ஒன்றெனக் கருதுங்கள். அவர்களுடைய இன்பதுன்பத்தில் நீங்களும் ஒரு பங்கு அனுபவியுங்கள் ஒதுங்கி நில்லாதீர்கள். வீண் கர்வம் கொள்ளாதீர்கள். ஊரைவிட்டு வேறானவர் என்ற எண்ணம் உங்களுக்கு வேண்டாம். பிறரைவிட நீங்கள் சிறந்தவரெனத் தோன்ற இடங்கொடுக்க வேண்டாம். அவர்களுடன் சம நிலைமையில் நில்லுங்கள். வேண்டுமானால் அவர்களுடைய நிலைமைக்கு உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். அவர்கள் உங்கள் நிலைமைக்கு உயர்ந்து வருவார்கள். இது ஒரு சிறந்த குணம். இதுவே உண்மைச்சேவையின் அறிகுறி. உலகம் ஒப்பும் பெரியாரிடம் இக்குணம் நிறைந்திருக்கிறது. எத்தகைய சீலம் வாய்ந்தவருடனும் ஒத்த நிலைமையில் பழகும் இயல்பு கெய்சருக்கு உண்டென்று சொல்லுவார்கள். நெப்போலியனும் அப்படியே. நம

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

## செங்கல்பட்டு ஜில்லா போர்டு

# ஆரம்ப ஆசிரியர் மகாநாடு.

## திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரின்

# அக்கிராசனப் பிரசங்கம்.

செங்கல்பட்டு ஜில்லா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு பூந்தமல்லி கண்டோண்மெண்ட் கட்டடத்தில் மே மாதம் 19 தேதி பகல் 2-30 மணிக்கு ஈரோடு திரு. ஈ. வெ ராமசாமி நாயக்கரின் தலைமையின் கீழ் கூடிற்று. மகாநாட்டிற்கு சுமார் 1000 உபாத்தியாயர்களும், உபாத்தினிகளும், மற்றவர்களும் தாலுக்கா போர்டு மெம்பர்களும், ஜில்லா போர்டு மெம்பர்களும் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் திரு நாயக்கரும், திரு கண்ணப்பரும், திரு தண்டபாணிப்பிள்ளையும் சென்னையிலிருந்து பகல் இரண்டு மணிக்கு பூந்தமல்லி வந்து சேர்ந்ததும திருவாளர்கள் ஜில்லா போர்டு தலைவர் எம். கே. ரெட்டியார் அவர்களும், ஜில்லா போர்டு உபதலைவர் ஜெயராம் நாயுடுகாரு அவர்களும், சைதாபேட்டை தாலுக்கா போர்டு தலைவர் சண்முகம் பிள்ளை அவர்களும், திருவள்ளூர் தாலுக்கா போர்டு தலைவர் பி. கே. ராமய்யா நாயுடு அவர்களும், ஜில்லா போர்டு மெம்பர்களும் தாலுக்கா போர்டு மெம்பர்களும், ஆசிரியர்களுமாக வரவேற்று மேளவாத்தியத்துடன் மகாநாட்டுக் கட்டடத்திற்கு ஊர்வலமாக அழைத்து சென்றார்கள். மகாநாட்டுக் கட்டடம் உட்கார இடமில்லாமல் வெளியில் கூட நிற்க வேண்டிய தாய் நேரிட்டு விட்டது. விஜயம் செய்தகனவான்களில் முக்கியமானவர்கள்:—திருவாளர்கள்.

ராவ்பகதூர் எம். கே. ரெட்டியார் அவர்கள் ஜில்லா போர்டு பிரசிடெண்ட், ராவ்பகதூர் செல்வ ரங்கராஜு அவர்கள் ரிட்டயர்டு அக்கிரிகல்சர் டிப்டிகலெக்டர் ஜில்லாபோர்டு மெம்பர், ராவ்சாகிப் மதுரைப்பிள்ளை அவர்கள் ஜில்லா போர்டு மெம்பர், ராவ்பகதூர் எல். சி. குருசாமி அவர்கள் எம். எல். சி, ஜில்லா போர்டு மெம்பர், கான்பகதூர் அப்துல் ரஜாக்சாயபு அவர்கள் எம். எல். சி. சைதாப்பேட்டை சேர்மென், ஜில்லா போர்டு மெம்பர், ரெவரெண்டு சிம்க்டன் அவர்கள், டாக்டர் பெருமாள் அவர்கள் ஹெல்த் ஆபீசர், சி. ஜெயராம நாயுடு அவர்கள் ஜில்லாபோர்டு வைஸ் பிரசிடெண்டு, சி. குமாரசாமி நாயுடு சன்ஸ் புரோப்ரைட்டர், டி. கே. ராமய்ய நாயுடு அவர்கள் திருவள்ளூர் தாலுக்கா போர்டு பிரசிடெண்ட், அப்பாதுரை பிள்ளை அவர்கள் தாலுக்கா போர்டு வைஸ் பிரசிடெண்ட், ரங்கரெட்டி பி. ஏ. எல். டி. எட்மாஸ்டர், சீதாராம நாயுடு அவர்கள் சி. குமார அண்டு சன்ஸ், ஏ. எம். இலஞ்சி முதலியார் அவர்கள் ஜில்லாபோர்டு மெம்பர், தங்கவேலு முதலியார், தெய்வசிகாமணி முதலியார், ராகவ ரெட்டியார், சோமு முதலியார் பட்டு முதலியார், தானப்ப முதலியார், திருவேங்கடரெட்டியார், ரங்கய்ய நாயுடு, நடேசமுதலியார் மிஸ் டாக்டர் லக்ஷ்மிபதி அம்மாள், ரத்தினவேலு முதலியார், சுந்தரம் ராயப்ப பிள்ளை சிவ சம்பு சுப்பையர், சி. ரத்தினம் பிள்ளை, பட்டாபிராமசாஸ்திரி, சாம்பசிவமுதலியார் அவர்கள் பி. ஏ. எல். டி. டிப்டி இன்ஸ்பெக்டர், பி. எம். முருகேச முதலியார் அவர்கள் சி குமாரசாமி நாயுடு அண் சன்ஸ் மானேஜர் ஆகிய முதலியர்களும், அநேக பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள் மகாநாடு அரம்பமானதும் ராவ்பகதூர் திரு மி கு எம். கே. ரெட்டியார் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்கும் முறையில் ஒரு வரவேற்பு பிரசங்கம் செய்தார் [அது மற்றொரு பக்கத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது] அது முடிந்ததும் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை, சைதாப்பேட்டை தாலுக்கா போர்டு தலைவர் திரு ராமய்ய நாயுடு அவர்களால் ஆமோதிக்க பெரிய ஆரவாரத்துக்கிடையில்,

### திரு. நாயக்கர் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவு.

திரு. ரெட்டியார் அவர்களே! உபாத்தியாயர்களே! மற்றும இங்கு கூடியிருக்கும் சகோதர சகோதரிகளே! இந்த ஆசிரியர் மகாநாட்டுக்கு இந்த ஜில்லா போர்டார் என்னைத்தலைவனாக யிருக்கவேணுமாய் கேட்டுக் கொண்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஏனென்றால் இது "கல்வி" என்பது சம்பந்தமான ஆசிரியர் மகாநாடாயிருப்பதனால், அந்த கல்வி என்பது ஒருசிறிதும் இல்லாதவனும், ஆசிரியர் என்பவர்களிடத்தில் கொஞ்சமாவது பயிற்சி பெறாதவனுமான நான் இம்மகாநாட்டுக்கு தலைமை வகிக்க எவ்விதத்தில் தகுதியுடையவன் ஆவேன் என்பதுதான். நான் என்னுடைய ஒன்பதாவது பத்தாவது வயதிற்கு மேல் எந்த பள்ளிக்கூடத்திலுமே வாசித்தவனும் அல்ல. அந்த ஒன்பது வயதிற்கு உள்பட்ட காலத்திலும் என்னை பள்ளிக்கு அனுப்பிய காரணமெல்லாம், நான் வீட்டில் உள்ளவர்களுக்கு தொல்லை விளைவிக்காமலிருக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டு ஓர் திட்டத்தில் காவலில் வைபதற்காகவே. அதுவும் ஒரு திண்ணைப்பள்ளி உபாத்தியாயர் வசமே ஒப்படைக்கப் பட்டிருந்தேன். அந்த பள்ளியில் இருந்த காலமும், உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் தொல்லை விளைவிப்பதும், அவர்களிடம் அடிபடுவதுமான காலந் தான். நான் ஏதாவது இரண்டொரு எழுத்தை கற்றக் காலமாயிருக்கும் இதை நான் அநேகசந்தர்ப்பங்களில் பல பொதுக்கூட்டங்களில் சொல்லியிருக்கின்றேன். இதை ஆதாரமாய் வைத்துக்கொண்டே தான் ஒரு சிலர் அதாவது என்னுடைய கொள்கைகளுக்கு முரண்பட்டவர்களோ அதனால் கஷ்டப்பட நேரிடுமென்பவர்களோ, என்னைக் கண்டிப்பதற்கு இதை உபயோகித்துக் கொள்கிறார்கள், என்னவென்றால் "நான் கல்வி அறிவு அற்றவனென்றும் அதனால் எனது கொள்கைகள் அறிவு அற்றதென்றும் சொல்லியும் எழுதியும் வருவதைப் பார்க்கின்றேன். ஆனாலும் உங்கள் ஜில்லா போர்டு தலைவர் திரு எம். கே. ரெட்டியார் அவர்களுக்கு என் மீதுள்ள அன்பும் நம்பிக்கையும், நான் எவ்வளவோ மறுத்தும் என்னையே மகாநாட்டுக்கு தலைமை வகிக்க வேண்டுமென்ற கட்டாயப்படுத்தியதால் வேறு வழியில்லாமல் நான் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. நீங்கள் எந்த விதமான சிறந்த உபந்நியாசத்தையோ எதிர் பார்க்க முடியாது. உங்கள் ஜில்லா போர்டு தலைவர் இந்த மகாநாட்டை திறந்துவைக்கும்போது செய்த வரவேற்புப்பிரசங்கமானது மிகவும் அற்புதமாகவும் ஆணித்தரமானதாகவும் பெரிய அநுபோகமும் ஆராய்ச்சியும் பொருந்தியதாகவும் இருந்தது. அது உங்கள் நிலையை விளக்கியதுடன் நீங்கள் செய்ய வேண்டியதையும் நன்றாய் எடுத்துக்காட்டி இருக்கின்றது அவ்வுபன்னியாசம் உங்களுக்கு மாத்திரமல்லாமல் உங்கள் மாணாக்கர்களுக்கும் அவர்கள் பெற்றோர்களுக்கும் மற்றும் கிராம வாசிகளுக்கும் பொதுநல சேவைக்காரர்களுக்கும் மிகுதியும் பயன்படக்கூடியது.

அதுபோல நான் எதையும் எடுத்துச் சொல்லமுடியாது. தவிர அக்கிராசனம் வகித்தவன் என்கின்ற முறையில் நான் ஏதாவது இரண்டு வார்த்தை சொல்ல வேண்டும் என்றால் அதுபோல் ஆராய்ச்சியோடு ஒன்றும் சொல்ல முடியாது என்றும் ஏதோ என் சிற்றறிவிற்கு எட்டிய விஷயம் எதையாவது என் சொந்த முறையில் தான் சொல்லக் கூடும் என்றும் முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்களே! நான் அறிந்த வரையில் தற்கால ஆசிரியர்கள் என்கின்றவர்கள் ஒருவித தொழிலாளிகளே. அதாவது ஜீவனத்திற்காக வேலையோ கூலியோ செய்கின்றவர்களைப் போல் வயிற்று பிழைப்புக்காரர்களே யல்லாமல் உண்மையான ஆசிரியத்தன்மை யுடையவர்கள் அல்ல என்பதே எனது அபிப்பிராயம். எப்படி ஒரு மனிதன் தன் ஜீவனத்திற்கு மூட்டை தூக்குகிறானோ மாடு மேய்க்கிறானோ, வண்டி ஓட்டுகிறானோ, வக்கீல் வேலை செய்கிறானோ, குமாஸ்தாவாக இருக்கிறானோ அப்படியே உபாத்தியாயர் வேலை என்பதும் ஒரு தொழிலாகவே ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு உபாத்தியாயரும் தங்கள் தங்களை உபாத்தியாயர் வேலைக்கு தகுதி ஆக்கிக்கொண்டதின் கருத்தே அவர்களின் ஜீவனத்திற்கு ஏதாவது தொழில் வேண்டாமா என்கின்ற கருத்துக் கொண்டு தானே யல்லாமல் ஏதாவது ஆசிரியத்தன்மையில் ஆசை இருந்து ஏற்பட்டதாக எனக்கு தோன்றவில்லை. ஆதலால் இம்மாதிரி மகாநாட்டுக்கு உபாத்திமைத் தொழிலாளர் மகாநாடு என்று சொல்வதுதான் பொருத்தமான பெயராகும். அதுபோலவே உங்களிடம் தங்கள் பிள்

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

# எது தொலைய வேண்டும்.

தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றிய இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அரசியல் புரட்டர்களுக்கு பேச மேடையில்லாமலும், மதப்புரட்டர்களுக்கு மரியாதை இல்லாமலும், புராணப் பிரசங்கத்திற்கு இடமில்லாமலும் செய்து விட்டதோடு இவைகள் மூலம் அவரவர்களின் சொந்த வியாபாரத்திற்கும் இடையூறு ஏற்பட்டுவிட்ட விபரம் இவைகளினால் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தவர்கள் நெருப்பில் விழுந்த புழுத்துடிப்பது போல் துடிப்பதினாலே விளங்கும். இதுபோலவே பார்ப்பன ஆதிக்கமும் புரோகிதர்கள் ஆதிக்கமும் ஆங்காங்கு ஒருவாறு மறைந்து கொண்டே வருவதும் வெள்ளிடைமலை. இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் சுமார் பதினாயிரம் பேருக்கு மேலாகவே போலி அரசியலையும், புரட்டுப்பார்ப்பனீயத்தையும் விட்டு விலகி விட்டதாக அவர்கள் தங்கள் பெயரை வெளிப்படுத்தி இருப்பதையும், ஆயிரக்கணக்கான சடங்குகள் பார்ப்பனர்களை நீக்கி நடத்தி இருப்பதாக வெளியாகிவருவதையும், அநேகர் தங்கள் குலகுரு என்கின்ற போலிக் குருமார்களை நீக்கியிருப்பதையும் கவனித்துப்பார்ப்பவர்கள், இச்சுயமரியாதை இயக்கம் இத்தமிழ்நாட்டில் எவ்வளவு தூரம் வேரூன்றி வருகின்றது என்பதை உணரலாம். இந்நிலையில் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு சுயமரியாதை இயக்கம் தொலைய வேண்டும் என்றும், அதைத் தொலைத்தாலொழிய தேசியம் வளராதென்றும், ஆதலால் அதைத்தொலைப்பதே தனது வேலையாகக் கொண்டிருப்பதாகவும் வீர முழக்கம் செய்கிறார். எனவே இது எதற்காக என்பதைப் பற்றியும் சுயமரியாதை இயக்கம் தொலையவேண்டுமா அல்லது ஸ்ரீமான்கள் வரதராஜுலு, சத்தியமூர்த்தி, குப்புசாமி முதலியார் போன்றார்களின் தேசிய இயக்கம் தொலைய வேண்டுமா என்பதைப்பற்றியும் ஒரு முடிவுக்கு வரவேண்டுமாக பொது மக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

திரு. வரதராஜுலு முதலியோரின் தேசியம் என்பது காங்கிரசா, அல்லது சுயராஜ்யக் கட்சியா, அல்லது தேசீயக்கட்சியா, அல்லது ஒம்ரூல் கட்சியா, அல்லது மிதவாதக்கட்சியா, அல்லது மற்றெதுவோ என்பதை திரு. வரதராஜுலு சொல்லுவாரா? அல்லது அவருடைய தலைவர்களாவது மற்றக் கூலிகளாவது சொல்வார்களா என்று கேட்கின்றோம். அன்றியும் இவைகளில் எதனுடைய கொள்கைளாவது இன்னது என்பது திரு. வரதராஜுலுவுக்கு தெரியுமா என்று கேட்கின்றோம். ஸ்ரீரங்கம் கோவிலில் நடக்கும் வைகுண்ட ஏகாதசி உற்சவம் இன்னது என்று தெரியாமலும், அதனால் இன்ன பலன் உண்டு என்பதை உணராமலும், அப்படி ரயில்வே கம்பெனிகாரன் தனது வரும்படிக்காக எல்லோரையும் 'ஸ்ரீரங்கம் உற்சவத்திற்குப் போங்கள்' என்று விளம்பரம் செய்கின்றானோ அதுபோலவும், கும்பகோணம் மாமாங்க குளத்தின் தண்ணீரின் போக்கியதை இன்னதென்று தெரியாமலும், அதில் குளித்தால் இன்ன பலன் கிடைக்கும் என்று தெரியாமலும், எல்லோரும் மாமாங்கத்திற்குப் போய் மோட்சமடையுங்கள் என்று எப்படி ரயில்வேகாரன் விளம்பரம் செய்கின்றானோ அதுபோலவும், சுயராஜ்ஜியம் இன்னது, தேசியம் இன்னது, அதன் பலன் இன்னதாகும் என்பதைப்பற்றி ஒரு சிறு அறிவும் இல்லாமல் "எல்லோரும் சுயராஜ்ஜியம் அடையவேண்டும்" "தேசீயத்தில் சேரவேணடும்" என்று தங்கள் தங்கள் லாபத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக கூப்பாடு போடுவதல்லாமல் இதில் வேறு ஏதாவது காரியம் உண்டா என்று கேட்கின்றோம்.

இந்த 42 வருஷகாலமாக சுயராஜ்ஜியத்திற்கு பாடுபட்டவர்களின் நிலைமை என்ன? அதனால் மக்களுக்கு ஏற்பட்டபலன் என்ன? என்று கேட்ட கேள்விக்கு யாராவது இதுவரையில் இறுத்திருக்கிறார்களா? ஒரு சிறு விளம்பரக்காரன் ஏதாவது ஒன்று சொன்னதாக வெளியானால் உடனே அவனைப் பிடித்து அவனுக்கு எலும்பு போட்டு அதை மறுக்கும்படி கடிதம் எழுதிவாங்கியோ கற்பனை செய்தோ மறுநாளே பதிலெழுதும்முறையில் வெளிப்படுத்தப்படும் 'தமிழ்நாடு' போன்ற பத்திரிகைகளும் திரு. வரதராஜுலு போன்ற தேசியப் பிழைப்புக்காரர்களும் 33 கோடி மக்களை ஏமாற்றி பிழைக்கத்தக்க வழிதான் சுயராஜ்ஜியமும், தேசியக்கூப்பாடும் என்றால் இவர்கள் ஏன் அதற்கு உடனே பதில் சொல்லக்கூடாது என்று கேட்கின்றோம்.

இன்றைய உத்தியோக பெருக்குக்கும், வரி உயர்வுக்கும், கட்சிப் பிரதி கட்சிக்கும், ஏழைகள் கஷ்டத்திற்கும், அரசாங்கத்தின் அநீதிக்கும் சுயராஜ்ஜிய கூச்சலும் தேசீயப் புரட்டும் காரணமா இல்லையா என்று கேட்கின்றோம்.

இவ்வளவு கொடுமையைச் செய்த காங்கிரசும் தேசீயமும் மக்கள் ஒற்றுமைக்காவது சமத்துவத்திற்காவது ஏதாவது ஒரு சிறு நன்மையாவது செய்திருக்கின்றதா? அல்லது சமத்துவத்தைப் பற்றிய கொள்கை ஏதாவது காங்கிரசில் இருக்கின்றதா?

ஒத்துழையாமையின் போது காங்கிரசில் நுழைக்கப்பட்ட 1, சமத்துவம் 2 தீண்டாமை ஒழித்தல், 3. மதவிலக்கல், 4 கதர், 5 ஒற்றுமை ஆகிய மக்களுக்கு வேண்டிய திட்டங்களில் ஏதாவது ஒன்று இன்றைய காங்கிரசிலோ தேசீயத்திலோ இருக்கின்றதா? என்று கேட்கின்றோம்.

அன்றியும் சென்ற வருஷ காங்கிரசில் கொண்டுவரப்பட்ட சமத்துவத் தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதா என்றும், தீண்டாமை ஒழிக்கக் கொண்டுவந்த தீர்மானத்தை பம்பாய் மாகாண காங்கிரகிரஸ் ஏற்றுக்கொண்டதா என்றும், எல்லோருக்கும் சம உரிமை கொடுக்க வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்தை சென்னை மாகாண காங்கிரஸ் அனுமதித்ததா? என்றும், கதரைத் தவிர வேறு ஒன்றும் கட்டக்கூடாதென்ற தீர்மானத்தை காங்கிரஸ் வைத்திருக்கிறதா? என்றும், முஸ்லீம்களுக்கு அவர்களுக்குள்ள உரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறதா வென்றும் கேட்கிறோம்.

இந்நிலையில் காங்கிரசும் தேசியமும் மக்களுக்கு என்ன நன்மை செய்து விட்டது, அல்லது செய்யக்கூடும் என்று கேட்கிறோம். இவைகள் ஒன்றும் இல்லாமல் உத்தியோகங்களை உண்டாக்குவதும், அதற்காக அதிக சம்பளங்களை ஏற்படுத்துவதும், அதற்காக வரியை அதிகப்படுத்துவதும், வரியை ஏழை மக்கள் தலையில் விதிப்பதும், அவ்வுத்தியோகத்தை ஒரு வகுப்பாரே அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டு கூலிகளைவிட்டு கூப்பாடு போடுவதும், அக்கூலிக்காரர்களுக்குள் ஒருவராக திரு. வரதராஜுலு தன்னையும் பதிவு செய்து கொண்டு வாழ்வதும் அல்லாமல் தேசியத்திற்கு வேறு ஏதாவது அர்த்தமோ பலனோ திரு. வரதராஜுலு சொல்லக்கூடுமா என்று அறைகூவி அழைக்கிறோம்.

நிற்க, சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் என்ன என்பதுபற்றியும் அதனால் யார் பிழைக்கிறார்கள் என்பதையும் சற்று யோசித்துப் பார்ப்போம்:

மக்களுக்கு பிராணனைவிட மானம் பெரிதென்பது அதன் முதலாவது கொள்கையாகும்.

எல்லோரும் பிறவியில் சமம் என்பது இரண்டாவது கொள்கையாகும்.

பெண்களுக்குச் சம உரிமை இருக்க வேண்டுமென்பது மூன்றாவது கொள்கையாகும்.

ஜாதி மத பேதங்கள் தொலையுமட்டும் நாட்டின் ஒற்றுமையையும் எல்லாருடைய நன்மையையும் உத்தேசித்து ஒவ்வொரு ஜாதி மதத்திற்கும் அரசியலில் சரியான பிரதிநிதித்துவம் இருக்க ஏற்பாடுசெய்யவேண்டும் என்பது நான்காவது கொள்கையாகும்.

கண்மூடி வழக்கங்களும் மூட நம்பிக்கையும் தொலைய வேண்டும் என்பது ஐந்தாவது கொள்கையாகும்.

வேதம் சாஸ்திரம், புராணம், பழக்கம் என்னும் காரணங்களால் மனிதனின் பகுத்தறிவை கட்டுப்படுத்தக்கூடிய பார்ப்பனீயம் ஒழிந்து சுயேச்சையும் அறிவும் வளரவேண்டும் என்பது ஆறாவது கொள்கையாகும்.

இதுபோன்ற இன்னும் அநேக கொள்கைகளை சுயமரியாதை இயக்கம் இன்றைய தினம் தாங்கிக்கொண்டு மூலை முடுக்குகளிலெல்லாம் வேலை செய்து வருகிறது.

அதில் வேலை செய்பவர்கள் ஒவ்வொருவரும் இதுவரை தன் தன் சொந்த காசை செலவு செய்து தொண்டாற்றி வருகின்றார்கள்.

திரு வரதராஜுலுவும் அவர் கூட்டமும் தேசிய விளம்பரத்தால் பிழைப்பது போல் சுயமரியாதை விளம்பரத்தால் யாராவது பிழைக்கின்றார்களா? யாருக்காவது இதனால் ஒரு அம்மன் காசு லாபமுண்டா?

எனவே இம்மாதிரி மக்களுக்கு உண்மையான விடுதலையளித்து அறிவைப்பரவச்செய்யத் தக்க சுயமரியாதை இயக்கம் தொலையவேண்டுமா அல்லது கூலிகளுக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் மாத்திரம் அனுகூலமாயிருந்து நாட்டையும் பாழாக்கும் தேசியம

# சுயமரியாதைப் பிரசாரம்.

## முசிரியில்

### வைக்கம் வீரர் சொற்பெருக்கு.

(நமது நிருபரிடமிருந்து)

15—4—28ந் தேதி காலை 8-மணிக்கு முசிரி மாதா கோவிலுக்கருகிலிருக்கும் மனோகர விலாசச் சிற்றுண்டிச்சாலை (பார்ப்பனரல்லாத சிற்றுண்டி சாலை)யிலிருந்து வைக்கம் வீரர் அவர்களும் திருச்சி திருவாளர் ராவண தாசர் அவர்களும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக கடைத்தெரு வழியாக அழைத்துக் கொண்டுவரப்பட்டனர். கூட்டம் வரவரப்பெருக்கமடைந்து கொண்டு வந்ததுடன் கூட்டத்தைப் பார்ப்பதற்கென ஆண்களும் பெண்களும் சிறியோர்களும் தெருக்களில் நிறைந்து நின்றனர். திருவாளர் மு. கிருஷ்ணசாமி பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களின் மாளிகை மேன்மாடியில் வந்திறங்கினார்கள். ஊர்வலத்துடன் ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் திருவாளர்கள் கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், ந. பெத்து பிள்ளை அவர்கள், சு. சுந்தரம் பிள்ளை அவர்கள், தாலூகா போர்டு மாஜி உபதலைவர் நடராஜ பிள்ளை அவர்கள், திருவாளர் சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் முதலியவர்களும், வியாபாரிகளும், விவசாயிகளுமான பெருங்கூட்டம் சென்ற காட்சி மக்களின் மனத்தைக் கவர்ந்து களிப்புறச் செய்தது. திருவாளர் நாயக்கரவர்களையும் பிற உபந்யாசகர்களையும் காணுவான் கருதி அன்று பகல் முழுவதும் உள்ளூரிலிருந்தும் தாத்தையங்கார்பேட்டை, வடமலைப்பட்டி, பிள்ளாதுறை, து. புதூர் முதலிய கிராமங்களிலிருந்தும் பிரபல செல்வர்களும் நல உரிமையாளர்களும் வந்திருந்தனர். குளித்தலை, திருச்சி, கோயமுத்தூர் முதலிய வெளியூர்களிலிருந்து பல பெரியார்கள் வந்திருந்தனர். முசிரி தாலூகா மகாஜனங்களின் பொதுக்கூட்டம் கூட்டப்படுவதறிந்து உள்ளூர் கிராமங்கள் வெளியூர்கள் முதலிய இடங்களுக்கு துண்டு அறிக்கைகளினாலும் பறையடித்தல் மூலமாகவும் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது அன்று காலை 7மணிக்கு மீண்டும் ஊர்வலமாக வந்து திருவாளர்கள் நாயக்கர் முதலியவர்களுடன் முசிரி சிவன் கோவில் முன்னிலையில் கூடியிருந்த பெருங்கூட்டத்துக்குச்சென்று அனைவரும் ஆசனத்தமர்ந்து அமைதியுடனும் ஊக்கத்துடனும் வீற்றிருந்தார்கள், திருவாளர்கள் ராவணதாசர், பொன்னம்பலனார் முதலியவர்களால் சுயமரியாதை இயக்கசம்பந்தமான பாட்டுகள் பாடப்பட்டன. முசிரி மிராசுதார் திருவாளர் நீலமேகம் பிள்ளையவர்களாலும், உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரும் தாலூகா போர்டின் உபதலைவராயிருந்தவரும் ஜில்லா போர்டு அங்கத்தினருமான திருவாளர் மு. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களாலும், திருவாளர் சொக்கலிங்கம் செட்டியார் தலைவராக முறையே பிரரேபிக்கப்பட்டுஆமோதிக்கப்பட்டு கூட்டத்தினரின் கரவொலியிடையே தலைவர் தமதாசனத்தமர்ந்தார். தலைவர் முன்னுரையில் வைக்கம் வீரர் அவர்களை கூட்டத்தாருக்கு இரண்டொரு வார்த்தைகளில் அறிமுகப்படுத்தி திருவாளர் அவர்களை பேசும்படி கேட்டுக்கொண்டார்.

### நமது நாயக்கர் அவர்கள்.

'நமது நிலைமை' என்பது குறித்துக கல்லுங் கரையும் வண்ணம் சுமார் 2-30 மணி நேரம் பேசினார்கள். கூட்டம் அமைதியுடன் நாயக்கரின் சொற்பொழிவில் ஈடுபட்டு மெய்மறந்தவர்களானார்கள். குளித்தலை வாசிகளின் சார்பாக தலைவருக்கும் நாயக்கர் அவர்களுக்கும் திருவாளர் வையாபுரி சோழையரால் மாலை சூட்டப்பட்டது. கூட்டத்தின் சார்பாக நாயக்கர் அவர்களுக்கும் யூனியன் போர்டு தலைவர்க்கும் மாலை சூட்டப்பட்டது. பின்னர் திருச்சி திருவாளர் விசுவநாதபிள்ளை அவர்கள் நாயக்கர் அவர்களைப் பற்றி மக்கள் மனத்தில் பதியும் வண்ணமும் மக்களின் மூடபழக்க வழக்கங்கள் அறவே தொலையவும் சுமார் அரை மணி நேரம் வரை பேசினார்கள். பூவாளூர் திருவாளர் செல்வக்கணபதி செட்டியார் அவர்கள் கதர் இயக்கத்தில் ஆரியமக்களின் ஆதிக்கங்களையும், சின்ன காந்தி ராஜகோபாலாச்சாரியாரின் மனப்பான்மையையும் தனது அனுபவத்தில் கண்டவைகளை நன்கு கூறினார்கள். தலைவர் பின்னுரையானதும் தலைவருக்கு திருவாளர் நடராஜ பிள்ளை அவர்களால் மாலையிடப்பட்டு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

### கூட்டத்திற்கு வந்திருந்வர்கள்.

வழக்கறிஞர் திருளர். மு. கிருஷ்ணசாமி பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள், ஜில்லா போர்டு அங்கத்தினர் துறையூர் வழக்கறிஞர் திருவாளர் ரா. ராஜகோபால் பிள்ளை அவர்கள், முசிரி யூனியன் போர்டு தலைவரும் ஜில்லா போர்டுதலைவரும் ஜில்லா போர்டு அங்கத்தினருமான சுந்தரம் பிள்ளை அவர்கள், ஜில்லா போர்டு அங்கத்தினரும்பஞ்சாயத்துக் கோர்ட் தலைவருமான ந. பெத்துப் பிள்ளை அவர்கள், முசிரி தாலுகா போர்டு உபதலைவராயிருந்தவரும் தாலுகா மிராசுதார்களின் சங்கத்தின் காரியதரிசியுமான அ. நடராஜபிள்ளை அவர்கள், வெள்ளைப்பட்டி பெருநிலக்கிழவர் திருவாளர் கருப்பண்ணபிள்ளை அவர்கள், அவர்தம்மிளவல் சடையபிள்ளை அவர்கள், வடமலைப்பட்டி பெருநிலக்கிழவர் அரவாண்டயா பிள்ளை அவர்கள் (தாத்தையங்கார் பேட்டை) யூனியன் போர்டு அங்கத்தினர்கள் திருவாளர்களான பெரியமாரி முதலியார் அவர்கள், திருவாளர் ராமசாமி ரெட்டியார் அவர்கள், தாத்தையங்கார் பேட்டை யூனியன் போர்டு தலைவரும் தாலுகா போர்டு அங்கத்தினருமான திருவாளர் கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், வித்வான் கு. அ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், பூவாளூர் திருவாளர்கள் பொன்னம்பலனார், பரமசிவம் செட்டியார், முதலியவர்களும் சோலைத்திருவாளர் சிவானந்த முதலியார் அவர்கள் சென்னை சோல்டன் கம்பெனி சொந்தக்காரர் திருவாளர் பாலசுந்தர முதலியார் அவர்களும் இன்னும் பலரும் வந்திருந்தனர்.

## துறையூர் சுயமரியாதை சங்கத்தில்

### வைக்கம் வீரர் வீரச் சொற்பொழிவு

இவ்வூர் சுயமரியாதைச் சங்க வாலிபர்களின் நன்முயற்சியால் பார்ப்பன இருள் பறக்கவும், தமிழர் ஒளி சிறக்கவும், சுயமரியாதை தழைக்கவும் 14—5—28-உ திங்கட்கிழமை காலை 10-மணிக்கு நமது செந்தமிழ் நாட்டு பொது நலத்தியாக புருஷராகிய வைக்கம் வீரரவர்களையும், பிறர் நலங்கருதி பாடுபட்டுவரும் திருச்சி திரு. விஸ்வநாத பிள்ளை அவர்களையும் முசிரி மார்க்கமாக அழைத்துச் வந்தனர். ஊர் முழுவதும் பரபரப்பிருந்தது. பார்ப்பனர்க்குள் பொறாமை பொங்கியது. தமது வார்த்தைக்கு தலையாட்டும் தமிழர் சிலரிடம் ஓடினர், முறையிட்டனர், குறையிட்டனர், தயங்கினர், மயங்கினர். கூட்டத்தை நடக்கவொட்டாது தடுக்க சூழ்ச்சிகள் பல செய்தனர். அதிகார வர்க்கத்தினர் அனைவரும் தமிழராதலால் தம்மிடுக்கு உடைந்து வாட்டமுற்றனர், ஏங்கினர், இறுதியாக தம்தம் திண்ணைகளில் உட்கார்ந்துக்கொண்டு போவார் வருவார் பலரை பயமுறுத்திப் பார்த்தனர். ஒன்றும் பயன் படாமையால் கைசோர்ந்தனர். மூக்காடிட்டு மூலையில் ஒடுங்கினர். இவர்கள் இங்ஙனமாக, நமது சுயமரியாதைச் சங்க வாலிபர்கள் எதற்கும் சலியாது துண்டுப் பத்திரிகைகளாலும், சுவர் ஒட்டித் தாள்களாலும், நமது வீரர்களின் வருகையை, சுற்றியுள்ள பற்பல கிராமங்களுக்கு தெரிவித்தனர். அன்று காலை இருபெருந் தலைவர்கள் வந்தவுடன் அவர்களுக்கென்று ஒதுக்கி வைத்த அழகிய கட்டிடத்தில் தங்கியிருந்தனர். தெருக்களில் தோரணங்கள் எல்லாம் நிறைந்தன. கொடிகள் எல்லாம் பறந்தன. மக்களுள்ளமெல்லாம் மகிழ்ந்தன. நல்வரவு கூறிய வளைவுகள் எல்லாம் சூழ்ந்தன. அங்கங்கே மக்கள் சிறுசிறு குழுவினராய் கூடிக்கூடி சுயமரியாதை சம்பந்தமாயும், வீரர்களுடைய நல்வரவைப்பற்றியும் மகிழ்வுடன் பேசிக்கொண்டிருந்தனர். கதிரவனும் வீரருடைய கருணையை நினைத்து தன் கிரணங்களை மறைத்துக் கொண்டான். பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து வண்டிகளிலும், மோட்டார்களிலும் மக்கள் 3-மணிக்கே கூடிவிட்டனர். முசிரியிலிருந்து திரு. சொக்கலிங்க செட்டியார் அவர்களும், லால்குடி ஸ்ரீ பாப்பையா முதலியார் அவர்களும், பூவாளூர் திரு. பொன்னம்பலனார் அவர்களும், சென்னை ஸ்ரீ பாலசுந்தர முதலியார் அவர்களும், திருச்சி திரு. ராவணதாஸ், முருகதாஸ் முதலியோரும், வடமலைப்பட்டியிலிருந்து ஸ்ரீ எஸ். கே. கருப்பண்ண பிள்ளையவர்களும், அவரது நண்பர்களும் மற்றும்பல மிராசுதாரர்களும்வந்திருந்தனர். உள்ளூர்மிராசுதாரும் கோவில் டிரஸ்டியும் பிரபல ஜவுளி வர்த்தகருமான டி. எஸ். வி. எஸ். பழனியாண்டி முதலியாரும், ஸ்ரீமான்களாகிய டி. பி. ஏ. அருணாஜல செட்டியார், கோவிந்தராஜுலு செட்டியார், காசுக்கடை முத்துசாமி செட்டியார், வைரப்பெருமாள் முதலியார், வழக்கறிஞர் எம். என். ராஜகோபால் பிள்ளை பி. ஏ. அவர்களும் மற்றும் எனையோரும் தமிழாசிரியர் திரு. டி. எம். பாலசுந்தரம் அவர்களும் வந்திருந்தனர். சுமார் 4-மணிக்கு தலைவர் அவர்கள் மேளத்துடன் ஊர்வலமாக பிரசங்க இடமாகிய ஆண்மலைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்புறம் அழைத்துச் செல்லப்பட்டனர். சுமார் 1500 மக்கள் வரை குழுமி இருந்தனர். கூட்டத்திற்கு அதிகாரவர்க்கத்தினராகிய நம் தமிழர் அனைவரும் வந்திருந்தனர்.

இம்மா பெருங்கூட்டத்தினிடையே இராவணதாஸ் அவர்களால் தேசீய கீதம் பாடப்பட்டவுடன் இவ்வூர் சுயமரியாதைச் சங்க காரியதரிசி சுப்பையா அவர்களால் பிரரேபிக்கப்பட்டு திரு. விஸ்வநாத பிள்ளை அவர்கள் தலைமை ஏற்று தமது முன்னுரையில் வீரமூர்த்திகளை கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தி அவர்களது தியாகத் தன்மையை விளக்கிக் கூறினார்- பின்னர் நமது வைக்கம் வீரர் அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து நின்று அரசியல் புரட்டு புரோகிதக் கொடுமை சமய சீர் திருத்தம முதலிய விஷயங்களைப்பற்றி அங்கு குழுமியிருந்த மக்களது உள்ளத்தினிடையே புத்தம்புதிய உணர்ச்சி உண்டாகுமாறும் சுயமரியாதை தோன்றுமாறும் தெள்ளிய நடையில் பற்பல எளிய உதாரணங்களோடு பசுமரத்தாணி போற் பதியுமாறும் சுமார் 3 மணி நேரம் வீரத்தோடு பேசி தமது ஆசனத்தமர்ந்தார். பின்னர் தலைவர் அவர்கள் தமது முடிவுரையில் வீரமூர்த்திகளின் சொற்

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

---

தொலையவேண்டுமா என்பதைப்பற்றியோசித்து முடிவாக எது தொலையவேண்டும் என்பதை உணருமாறு பொது மக்களை வேண்டிக்கொள்ளுகிறோம். திரு. வரதராஜுலுவோ அவரது கூட்டாளிகளோ மாத்திரமல்லாமல் வேறு யார் இதற்கு தக்க பதிலுரைத்தாலும் வந்தனத்தோடு ஏற்று சமாதானம் சொல்லத்தயாராயிருக்கின்றோம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


குடி அரசு

ஈரோடு விபவ-ஹு வைகாசி-மீ 14-௳


# சுயமரியாதைச் சங்கங்கள்

நமது சுயமரியாதை இயக்கமானது தமிழ் நாட்டில் எவ்வளவு பரவ வேண்டுமோ அவ்வளவு பரவிவிட்டதாகக் கொள்வதற்கில்லை.

ஆனால் அது ஒரு விதத்தில் மக்கள் கவனத்தைப் பெரிதும் இழுத்துக் கொண்டும் சம்மதத்தை பெற்றுக்கொண்டும் வருகின்றது என்பதில் நமக்கு எள்ளளவு ஐயமும் இல்லை. ஆனால் இவ்வளவோடேயே நாம் திருப்தி அடைந்துவிட முடியாது. மந்திரிகள் ஆதரித்ததினாலும் சட்ட மெம்பர் முதலிய அறிஞர்கள் நற்சாக்ஷிப் பத்திரம் வழங்குவதினாலும் நமக்கு எந்தவித இலாபமும் ஏற்பட்டு விடாது. அவர்களும் இதை ஏற்றுக் கொள்ளுகின்றார்கள் என்கின்ற அளவில் திருப்தி அடையலாமே ஒழிய வேறொன்றும் இல்லை.

தவிர நமது இயக்கம் நம் நாட்டில் அவ்வளவு பரவி இருக்கின்றது என்று நினைக்கின்றோமோ அதைவிட அதிகம் பரவி இருப்பதாகவே நமது எதிரிகள் பயந்து கிலி பிடித்து நடுக்கமுற்று வருகின்றார்கள் என்பது மாத்திரம் நமக்கு நன்றாய் விளங்குகின்றது.

தவிர நமது இயக்கத்தை பரப்பும் விஷயமாய் நாம் இன்னமும் அதிகமான வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. நமது மாகாணத்திலேயே ஆந்திர நாட்டிலும் மலையாள நாட்டிலும் கர்நாடக நாட்டிலும் உள்ள மக்களில் அநேகருக்கு இப்படி ஒரு இயக்கம் தோன்றி இருக்கும் சங்கதியே சரியாகத் தெரியாது என்பதே நமது அபிப்பிராயம். இப்படி இருக்கும்போது வெளி மாகாணங்களைப் பற்றி கேட்க வேண்டுமா?

எனவே கூடிய சீக்கிரத்தில் இவ்வியக்கத்தை இன்னமும் சரியான ஒழுங்கு முறையில் அமைக்க வேண்டியது நமக்கு மிகுதியும் அவசியமாயிருக்கின்றது. ஏனெனில் அடுத்தாப்போல் சமீபத்தில் நமது நாட்டுக்கு வரப்போகும் அரசியல் விசாரணைக் குழுவினான சைமன் கமிஷன் வருவதற்கு முன்பாகவே நாம் ஒவ்வொரு ஊரிலும் சங்கங்கள் நிறுவி அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டும். தமிழ் நாட்டில் ஒரு ஐம்பதினாயிரம் அங்கத்தினர்களையாவது சேர்த்து நமது நாட்டிலுள்ள எல்லாச் சங்கங்களையும் விட இதுவே அதிக ஜனப்பிரதிநிதித்துவம் கொண்டது என்பதை உணர்த்திவிட வேண்டும். அன்றியும் இச்சங்கந்தான் பொதுமக்களின் சரியானபிரதிநிதித்துவம் பொருந்தியதுஎன்பதை மெய்ப்பித்து விட வேண்டும். வரப்போகும் கமீஷனிலோ சீர்திருத்தத்திலோ மக்களின் சுயமரியாதைக்கு ஏற்ற திட்டங்கள் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதில் அதிகாரமும் பதவியும் சம்பளமும் உள்ள உத்தியோகங்களை எவ்வளவுக் கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு குறைக்க முயல வேண்டும். குறைக்க முயலா விட்டாலும் இனியும் அதிகமாகப் பெருகி ஏழைகளை துன்புறுத்தி பொது மக்கள் ஒற்றுமையைக் குறைத்து கக்ஷி பிரதி கக்ஷிகள் ஏற்படுத்தி கொடுமையான ஆட்சி முறை நடைபெறச் செய்யும் தன்மையையாவது நிறுத்த வேண்டும். எனவே ஜில்லாக்கள், தாலூக்காக்கள், கிராமங்கள் தோறும் நம் சங்கங்களை நிறுவவும் அங்கத்தினர்களைச் சேர்க்கவும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு சுயமரியாதை தொண்டரை நியமிக்கவேண்டியது இச்சமயம் மிகவும் அவசியமாயிருக்கின்றது. ஆகையினால் இதை உத்தேசித்து இப்போது திருச்சி ஜில்லாவுக்கு திரு. ராவணதாஸையும், தஞ்சை ஜில்லாவுக்கு திரு. காளியப்ப தேவரையும், கோவை ஜில்லாவுக்கு திரு. A. R. சிவானந்த முதலியாரையும் நியமிக்க உத்தேசித்து அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். மற்ற ஜில்லாக்களுக்கும் ஒவ்வொரு தொண்டரை சிபார்சு செய்யும்படி ஆங்காங்குள்ள பிரமுகர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்கள். அவர்களின் பதில் வந்த உடன் நியமனம் செய்யப்படுவார்கள். இச்சுயமரியாதைச்சங்கத்தின் சார்பாக சட்டசபை, ஜில்லாபோர்டு, தாலூக்காபோர்டு, முனிசிபாலிட்டி முதலியவற்றின் தேர்தல்களுக்கு அபேக்ஷகர்களை நிறுத்தவோ அல்லது நமது சுயமரியாதைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மாத்திரம் தேர்தல்களில் உதவி செய்யவோ கூடியதான நிலைமையை நாம் அடுத்த சட்டசபைதேர்தல்களுக்குள் அடைந்தாக வேண்டும். அப்படிக் கில்லையானால் இப்போதைய நிலைமையில் சுலபத்தில் மக்கள் சுயமரியாதைத் தன்மையை அடைய முடியாதென்பதாகவே காணப்படுகின்றது.

நமது சுயமரியாதை திட்டத்திற்கு அரசாங்க சட்டங்கள் எவ்வளவோ இடையூறாக இருந்து வருகிறது.

உதாரணமாக ஆதிதிராவிடர் தன்மையில் பறையர், சக்கிலிகள் என்று சொல்லப்படுவதான குற்றமற்ற பெயர்களை மாற்றிக்கொண்டு ஆதிதிராவிடர்கள் என்கின்ற பெயரை வைத்துக்கொள்ள ஏற்றுக்கொண்ட சர்க்கார், தாசி மகன், அடிமை, என்கின்ற தத்துவம் கொண்ட சூத்திரன் என்கின்ற பெயரை மாற்ற சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். சட்டத்தை திருத்த மதம் இடம் கொடுக்கவில்லை என்று ஜனப் பிரதிநிதிகள் என்போர்கள் சொல்லி விட்டார்கள். இந்நிலையில் சுயமரியாதை உணர்ச்சியுள்ள கனவான்கள் சட்டசபையில் இருந்தால் சூத்திரன் என்ற பெயரை மாற்ற சட்டமும் மதமும் குறுக்கிடுமா என்று கேட்கின்றோம்.

தவிர, பார்ப்பனப் புரோகிதம் இல்லாமல் செய்யப்படும் கல்யாணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது என்பதாக சட்டத்தில் இருக்கின்றது. இந்து லாப்படி பார்ப்பனனும் பார்ப்பன சடங்கும் இல்லாமல் ஒரு கல்யாணம் நடந்தால் அது சட்டப்படி நடந்த கல்யாணமாக கருதமுடியாத நிலையில் சட்டம் செய்யப்பட்டிருக்கின்றது.

சொத்துக்கள் பங்குவீதத்திலும், ஆண் பெண் தன்மையிலும், தகப்பன் மகன் முறையிலும் சட்டத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன.

மற்றும் அநேக விஷயங்களில் சுயமரியாதைக்கு விரோதமாக எவ்வளவோ கொடுமைகள் சட்டத்தில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் சட்ட சபைகள் மூலம் மாற்றினாலன்றி நமது லட்சியம் நிறைவேற்றுவதற்கு மார்க்கமில்லை என்றே சொல்லுவோம். சட்டத்தினால் தடைகளை வைத்துக்கொண்டு விபரமில்லாமல் வெள்ளைக்காரர் மீதும் பொது ஜனங்கள் மீதும் குற்றம் சொல்லிக்கொண்டிருப்பதில் ஒரு பலனும் இல்லை.

ஆகையால் நாம் நமது இலட்சியத்தை அடையவேண்டுமானால், வைதீகர்கள் வசமும், வைதீகத்தின் அடிமைகள் வசமும் அதிகாரங்களை விட்டு ஒரு நாளும் வைத்தல் கூடவே கூடாது என்பதே நமது அபிப்பிராயம். ஜஸ்டிஸ் கக்ஷி என்பதான தென் இந்திய நல உரிமைச் சங்கம் பெரும்பாலும் சுயமரியாதை இலட்சியத்தை ஒப்புக்கொள்ளுகின்றதானாலும் அதிலுள்ள சிலர் அதிகாரத்தையும் உத்தியோகத்தையும் பொருத்தவரையில் மாத்திரம் பார்ப்பனீயத்தை ஒழிக்கச் சம்மதிக்கிறார்களே யொழிய நித்திய வாழ்க்கையில் பார்ப்பனர் காலில் விழுவதையோ பார்ப்பனர் கால் கழுவின தண்ணீரை சாப்பிட்டு தலையில் தெளித்துக்கொள்வதையோ நீக்கிவிட அநேகர் சம்மதிப்பதில்லை.

உதாரணமாக ஒரு பார்ப்பனன் சட்டசபை மெம்பராகவோ தாலுக்கா போர்ட் மெம்பராகவோ வருவதாயிருந்தால் மாத்திரம் பார்ப்பனீயம் கூடாது என்று சொல்லி பார்ப்பன ஆக்ஷியை வைய வருகிறார்களே, யல்லாமல் அதே பார்ப்பனன் இவருக்கு குருவாகவோ மோக்ஷத்திற்கு வழிகாட்டியாகவோ கடவுளை அறிமுகப் படுத்துபவனாகவோ வருவதையும் அப்பார்ப்பனன் காலில்விழுவதையும் ஆக்ஷேபிக்க ஒரு சிறிதும் சம்மதிப்பதே இல்லை. எனவே, சுயமரியாதையின் தத்துவத்தை ஜஸ்டிஸ் கக்ஷியார் என்கின்ற தென் இந்திய நலவுரிமைக்கக்ஷியார் உணர்ந்திருக்கின்றார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆதலால் நமது லக்ஷியத்திற்கு அக்கக்ஷியையே முழுவதும் நம்பி விட்டுவிடுவதற்கில்லாத நிலையில் இருக்கின்றோம். ஆதலால் நமக்கென்று தனிக்கக்ஷி நின்று சட்ட சபையில் அதாவது நமது சுயமரியாதைக்கு இடை

## திருமிகு முத்துலட்சுமி அம்மாளின் தீர்மானம்.

திருமிகு முத்துலட்சுமி அம்மாள் அவர்கள், பள்ளிக்கூடங்களில் மதக்கல்வி போதிக்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்திருப்பதாய் பத்திரிகைகளில் பார்த்தோம். இது ஒரு பைத்தியக்காரச் செயல் என்பதே நமது அபிப்பிராயம். அம்மையார், மதத்திற்கு என்ன பொருள் கொண்டிருக்கின்றார் என்பது நமக்கு விளங்கவில்லை. திரு. அம்மையார் இஷ்டப்படி நமது ஆண் பெண் மக்களுக்கு நமது மதம் என்று சொல்லப்பட்ட இந்துமதப் படிப்பை சொல்லி வைப்பதாயிருந்தால், அந்த மதப் படிப்புப்படி அவர்கள் நடப்பதாயிருந்தால், திரு. முத்துலக்ஷ்மி அம்மையார் டாக்டர் வேலையையும் சட்டசபை அங்கத்தினர் பதவியையும் விட்டுவிட்டு சட்டி கழுவப் போக வேண்டும் என்பதை அம்மையார் அறிந்தாரோ இல்லையோ நமக்குத் தெரியவில்லை.

அல்லது 'நாம்தான் மதக் கொள்கைக்கு மீறி சட்டசபை உபதலைவராகக்கூட உயர்ந்துவிட்டோம். இனிமேல் நமக்கு என்ன குறை' என்றும் 'இனி எந்தப் பெண்மணியும் நம் பதவிக்கு வாராமல் சட்டி கழுவுகின்ற வேலையிலேயே இருக்கட்டும்' என்கின்ற எண்ணம் கொண்டும் மதத்திற்குத் திரும்பி விட்டார்களோ என்றும் எண்ணவேண்டியிருக்கின்றது. தவிர அம்மையார் சட்டசபையில் கொண்டுவந்திருக்கும் பெண்களை சாமி பேரால் பொட்டுக்கட்டி விபசாரியாக்கும் வழக்கத்தையும், சிறு குழந்தைகளுக்கு கல்யாணம் செய்து 10, 12 வயதில் குழந்தை பெறும்படியான வழக்கத்தையும் நிறுத்த வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானங்களுக்கு விரோதமாக பேசினவர்கள் எல்லாம் மதத்தையே பிரதானமாக வைத்து ஆக்ஷேபித்ததை அதற்குள்ளாக மறந்துவிட்டார்களா? அல்லது அம்மையாராவது அம்மதசம்மந்தமான ஆக்ஷேபணைக்கு ஏதாவது சமாதானம் சொன்னார்களா? என்று கேட்கின்றோம்.

இப்பேர்ப்பட்ட ஒரு ஒழுக்கமான காரியங்களையும்கூட செய்வதற்கு அனுமதி இல்லாத மதத்தை கட்டிக்கொண்டு அழவேண்டிய அவசியம் அம்மையாருக்கு ஏற்பட்டதின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை. அது எப்படியோ போகட்டும். இது சமயம் அம்மையின் நிலைக்கு நாம் வருந்துவதோடு இருந்துகொண்டு மற்ற சட்டசபை அங்கத்தினர்கள் இத்தீர்மானத்தை நிறைவேற்றுவது நமது மனிதத் தன்மைக்கும் சுயமரியாதைக்கும் ஆபத்து என்பதாக தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

பூராக இருக்கும் சட்டத்தடையை ஒழிப்பதற்காவது அவசியம் வேண்டியிருக்கின்றது.

இவ்விஷயத்தில் அலக்ஷியமாய் இருந்துவிட்டு எவ்வளவுதான் பிரசாரம் செய்தாலும், எவ்வளவுதான் தியாகமும் கஷ்டமும் நஷ்டமும் அடையத் தயாராயிருந்தாலும் ஒரு பலனையும் அடைந்துவிட முடியாது. ஆதலால் இப்போதே ஆங்காங்குள்ள சுயமரியாதை வீரர்கள் ஆங்காங்கு சங்கங்கள் கண்டு அங்கத்தினர்கள் சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

## செங்கல்பட்டு ஜில்லா ஆசிரியர்கள் மகாநாடு.

செங்கல்பட்டு ஜில்லா போர்டு பிரசிடெண்டு திரு. எம். கே. ரெட்டியார் அவர்கள் அச்சில்லாவில் தனது போர்டு மூலம் எவ்வளவோ சீர்திருத்தங்களை செய்துவருகிறார்கள் என்பதும், அச்சில்லா போர்டு மெம்பர்களும் அவ்விஷயத்தில் திரு ரெட்டியார் அவர்களுக்கு எவ்வளவோ உதவியாக இருந்து வருகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்த விஷயமாகும். சமீபத்தில் அவர் கிராம சீர்திருத்தம் என்பதாக ஒரு புதிய துறை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு தக்க பொருள் ஒதுக்கி வைத்து அதன் மூலம் பிரசாரங்களையும், காரியஸ்தர்களையும் ஏற்படுத்தி தக்க வேலை செய்து வருகிறார். இந்த மாகாணத்தில் திரு. ரெட்டியாரின் முயற்சி புதியதானதும் பஞ்சாப் முதலிய இரண்டொரு மாகாணங்களில் இம்மாதிரி முயற்சிகள் ஜில்லா போர்டு மூலம் நடைபெற்று வருகின்றது. திரு. ரெட்டியாரின் இவ்வித துறையால் கிராம குடித்தனக்காரர்களுக்கு பெரிதும் பலன் உண்டு. இதுபோலவே மற்ற ஜில்லா போர்டுகளும் பின்பற்றி நடக்குமானால் கிராம வாழ்க்கையில் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கி விடலாம். திரு. ரெட்டியாருக்கு எழுதினால் விபரங்கள் முழுதும் தெரியப்படுத்துவார். இக்கிராம சீர்திருத்த துறையின் சார்பாகவே ஜில்லா போர்டு மூலம் இம்மாதம் 19–20-ம் தேதிகளில் செங்கல்பட்டு ஜில்லா பூந்தமல்லியில் ஒரு மகாநாட்டைக் கூட்டி அம்மகாநாட்டுக்கு ஆயிரக்கணக்கான உபாத்தியாயர்களையும் அறிஞர்களையும் வரச்செய்து கிராம முன்னேற்றம், கல்வி விஷயமாக பல உபன்யாசங்கள் புரியச்செய்தார். இவற்றுள் அம்மகாநாட்டைத் திறந்துவைக்கும் முறையில் ஆசிரியர்களை வரவேற்று திரு. ரெட்டியார் அவர்கள் உபன்யாசம் செய்தார். அம்மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்த திரு ராமசாமி நாயக்கரும் ஒரு உபன்யாசம் செய்தார். மற்றும் பலகனவான்களும் உபன்யாசம் செய்தார்கள். அவற்றைப் பொது ஜனங்கள் ஒவ்வொருவரும் ஊன்றி படிக்கவேண்டியதென்றே சொல்லுவோம். தவிர அத்துறையின் மூலம் ஒரு பத்திரிகையும் நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றார். அப்பத்திரிகைக்கு திருவாளர்கள் ராவ் பகதூர் செல்வரங்கராஜு, ஜே. எஸ். கண்ணப்பர் முதலிய பல அறிஞர்கள் விஷயதானம் செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றது.

எனவே நமது மகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஜில்லாபோர்டு தலைவர்களும் இதைப் பற்றி இம்மாதிரி உபயோகப்படத்தக்க வழியில் சொந்தமாவது தங்கள் கருத்தைச் செலுத்தி மகாநாடுகள் கூட்டி உபாத்தியாயர்களுக்கு அறிவுறுத்தி அதன் மூலம் கிராமங்களுக்கு சீர்திருத்தம் செய்தால் அதுவே அவர்கள் கடமையைச் செய்ததாகும்.

ஏனெனில் ஜில்லா போர்டுக்கு வரும் 10 லட்சக்கணக்கான வருவாய் அவ்வளவும் கிராமவாசிகளான ஏழைக் குடியானவர்களுடையது. ஆதலால் முதலாவதாக அவர்கள் நன்மைக்கு உழைப்பதே கடமையாகும் என்பதை ஞாபகப் படுத்துகின்றோம்.

## சுயமரியாதை மகாநாடு.

லால்குடி தாலுக்கா சுயமரியாதை மகாநாடு ஜூன் மாதம் 9, 10 ம் தேதிகளில் நடைபெறப் போகின்றது. அம்மகாநாட்டிற்கு திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரை தலைவராகத் தெரிந்தெடுத்திருந்தாலும் திரு நாயக்கர் தாம் அவசியம் மகாநாட்டுக்கு வருவதாகவும் ஆனால் வேறு ஒரு தலைவரைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படிக்கும் கேட்டுக்கொண்டதற்கிணங்க மதுரை திரு. பி. டி. ராஜன் அவர்களை மகாநாட்டார் கேட்டுக்கொண்டபடி திரு. ராஜன் அவர்களும் மனமுவந்து ஒப்புக் கொண்டார். மகாநாட்டு ஆரம்ப விழாவை நடத்த சென்னை கவுரவ மாஜிஸ்ட்ரேட் திரு. அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் அவர்கள் மனமுவந்து ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். மகாநாட்டுக்கு திருவாளர்கள் பன்னீர்செல்வம், சௌந்தரபாண்டிய நாடார், கண்ணப்பர், தண்டாணிப் பிள்ளை, விஸ்வநாதபிள்ளை முதலியவர்கள் விஜயம் செய்வார்கள். திருச்சி ஜில்லாவிலுள்ள சுயமரியாதை வீரர்களும் மற்றும் பெரியார்களும் அவசியம் விஜயம் செய்து மகாநாட்டை சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டுமென்று நாம் பிரத்தியேகமாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம். ஆதிதிராவிட சகோதரர்கள் அவசியம் வரவேண்டுமென்றும் வேண்டுகின்றோம்.

## திருவாங்கூர் தொழிலாளர் சங்க மகாநாடு.

ஜூன் மாதம் 3-ம் தேதியில் நடைபெறப் போகும் திருவாங்கூர் தொழிலாளர் சங்க மகாநாட்டிற்கு திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அக்கிராசனராக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் ஜூன் மாதம் மூன்றாம் தேதியில் நாகப்பட்டணத்தில் இருக்கவேண்டியிருப்பதால் வேறொரு தலைவரை தெரிந்தெடுத்துக் கொள்ளும்படிக்கும் முடியாவிட்டால் 15-ம் தேதிக்கு ஒத்திப்போட்டுக்கொள்ளும்படிக்கும் திரு நாயக்கர் தெரிவித்துவிட்டார்.

## திருச்சி ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்.

திருச்சி ஜில்லா போர்டு தலைவர், கனம் சேதுரத்தினமய்யர் மந்திரியாகி விட்டதால், தலைவர் ஸ்தானத்தை ராஜீனமா கொடுக்க நேர்ந்ததன் காரணமாக அச்சில்லா போர்டு தலைவர் பதவிக்கு 23-வ நடந்த தேர்தலில் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் போட்டியின்றி ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## செங்கல்பட்டு ஜில்லா போர்டு உபதலைவர் தேர்தல்.

செங்கல்பட்டு ஜில்லா போர்டு உபதலைவர் தேர்தல் இம்மாதம் 19 தேதி பூந்தமல்லியில் நடைபெற்றது. திரு. ஜயராம நாயுடு அவர்கள் போட்டியின்றி ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இது அச்சில்லா வாசிகளுக்கு பெரிதும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளித்தது.

# பெரிய இடத்துக் கல்யாணம்.

கோயமுத்தூர் முனிசிபல் சேர்மெனும் ஜில்லா போர்ட் தலைவரும் ரயில்வே அட்வைசரி கமிட்டி மெம்பரும் சட்டசபை அங்கத்தினருமான திருவாளர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்கள் குமாரத்தி திருநிறைச்செல்வி சரஸ்வதி அம்மாளுக்கும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் டிரஸ்டி திருவாளர் இராமலிங்கமுதலியார் அவர்கள் குமாரர் திருச்செல்வர் பொன்னையல முதலியார் அவர்களுக்கும் 23—5—28 தேதி கோயமுத்தூரில் திரு முதலியார் அவர்கள் பங்களாவில் திருமணம் நடைபெற்றது. இத்திருமண வைபவத்தைப்போல் இஜ்ஜில்லாவில் சமீப காலத்தில் எங்கும் நடைபெற்றதாகக் கூற முடியாதென்றே சொல்லுவோம். இத்திருமணத்தில் பார்ப்பன புரோகிதம் முற்றும் ஒழிக்கப்பட்டதானது சுயமரியாதை இயக்கத்திற்கு வெற்றிக்குறியாகும்.

இத்திருமணத்திற்கு பாணக்கால்ராஜா அவர்களும் ஊத்துக்குளி சமத்தூர் முதலியஜமீன்தார்களும் பழயகோட்டை புதூர் காடையூர் முதலிய பட்டக்காரர்களும் திரு சேதுரத்தினமையர் முதலிய மந்திரிகளும் பி. டி. ராஜன், சவுந்திரபாண்டியனார், மாணிக்கவேலு நாயக்கர், சைத்இப்ராஹிம் முதலிய சட்டசபை மெம்பர்களும், பன்னீர்செல்வம் முதலிய ஜில்லா போர்ட் பிரசிடெண்டுகளும், பல முனிசிபல் சேர்மேன்களும், பலதாலூக்கா போர்டு பிரசிடெண்டுகளும், ஜில்லா தாலூக்கா போர்ட் மெம்பர்களும். சென்னை கவர்ன்மெண்ட் செக்ரட்டரியேட் அதிகாரிகளும், திரு எ. ராமசாமி முதலியார், முனிசாமி முதலியார், முதலிய பலபத்திராதிபர்களும், ஜில்லா முழுவதிலும் உள்ள பிரபல மிராசுதார்களாகிய வெள்ளியங்கிரி கவுண்டர் வேட்டைக்காரன் புதூர் பழனிச்சாமிக்கவுண்டர் முதலானவர்களும், திரு கிருஷ்ண செட்டியார், இரத்தின சபாபதி கவுண்டர், செங்கோட்டய்யா முதலிய வியாபாரிகளும், திரு திவான்பகதூர் சோமசுந்திரம்செட்டியார் பி எஸ் ஜீ நாயுடு அண்டு சன்ஸ் எ டி லட்சுமணசாமி முதலியார் முதலிய மில் சொந்தக்காரர்களும ஆக குவிந்து கிடந்ததானது மிகவும் குறிப்பிடத்தக்கது. மணமக்களுக்கு ஓதி வைத்த தங்கம், வெள்ளிபாத்திரங்கள் சுமார் ஒரு வண்டி பிடிக்கும் என்றே சொல்லலாம். கல்யாணத்திற்கு மொய் ஓதி வைத்த வகையில் சுமார் பதினாயிரம் ரூபாய்க்கு மேலாகவே இருக்கலாம்.

கல்யாணத்திற்கு சங்கீதத்திற்காக தானாகவே கௌரவத்திற்காக வந்திருந்த ஒரு சிறுவர், அதாவது கொள்ளேகாலம் தாலூகா போர்டு பிரசிடெண்ட் அவர்கள் குமாரர் சுமார் 15 வயது உள்ளவரும் மைசூர் ராஜா அவர்களிடம் பரிசு பெற்றவருமான ஒரு சிறுவரின் சங்கீதமானது வந்திருந்தமக்களுக்கு பெரிய அதிசயத்தையும் ஆனந்தத்தையும் கொடுத்தது. கல்யாணகாரியங்களைமேற்போட்டுக்கொண்டு கவனிக்க இஜ்ஜில்லாவில் உள்ள முக்கியகுடும்பத்தைச்சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் 2 நாளைக்கு முன்னதாகவேவந்துகல்யாணம்வெகு விமரிசையாகவும் சிறப்பாகவும் நடக்க ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட பிரயாசையும் கவலையும்திரு. ரத்தினசபாபதி முதலியார் அவர்களிடம் மக்களுக்கு இருக்கும் அன்பையும் பற்றுதலையும் காட்டுகின்றது. ஒவ்வொரு பெருங்குடும்பங்களிலும் உள்ள கனவான்கள் எல்லோருமே வந்திருந்தார்கள்- உதாரணமாக ஊத்துக்குளி ஜமீன்தார் அவர்கள் குடும்பத்திலிருந்து கனம் பெரிய ஜமீன்தாரவர்களும், குமாரர்கள் துரைராஜா அவர்களும், திருவாங்கூர் ராஜா அவர்களின் பிரைவேட் செக்ரடரி நடராஜா அவர்களும் ஆகிய மூவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். திரு. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் குடும்பத்திலும், திரு கவுண்டரவர்களும் அவர்களது சகோதரர்கள் திரு பழனிசாமி கவுண்டரவர்களும், திரு சுப்பைய கவுண்டரவர்களும், மற்றொரு சகோதரரும் ஆகிய நான்கு கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். இதுபோலவே முக்கிய குடும்பங்களில் எல்லோருமே விஜயம்செய்திருந்தார்கள்.

யூனைட்டெட்மோட்டார்சர்வீஸ், திருதுரைசாமி நாயுடு அவர்கள் தமது தொழில்சாலை முழுதையும் கல்யாணத்திற்கு உதவியதோடு தனது மோட்டார்கார் பஸ் ஆகியவைகளை கலியாணத்திற்கு விட்டு போக்கு வரவு ஜனங்களுக்கு வேண்டிய உதவி செய்தது குறிபிடத்தக்கது. பழயகோட்டை பட்டக்காரரவர்கள் சுமார் 50 குடம் தயிரும் 3, 4 குடம் நெய்யும் அனுப்பி விருந்தை சிலாக்கியப்படுத்தியது மிகவும் குறிப்பிடத்தக்கது. பார்ப்பனகனவான்களின் எண்ணிக்கை மிகவும் சுருக்கமானது. இவைகள் எல்லாம் மிகவும் பாராட்டத்தக்க விஷயங்கள் என்பதில் ஒரு சிறிதும ஐயமில்லை. இனியும் வந்திருந்த முக்கியஸ்தர்களின் பெயரை எழுத இடமுமில்லை. ஆனால் ஒன்றை மாத்திரம் குறிக்காமல்விட மனமுமில்லை. அதாவது பார்ப்பனப் புரோகிதமல்லாத கலியாணம் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர பார்ப்பனப் புரோகிதத்தைப் போலவே ஆரியப் புராணச்சடங்குகளும் சமஸ்கிருத மந்திரங்களுந் தான் அந்த தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தன.

இந்த விஷயங்களிலும் நமது மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டு இம்மாதிரி மணங்களில் அர்த்தமுள்ள சடங்குகளும் பொருள் தெரிந்த வாக்கியங்களும் நடைபெறும்படியான காலம் ஏற்பட்டால் தான் இவ்விஷயங்களில் சிறிதாவது சீர்திருத்தங்கள் ஏற்பட்டது என்று சந்தோஷப்பட இடமுண்டாகும். ஸ்ரீ முதலியாரவர்கள் வீட்டில் நடைபெறப் போகும் அடுத்த திருமணங்களில் இவைகள் நடக்கும் என்று எதிர் பார்க்கின்றேன். நமது நிருபர்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிவின் சாரத்தை எடுத்துச் செவ்விதின் விளக்கி முடித்தார்- பின்னர் காரியதரிசி அவர்களால் வந்தன உபசாரம்கூறப்பட்டு மாலை சூட்டியவுடன் மேளத்துடனும் ஊர்வலத்துடனும் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றனர். மக்களுக்குள் அதிக பரபரப்பும் புதிய உணர்ச்சியும் தோன்றி விட்டது. பார்ப்பன புரோகிதத்தை ஒழிக்க வேண்டுமென்று பலர் முயற்சி எடுக்கக் கூடிய உணர்ச்சியை நமது வீரவர்கள் உண்டாக்கி விட்டனர். இம்மாதிரியான கூட்டம் மாதம் இருமுறையாவது கூட்ட வேண்டுமென்று மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

'திராவிடன்'

## திரு. ஏ. ராமசாமி முதலியார்.

திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் சமீபத்தில் தம் வீட்டில் நடந்த மரணச் சடங்கை பார்ப்பனர்களை வைத்து நடத்தியதாக 'தமிழ் நாடு' பத்திரிகையும் அதன் கூலி நிருபர்களும் திரு. முதலியாரின்மீது குற்றம் சாட்டி குறைத்திருக்கின்றன. இது வேண்டுமென்றே அக்கிரமமாக சாட்டிய குற்றமாகுமே ஒழிய யோக்கியமாக எழுதியதாகாது. ஏனெனில்,

திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்களுக்கும் நடந்ததாக சொல்லப்படும் சடங்குக்கும் யாதொரு சம்மந்தமும் கிடையாது. இறந்துபோன கனவான் திரு. முதலியாரின் மாமனார் ஆவார். சடங்கு நடத்தியவர்கள் காலம் சென்ற கனவானின் மனைவியாராவார். அந்த மாமனார் குடும்பம் ஏனைய பல குடும்பங்களைப்போல் பார்ப்பன மாய் கையில் சிக்குண்ட குடும்பமாகும். யார் சொல்லியும் கேளாமல் அவ்விட்டார் பணம் கொடுத்து பார்ப்பனர் காலில் விழுந்தால் அதற்கு திரு. முதலியார் எப்படி குற்றவாளியாவார் என்பது நமக்குப் புரியவில்லை. திரு. முதலியார் சொல்லிப் பார்த்தார். அவர்கள் கேட்கவில்லை. இத்துடன் திரு. முதலியார் கடமை தீர்ந்துவிட்டது. எனவே திரு. முதலியாரை வைய யோக்கியமற்ற முறையில் தகாத காரணத்தைச் சொல்லி வைவது கோழைத்தனமும் அயோக்கியத்தனமுமேயாகும்.

'உண்மை உணர்ந்தோன்'

## அறிக்கை:—

காகித பேல்கள், ரயில்வேயில் ஏற்பட்ட அசந்தர்ப்பங்களால் சரியான காலத்தில் வாரமல் தாமதப்பட்டு வந்ததால் 'குடி அரசு' குறித்த காலத்தில் வெளியிடப்பட முடியாமல் போனதுபற்றி வருந்துகிறோம்.

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம்விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன்பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இளவரசருக்கும் ஒக்கும். அதனால் தான் குடிகளின் அன்புக்கும் நன்மதிப்புக்கும் ஆளானார்கள். அன்பே மக்களின் இதயத்தைத் திறக்கவல்ல பொற்சாவி; அன்பே வாழ்க்கையின் முடிவு; அன்பே அன்புக்குக் காரணம்; வாழ்க்கையின் பல இன்பங்களும் அன்பின் வழி தோன்றும். அன்பை வளர்த்தால் வாழ்க்கையில் வெற்றி பெறுவீர்கள். ஒருவன் அறிவிலியாய் இருக்கலாம். அசுசியாயிருக்கலாம். அவனைப் புறக்கணிக்காதீர்கள். எட்டி நிற்பது ஈனகுணம். அவனை ஆதரவுடன் நடத்துங்கள். அவனை அன்புடன் நடத்துங்கள். அவனை மெல்லென இழுத்துச் செல்லுங்கள். அவன் உங்களைப் பின்பற்றி வருவான். கிறிஸ்தவப் பாதிரிகளைப் பாருங்கள். நீங்கள் தீண்டாத ஜனங்களுடன் அவர்கள் உறவாடுகிறார்கள். இவ்வித உறவால் எவ்வித நற்பயன் விளைகிறது! ஒருவனுக்கு எழுத படிக்கத்தெரியாமல் இருக்கலாம், ஆனால் அவன் விருப்பும்வெறுப்பும் வென்றவனல்ல. இயற்கை குணமே அவனுக்கு துணையாய் நிற்கிறது. வாய்விடா பிராணிகளும் அன்புற்றவிடத்தில் அன்பு செலுத்துகின்றன. ஊராருடன் தக்கவிதத்தில் நடந்துகொண்டால் ஊராரின் அன்பையும்நீங்கள்ஏன் அடையக்கூடாது

நீங்கள் அற்ப திருப்திக்கு ஆசைப்படலாகாது. நீங்கள் அறிந்திருப்பதைவிட அதிகபொறுப்புகள் உங்களுக்கு உண்டு. பாடத்திட்டத்தை முடிப்பதோடு உங்கள் வேலை தீர்ந்துவிடுவதில்லை. பிள்ளைகள் ஒரு சமநிலையில்பயற்சி பெறுவதற்கே பாடத்திட்டம் அவசியமாய் இருக்கிறது. பாடத்திட்டத்தினால் இதைத்தவிர வேறுபயனில்லை. பாடத் திட்டத்தை மாத்திரம் அனுசரித்துக்கொண்டு பிள்ளைகளுக்கு உண்மைப் பயற்சி அளிக்க முடியாது. வாழ்கைக்குத் தயாராவதே பயிற்சியின் இலக்கு. உங்களிடம் கல்விபயிலும் பிள்ளைகளில் பெரும்பான்மையோரும கல்வி கற்று முடிந்ததும்கிராம வாழ்க்கையிலேயெ ஈடுபடுகிறவர்கள். பிள்ளைகள் பள்ளியிலிருந்து வாழ்க்கைக்கு மெல்லென ஏறிச் செல்லவேண்டும். ஊருடன் ஒத்துவாழும் நிலையில் உங்கள் பிள்ளைகள் பயின்றிருக்கவேண்டும். நிறைவுடன் அவர்கள் இல்லற வாழ்க்கை நடத்தவேண்டும். வாழ்கைக்கு இன்றியமையாத பல சௌகரியங்களையும் தேடிக்கொள்ள அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

உழைப்பில அவர்களுக்கு ஊக்கத்தை வளர்க்கவேண்டும். அதுவே வாழ்க்கைக்கு முக்கியமாய் வேண்டிய பயிற்சி. சேவை சிறந்தது. எத்தொழிலுக்கும் இழிவில்லை. வேலை காரணமாக வெட்கம் அடைவதற்கில்லை. வாழ்க்கையில் பற்று ஏற்படவேண்டுமானால் வேலை அவசியம் அறிவிலிகளாய் இருக்கும் தம் அக்கம்பக்கத்தாரை விட தேர்ந்த தொழிலாளிகள் ஆவதற்கே பயில்வதாக அவர்கள் உணரவேண்டும். அதற்குத்தகுந்தபடி நீங்கள் அவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும். அவர்களுடையபெற்றோரைவிட சிறந்த கிருஷிகளாகவும் குடிகளாகவும் தேறும் விதத்தில் நீங்கள் அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நீங்கள் உங்கள் கடமையைச் சரிவர செலுத்தினவர்களாவீர்கள்.

இத்தகைய பயிற்சியின் பெருமையை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். பயிற்சியின் அளவில் அரசிளங்குமாரர்களும் பாமரரும் ஒரேதரத்தில் கருதப்பட்டு வந்தார்கள். வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதையே இருதிறத்தாரும் கல்வியின் இலக்காகக்கொண்டிருந்தனர். பஞ்சதந்திரக்கதைகளையும் இதோபதேசக்கதைகளையும் நீங்கள் படித்திருக்கலாம். அற்றில் உலகஞானம் நிறைந்திருப்பதை அறிந்திருப்பீர்கள் அவை அரசகுமாரர்களுக்கு குருவால் உபதேசிக்கப்பட்ட கதைகளாகும். எனினும் பாமரர்களுக்கும் பயன்படும் உட்கருத்து மிளிர்கின்றது

பளளிக்கூடத்துக்கு அப்பாலும் நீங்கள் உங்கள் கருத்தைச் செலுத்தவேண்டும் - ஊராரில் பலரும் உங்களை செவிசாய்த்துக் கே



ஆசிரியர் மகாநாட்டைத் திறந்து வைத்த
செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர்
திரு. ராவ்பகதூர் M. K. ரெட்டியாரவர்கள்.

ட்பார்கள். எழுதவும படிக்கவும் தெரிந்ததோடு வயதுவந்த ஒருவனுக்குக் கல்வி முற்றுப்பெறாது. வாழ்க்கையில் பயன்படும் அறிவு அவனுக்கு வேண்டும். வாழ்க்கையின் இன்பங்களைப் பெருக்கிக்கொள்ளும் ஞானம வேண்டும் அவனுக்குச் சோ[illegible] வேண்டியவைகளை [illegible]த்தில் அவன் ஏமாறக்கூடாது. ச[illegible]ஜீவராசிகளும் [illegible] [illegible]ருந்திய சுகத்தை[illegible] [illegible] நிற்கின்றன. கிராமவாசியின வருவாய் குறைவானது. வெளியிடங்களில் உழைத்து மாசற்ற காற்றை உட்கொள்ளும் சுகத்தையே அவன் அறிவான். சிறிது கவனம் செலுத்தி சிறிது சிரமம் எடுத்துக்கொண்டால் அவனுடைய வாழ்க்கையின்பங்களை அதிகரித்துகொள்ளலாம். அசுத்த வாழ்க்கையினால் ஏற்படும் பல தொல்லைகளிலிருந்தும் அவனைக்கடைத்தேற்றலாம். ஆரம்பத்தில் அவன் உங்கள் உபதேசத்தில் சிரத்தைகொள்ளான். அவனுடைய வறுமை நோய் கொடிது. கிராம வாழ்க்கையில் தோன்றும் பல தீமைகளும் ஒன்றையொட்டி ஒன்றாய் சங்கிலித்தொடர்போன்று சுற்றி வருகின்றன. கிராம வாழ்க்கையைச்சிறக்க வைக்கவேண்டுமென்றால் இந்தச்சங்கிலித் தொடரில் ஒரு கண்ணியைத் தகர்த்தெறியவேண்டும்.

முதலில் அறியாமையை அகற்றுங்கள். அதன் பின் அநேக அரியகாரியங்கள் கைகூடும். கிராம வாழ்க்கையில் அறிவின் ஒளியைப்பரப்புங்கள். கிராம வாழ்க்கை பொலிவுறும். அப்பால் வாழ்க்கையின் பல தொல்லைகளும் தானே அகலும் கிராமவாசிதன்உடல் வலிவைச்சிக்கனப்படுதத தெரிந்துகொள்வான். வாழ்க்கை நலங்களை தேடிக்கொள்ள நோங்கிடைக்கும். அறிவை வளர்க்கவும் அவகாசம் ஏற்படும். நிலத்தின் விளைவை அதிகரித்துக்கொள்ளும் வழியைப் போதியுங்கள். கால்நடையை விருத்தி செய்துகொள்ளும் வகையைக் கற்பியுங்கள். தன்னையும் தன் குடும்பத்தாரையும் நோய் வாய்ப்படாது காத்துக்கொள்ளும் விதத்தை எடுத்துச்சொல்லுங்கள். கூட்டுறவாலும் ஒத்துழைப்பாலும் அரியகாரியங்களையும் செய்து முடிக்கலாம் என்ற உண்மையை உபதேசியுங்கள். வயது வந்தவர்களுக்கு இதுவே தக்ககல்வியாகும்.

பிள்ளைகளுக்குக் களிப்பை ஊட்டுங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் பெரியவர்கள். உங்களைக்கண்ட அளவில் அவர்கள் அஞ்சுகிறார்கள். ஒரு காலத்தில் நீங்களும் பள்ளிப்பிள்ளைகளாக இருந்தவர்கள்தானே. அக்காலத்தில் நீங்களும் உங்கள் உபாத்திமார்களைக்கண்டு திகிலடைந்ததை நினைத்துப்பாருங்கள். அச்சமென்பதே பிள்ளைகளுக்கு ஆகாது. அச்சத்தால் அவர்களின் முற்போக்குதடைப்படும். அச்சத்தை யொழித்து நம் பிக்கையை நாட்டுங்கள். பரஸ்பர விஸ்வாசம் ஏற்பட்டு விட்டால் பல நன்மைகளும் ஏற்படும். சிறுமிகள் போன்று சிறுவர்கள் தம் மனோ நிலமையை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளுகிறவர்களல்ல. ஆனால் பட்சம் உள்ள இடத்தில் பட்சம் காட்டுவார்கள். பள்ளிப்பாடம படிக்கும் துன்பத்தை அவர்கள் உணராமல் இருக்கச் செய்யுங்கள். பயிற்சியை ஒழுங்கு படுத்துவதற்குப் பாடத்திட்டம் இருந்துதான் தீரவேணடும். காலக்கிரமத்தில் அதன் பயன் விளங்கும். பாடத்திட்டத்துக்கு அப்பாலுள்ள விஷயங்களில் ஊக்கக்கொடுங்கள். பொது அறிவே பயன் அளிக்கும். பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அழைத்துச்செல்லுங்கள்.. சிலுசிலென்று ஓடும சிற்றோடையின் அருகிலும் நிழல் நிறைந்த சோலையின் நடுவிலும அறிவை வளர்க்கும அரிய விஷயங்கள் தோன்றுமபடி ஞாயறின் அழகைக்கண்டு அவர்கள் அகமகிழட்டும் நீர்நிலையிலும் பசும்புல் வெளியிலும வெண்மதியின் ஒளியைக்கண்டு களிக்கட்டும். வளாவிருக்கும் வேளைகளி

லும் அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பீர்களானால் பாடம் கற்கும் காலத்திலும் ஊக்கம் கொள்ளுவார்கள். அவர்கள் ஆகாசக்கோட்டை கட்டினால் அவர்களுக்கு ஒத்த உதவி புரியுங்கள். அவர்கள் வீணே பிதற்றினாலும் செவி சாய்த்துக் கேளுங்கள். அவர்களுடைய இன்பதுன்பங்களை நீங்களும் அனுபவியுங்கள். பிறப்புரிமைகளை உணர்ந்து வாழக்கை நடத்தும் வழியில் பயிற்றுங்கள். அச்சத்தைப் போக்குங்கள்.

அச்சமென்பது சிறுவர்களின் இதயத்தை அரிக்கும் நச்சுக்கிருமி, சுகவாழ்வில் அச்சமே ஏற்படக்கூடாது. கூடி உறவாடி ஒத்துழைத்து பல காரியங்களையும் சாதிக்க வல்ல பயிற்சி அளியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்குச் சாரணப் பயிற்சி கொடுங்கள். நாளடைவில் அதன் பயனை அடைவார்கள்.

இவையெல்லாம் உங்களுக்கு நூதன வேலைகள். உங்கள் திறத்தைக் காட்ட வழி ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் முன்னேறிச் செல்லவும் தக்க சமயம். காலப் போக்கைத் தழுவி நில்லுங்கள். சமுதாயச்சீர்திருத்தத்திற்காக நடக்கும் பல இயக்கங்களிலும் பாடுபடுங்கள். அநேக வழிகளில் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையைப் பிறருக்குப் பயன்படுத்தலாம். இப்போது ஒரு வருஷ காலமாக செங்கற்பட்டு ஜில்லா போர்டார் நடத்திவரும் கிராமச் சீர்திருத்தவேலையைப் பற்றி கேட்டறிந்திருப்பீர்கள். ஒரு வருஷ அனுபவத்திலிருந்து இந்த வேலையை மிக வாய்ப் பாப்பலாமென்ற ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது. கிராம முன்னேற்றத்திற்கென்று தமிழில் ஒரு பத்திரிகை வெளியிடப் போகிறோம். உங்களில் ஒவ்வொருவருக்கும் பத்திரிகை அனுப்புவோம். கிராம வாழ்க்கையைச் சிறக்க வைப்பதற்குள்ள பல உபாயங்களையும் அப்பத்திரிகையில் வெளியிடுவோம். பத்திரிகையில் காணும் விஷயங்களைக் கிராமத்தாருக்கு எடுத்துரைப்பீர்களானால் எங்களுக்குப் பெரும் உதவியாயிருக்கும் ஊராருக்கும். உதவியாயிருப்பீர்கள். இந்த கைங்கரியத்தில் ஊக்கம் எடுப்பீர்களானால் நீங்களும் முன்னேறிப் போவதற்கு உதவியாயிருக்கும். உங்கள் திறத்தைக் காட்ட இதுவே தக்க சமயம். உண்மையாய் உழைப்பவர்களை அங்கீகரிப்போம். உங்களுடைய உத்தியோகத்தையும் வருமானத்தையும் உயர்த்துவோம். கிராமச் சீர்திருத்த வேலைக்குஉபாத்தியாயர்களிலிருந்தே தக்க தொண்டர்களைத் தெரிந்தெடுக்கும் காலமும் விரைவில் வரலாம். கிராமச்சீர்திருத்த வேலையென்றால் ஆரம்பத்தில் கஷ்டமாகவே தோன்றலாம். மெள்ளச்சென்றால் எளிதில் முடியும். நீங்கள் ஒரு சிறிதும் கலங்கவேண்டாம் கங்கணம் கட்டிக்கொண்டு காரியத்தை தொடங்குங்கள். விரைவில் வெற்றியடைவீர்களென்பது திண்ணம்.

---

**சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.**

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைகளைபடிக்கவிடும் பெற்றோர்களும், பிள்ளைகளின் வயிற்றுப்பிழைப்புக்கு ஏதாவது வழி ஏற்பட சற்றுப் படிக்க வேண் என்கிற எண்ணத்தோடுதான் தமது பிள்ளைகளை படிக்க வைக்கின்றார்களே யொழிய அவர்களும் படிப்பை வயிறுப் பிழைப்பைத்தவிர வேறு காரியத்திற்கு கருதுவதில்லை. உங்கள் ஜில்லா தாலுக்கா போர்ட்டுகளும் முனிசிபாலிட்டிகளும் கூட அந்தக் கருத்துடன் தான் பள்ளிக்கூட நிர்வாகம் செய்துவருகின்றார்கள். கடைசியாக சர்க்காரும் கூட இவ்வளவு வரிப்பணத்தை படிப்புக்காக செலவு செய்தும் படிப்பு இலாக்கா விஷயத்தில் எவ்வளவோ கவலை செலுத்தியும் வந்தாலும் தங்கள் அரசாங்கம் தங்கள் இஷ்டப்படி நடைபெற கூலிகளைத் தயார் செய்யும் கருத்தோடு தான்செய்கின்றார்கள். அதனால் தான் பலவழிகளிலும் தற்கால கல்விக்கு வயிற்றுப் பிழைப்புக்கல்வி என்றும் அடிமைக் கல்வி என்றும் சொல்லப்படுகிறது. மனிதனுக்கு கல்வியின் அவசியமெல்லாம் மனிதன் தன் அறிவைவளர்க்கவும் அவ்வறிவால் தான் இன்புறவும் மக்கள் இன்புறவுமான தன்மை ஏற்படவும் அனுகூலமானதாக இருக்கவேண்டும் என்பதற்கே. இப்போதையகல்விஎவ்வளவு அதிகமாககற்றவனானாலும் அது அவனது அறிவுக்கு ஒருசிறிதும் சம்மந்தமில்லாததாகவே இருக்கின்றது. எவ்வளவு பெரிய கல்வியும் ஒரு கலையாகவும் தொழிலாகவும் போய்விட்டதேயல்லாமல் பகுத்தறிவுக்கு ஒரு சிறிதும் பயன்படுவதாக இல்லை. ஒரு நிமிஷத்திற்கு 100 கவி பாடக்கூடிய வித்வானானாலும் அவன் அக்கவி பாடுவதில் அதாவது ஒரு நிமிஷத்திற்கு நூறு அச்செழுத்தை கோர்க்கும் ஒரு கம்பாசிட்டருக்கு சமானமான தொழிலாளிதானே யொழிய அவனை ஒரு பெரிய அறிவாளி என்று சொல்லிவிட முடியாது. அதுபோலவே ஒரு பாட்டுக்கு நூறு அர்த்தம் சொல்லக்கூடிய ஒரு பண்டிதனோ ஒரு பாஷ்யக்காரனோ என்பவன், ஒரே தோலில் நூறு விதமான செருப்புத் தைக்க கற்றுக்கொண்ட ஒரு சக்கிலிக்கு மேலானவனென்று சொல்லிவிட முடியாது.

ஒருபாட்டுக்கு நூறு அர்த்தம் சொல்லும் பண்டிதனுக்கு எப்படி செருப்பு தைக்கத் தெரியாதோ அதுபோலவே சக்கிலிக்கும் அர்த்தம் சொல்லத் தெரியாது. ஆனாலும் இருவர்களும் இரு தொழிலில், இருவித்தையில் சிறந்தவர்களே ஒழிய அறிவாளிகள் என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக சில பெரிய சட்டம் படித்த வக்கீல்களைவிட சிறிய சட்டம்படித்த வக்கீல்கள் கெட்டிக்காரர்களாய் இருக்கின்றார்கள்.

சிலருக்கு படிப்பெல்லாம், நெட்டுருப்போட்டு ஒப்புவிக்கமுடிகிறதல்லாமல் தங்களுக்கு ஒரு காரியத்திற்கும் உபயோகப்படுவதில்லை.

உதாரணமாக ஒரு பெரிய விஞ்ஞான சாஸ்திரி அதாவது சைன்ஸ் படித்த பண்டிதன் ஒரு புளியமரத்தடியில் பேய் இருப்பதாக யாராவது சொல்லிவிட்டால் அந்தப் புளியமரத்தடியில் நடக்க நேரும்போது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நடுக்கத்துடன் நடக்கின்றான். தன் பெண்ஜாதியை பேயோட்ட கோவிலுக்கு அனுப்பிக் கொடுக்கிறான், உடற் கூறும் அதன் சிகிச்சையும் படித்த பெரிய பண்டிதனான ஒரு டாக்டர்கூட தன் பெண்ஜாதியோ மகளோ வீட்டிற்கு தூரம் என்றால் உடனே வெளியில் உட்காரவைத்து விடுகின்றான்; அல்லது கோழிக்கூடுபோன்ற சிறு அறைக்குள் இருக்கச் செய்துவிடுகின்றான், அல்லது நிழல் மேலே பட்டால் தீட்டு என்று சொல்லிவிடுகின்றான். இரவில் வெளியில் தள்ளி கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே படுத்து தூங்குகிறான். தனது குழந்தை நொண்டியாய்ப்பிறந்தால், தான் முன் ஜன்மத்தில் செய்த வினை என்று வருத்தப்படுகின்றான்.

பெரிய வான சாஸ்திர பண்டிதன் கிரகணத்தின்போது ஊறுகாய்ச்சட்டியில் அருகம்பில்லைப்போட்டுவிட்டு கிரகணப் ஆரம்பிக்கும்போது ஒரு முழுக்கும் நீங்கும்போது ஒரு முழுக்கும் போடுகிறான். பெரிய ஞான சாஸ்த்திர பண்டிதன் எப்பவனும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட ஊருக்குப்போனால் மோட்சமென்றும் குறிப்பிட்ட குளத்து தண்ணீரில் (அது எவ்வளவு அழுக்காயிருந்தாலும்) முழுகினால் தான்செய்த அக்கிரமங்களின் பலன் எல்லாம் தீர்ந்துவிடும் என்றும் நினைத்துக்கொண்டு முழுகிவிட்டு இதுவரையில் செய்த பாவம் எல்லாம் தீர்ந்துவிட்டது என்று தன்னை தைரியப் படுத்திக்கொண்டு புதுக்கணக்கு போட்டு மறுபடியும் அக்கிரமங்களைச் செய்ய தைரியவானாகி விடுகிறான். பெரிய ஸ்தாவர சாஸ்திரமும் ஜீவ ஜெந்து சாஸ்திரமும் படித்தவன் நாயைக்கொன்றால் பாவம் இல்லை, நரியைக் கொன்றால் பாவம் இல்லை, கெருடனைக்கொன்றால், குரங்கைக் கொன்றால் பாவம் என்கிறான். பால் சாப்பிட்டால் மாம்ச பக்ஷணமல்ல, ஆடு, கோழி சாப்பிட்டால் மாம்சபக்ஷணம் என்கிறான்.

இம்மாதிரி எத்தனையோ காரியங்களில் படித்தவர்கள் என்பவர்களின் நிலைமை அறிவுக்கும், படிப்புக்கும் சம்மந்த மில்லாமலே இருக்கின்றது எப்படி பல புஸ்தகங்கள் நிறைந்த அலமாரிக்கு ஒரு சிறிதும் புஸ்தகங்களின் தன்மை தெரியாதோ அதுபோலவே பல புஸ்தகங்களையும் அலமாரிக்கு பதிலாக அவைகளை உள்ளத்தில் வைத்து இருக்கிறதாகக்காணப்படும் நகரும்அலமாரிகளான பண்டிதர்கள் கடுகளவுபகுத்தறிவும் புஸ்தகத்தின் தன்மையும் அறியாதவர்கள் அனேகர்கள் இருப்பது எனக்குத்தெரியும். எனவே கல்வி என்று பெயர் வைத்துக்கொண்டு நாம் செய்யும் இம்மாதிரியான அநேக பிரயத்தனங்கள் மக்களின் ஒரு சிறு பகுத்தறிவிற்கும் உபயோகப் படாமலே இருந்து வருகின்றது. உதாரணமாக நமது நாட்டின் சரித்திரம் என்பதாக சொல்லப்படும் எந்த பழஞ்சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும் அதில்மற்ற நாட்டார்எல்லோரையும்விட நாம் மேல் நிலையில் இருந்ததாகவே காணப்படுகின்றது. ஆனால் இன்று நாம் இருக்கும் நிலையானது மற்ற எல்லா நாட்டாரின் நிலைமையைவிட தாழ்மையாகவே இருக்கின்றது.

(தொடரும்) நமது நிரூபர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தும் மதக் குறிகளிடுவதைத் தவிர்க்கவேண்டும்' சிறந்த பக்திமான்கள் மதக்குறிகளிடுவதை விரும்பினதில்லை மதக்குறிகள் தினத்தவறாமல் நெற்றியிலணிந்து கொண்டால் தான் கடவுள் கருணை கூர்வார் என்பது பெரிய மடத்தனமாகும்.

இவைகளெல்லாம் தமிழரிடை ஆரியர்களாலேயே புகுத்தப்பட்டன. ஏனெனின், தமிழர்களின் அனுஷ்டானத்தில் இருந்த தெய்வம் உருவமற்றதாகையால் மதக்குறி என்னவென்பதையே அவர்கள் அறிய மார்க்கமில்லாது போயிற்று. ஆரியர்கள் நாளடைவில் உருவங்களை யெல்லாம் தம்முடையனவாக்கி, (தாம் பிழைக்க உருவங்களைக் கருவியாக அமைத்துக்கொண்டு) மந்திரங்களையும் தந்திரங்களையும் உற்பத்தி செய்து மந்திரத்திற்கு கட்டுபட்டவர் கடவுளென்றும், மந்திரம் தமக்குள் எடங்கினதென்றும், ஆகவே, தாங்கள் கடவுளுக்குச் சமமாகையால் கடவுளுக்குச் செலுத்தப்படும் எல்லாவிதக் காணிக்கை முறைகளைத் தம்மிடம் செலுத்தினால் மோக்ஷத்திற்குசீக்கிரம்போகலாமெனக்கூறிப் பாமரர்களுக்குப் பரலோகத் தரகர்களாய் இருந்து வந்தனர். இவைகளை யெல்லாம் நாம் சிந்தித்துணராமலும், நம் மூதாதையர்களின் அரிய கொள்கைகளையும் நோக்கங்களையும் அலட்சியம் செய்து வந்ததினாலும் இன்று சேற்றிலுழலும் புழுக்களாகி பிறர் ஏமாற்றலுக்கு உட்பட்டு, மதில்மீதேறிய பூனையைப்போல் விருக்க நேர்ந்து விட்டது. ஒருகாலத்தில் உலகத்தினருககே தெய்வ வழிபாட்டிலும் மதக்கொள்கைளிலும் தலைமை வகித்த தமிழர் இக்காலத்தில் அறிவிழந்து,வணங்கும்உருவங்களின் தொகையும் அவைகளின் உற்றுருறவினரின் தொகையும கணக்கிலடங்காமல் இருக்கின்றன வெனின், எவ்வளவு வருத்தம் உண்டாகிறது? நேயர்களே! உருவங்களின் எண்ணிக்கை பெருகப் பெருக உண்மை பக்தி அருகி வருகிறதென்பதை உணருங்கள். உருவமில்லாவிடில் கடவுளைப்பற்றிய எண்ணமே மனதில் உண்டாகாதெனவும், கோயில் உருவங்களைப் பார்த்தவுடனேயே மனிதருக்குப் பக்தி பெருகி வழிந்தோட ஆரம்பிக்கிறதெனவும், ஆகவே, உருவங்கள் அவசியம் இருந்தேதீர வேண்டுமெனவும் ஒரு சாரார் வாதித்து வந்திருக்கின்றனர்.

நாம் முஸ்லீம்களை எடுத்துக்கொள்வோம். முஸ்லீம்கள் உருவ வணக்கத்தை அடியோடு வெறுக்கின்றனர். அவர்களெல்லோரையும் அதைக்கொண்டு தெய்வபக்தி யற்றவர்களெனக் கூறிவிட முடியுமா? அவர்கள் எவ்வித மதக்குறியும் இடுவதில்லை; அதனால் அவர்களுக்கு மோட்சம் சித்திப்பதில்லையா? அவர்களிற் சிறந்த பக்திமான்கள பலரிருக்கின்றனர். அத்தகையவர்கள் எத்தகைய விக்கிரகங்களின் மூலம் பக்தி வாய்பெற்றார்கள் என்பதே நம் வினா. தவிர, கிறிஸ்துவர்களில் பிராட்டஸ்டெண்ட்டுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுள்ளும் பக்திமான்கள்பலரிருக்கின்றனர். அவர்களுக் கெல்லாம் பக்தி எங்கிருந்து உண்டானது? எந்தெந்த உருவங்களை அவர்கள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி வணங்குகிறார்கள்? என்பதுதான் தெரியவில்லை. மார்க்கமறியாத சில முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும் உருவங்களுக்குச் சமமாக சிலுவையையும், பச்சைத் துணியையும், பெட்டியையும், வணங்குகின்றனெனக் கூறுகின்றனர். அவைகளெல்லாம் பொய்யென்றும் அறிவற்ற தன்மை யென்றும் நாம் கூறுகிறோம்' அதுபோக, ஆயிரக்கணக்கான உருவங்களை வைத்துக்கொண்டு வணங்கி வருவதினால், மூடநம்பிக்கைகள் அதிகப்பட்டுக் கொலைஞராயும், அறிவீனராயும், மதுபானிகளாயும் போவதற்கு வழி ஏற்பட்டு வருகிறது.

தமிழர்களே! நாம் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. நமக்கு உண்மை பக்தி உண்டாவதற்கு உருவங்கள் வேண்டியதில்லை பலியிடும் களங்கள் வேண்டியதில்லை நமக்கும் கடவுளுக்கு மிடையில் தரகர்களும் பிரதிநிதிகளும் தேவையில்லை. வேலையாட்களின் உதவிதேடும் கடவுளர்களும்பூசாரிகளும். பார்ப்பனர்களும் கோயில்களும் தேவையில்லை. வேசையர்களை நாடிவரும் துஷ்டர்களின் கூட்டுறவும் நமக்கு வேண்டியதில்லை. வேற்றுமையைக் குறிக்கும் மதக்குறிகளே அவசியமில்லை. நம்மைக் கூட்டோடு மோட்சத்திற்கு அனுப்பும் மந்திரங்கள் வேண்டியதில்லை. பின் நமக்கு வேண்டியதுதானெது?

நமது கவலைகளை மறந்து,நமது குறைகளைப்போக்கும்படி நாமே கடவுளரிடம் முறையிட்டுக் கொள்வதற்கு ஏற்ற நிர்மலமான தூய ஸ்தலமொன்றே நமக்கு அத்தியாவசியமாகும் இக்காலத்தில் விளங்கும் ஆதாரமற்ற முறையைத் தமிழர்கள் தொலைத்து விடவேண்டும். அந்தோ! மேன்மையான தமிழ் மக்கள் இந்நிலை எய்தியது முற்றும் வருந்தத்தக்கதே. இனியேனும் தமிழ் மக்கள் தாங்கள் கைக்கொண்டிருக்கும் மூடக் கொள்கைகளைத் துறந்து உண்மை தெய்வ பக்தர்களாய்ச் சன்மார்க்க மதத்தினராய் உலகத்தில் தலைமை ஸ்தானத்தை வகிக்க வேணுமாய்த் தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். (சை—இ.)


## சட்ரவல லேகியம். (சட்னி)

இவை அநேக விதமான மூலிகைகளினாலும் காபூல் திராக்ஷி ரசத்தினாலும் தயாரிக்கப்பட்டது குணம்:—மலபந்தம், அஜீர்ணம், வாய்வு நோய், வயிற்று வலி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும். சாப்பிடும் முறை:— சுடுகிற சாதத்தில் ½ துலம் இந்த லேகியத்தை நெய் போட்டுக் கொண்டு கலந்து சாப்பிடவும்.

டின் ஒன்றுக்கு கிறயம் ரூ. 0—8—0.

## ரத்தன் மிலரி அல்வா.

நீரான இந்திரியத்தை கெட்டி செய்யும். தாது விருத்தியாகும். ஸ்திரீ சம்போகம் சுகங்கொடுக்கும். சொர்ப்பன ஸ்கலிதம், மூத்திரத்தில் பொட்டு பொட்டாய் வீரியம் போகிறது, ஸ்திரியை கண்டவுடன் வீரியம் ஸ்கலிதமாய் சம்போகத்தின் பேரில் பிரியம் இல்லாமல் போகிறது. துர்அப்பியாசத்தினால் பும்ஸத்துவம் இல்லாமல் இருக்கிறது. ஆகிய அநேகவிதமான மேக வியாதிகள் முதலானவைகளை போக்கடித்து விடும்.

கிறயம் டின் 1-க்கு ரூ. 2—8—0.

மேல்கண்ட மருந்துகள் ஈரோடு, கோயமுத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, இந்த இடங்களில் கிடைக்கும்.

ஆஞ்சநேய ஜோதிஷ ஆலயம்,
நகர்த்து பேட்டை,
பெங்களூர் சிட்டி

## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் துட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவு சுலபமாய் நிச்சயிக்கலாம். என்னிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக குறிப்பாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.



கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீப்பிள், ஜி. டி. மதராஸ்

இதை கவனியுங்கள்.

# மதனராஜதீப ஹல்வ விற்து

## 20—4—28-ல் ரெங்கோன் கடிதம்.

கனம் பொருந்திய மாயவரம் ஹக்கீம் ம. அ. ஷம்சுதீன் சாஹிப் அவர்களே உங்களுக்கு என்மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன். தாங்களனுப்பிய மதனராஜதீப ஹல்வாவை உபயோகித்து வந்ததில் நான் அனுபவித்த குணத்தையும் என் மன சந்தோஷத்தையும் தங்களுக்குத் தெரியப்படுத்தாமலிருக்க முடியவில்லை. ஷை அல்வா நல்ல முறையாயும் மேலான சரக்குகளாலும் செய்யப்பட்டிருப்பதற்கு அந்த அல்வாவில் இருக்கும் மதனமும் வாசனையும் அது செய்யும் மேலானகுணத்தாலும் அதுவே எனக்குத் தெரியப்படுத்துகிறது. பசியின்மை, மலச்சிக்கல், தேக அசதி, சோம்பல், இன்னும் பற்பல துற்குணங்களெல்லாம் நீங்கி நல்ல பசியும், வேலை செய்ய சுறுசுறுப்பும், நல்ல நித்திரையும் அல்வா சாப்பிட துவக்கினது முதற்கொண்டே அதிகரித்துக்கொண்டே வருகிறது ஷை அல்வா சாப்பிட்டால் சிரசிலிருந்து பாதம் வரையிலுள்ள நரம்புகள் பூராவுக்கும் ஓர் மின்சார சக்தி வேலை செய்வது போல் நரம்புகளுக்கு முறுக்கேற்றி நல்ல ரத்த ஓட்டத்தையும் உண்டாகுகிறதென்பது என் மனககண்ணுக்கு நன்றாகத் தெரியவருகிறது, மேற்படி அல்வா சாப்பிடத் துவங்கிய ஒன்று இரண்டு வாரத்திற்கெல்லாம் பூரா நரம்புகளுக்கும் முறுக்கேற்றி ஓர் விதமாறுதலும் பளபளப்புந்தேகத்தில் உண்டாக்கி நீற்றுப்போயிருந்த இந்திரியம் கெட்டிப்பட்டு நல்ல ஆண்மையும் உண்டாக்கி விடுவதால் சம்சார வாழ்க்கையிலிருக்கும்போது உள்ள சந்தோஷத்தை உங்களுக்கு எழுதித்தெரிவிக்க வெட்கப்படுகிறேன். ஆனால் மேற்படி அல்வா சேர் ஒன்றுக்கு ரூபாய் பன்னிரெண்டாக (ரூபாய் 12—0—0) இருப்பது அதிக விலை என்று பலர் எண்ணக்கூடும். மேற்படி அல்வாவை வரவழைத்து சாப்பிட ஆரம்பித்து விட்டாலோ அதன் விலை பாதியென்றே பிறகு எண்ணக்கூடும். ஆகையால் என் ஆர்டர்களுக்கு நீங்கள் கொஞ்சமும் சுணங்காது ஒவ்வொரு சோராக பார்சலில் அனுப்பிக்கொண்டேயிருக்கும்படி தயவாகக் கேட்டுகொள்ளுகிறேன். இந்த அல்வாவை நீடித்த நாள் சாப்பிடவேண்டுமென்றும் தீர்மானித்தும் உள்ளேன். இவ்விடத்தில் என் நண்பர்கள் ஒவ்வொருவரும் உங்கள் அல்வாவை சாப்பிட்டு என்னைப்போலவே மனசந்தோஷத்தை அடைந்திருக்கிறார்களென்பதையும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். ஆர்டர்களுக்கு சுணங்காமல் பார்சல் செய்து அனுப்புங்கள்.

இப்படிக்கு,

**ஆர். எம். கே. ஆர். சாமி,**

லோன் மணி லெண்டர் அண்டு டவுன் பில்டிங், புரோக்கர்,

ரெங்கோன்,

# தேகாரோக்கியமே சிறந்த பூஷணம்!

அம்ம! கொடிய கோடை ஆரம்பித்துவிட்டது. சகிக்கமுடியாத இந்த வெயிலினால் ஏற்படும் தேக அசௌக்யங்களுக்கு கணக்கேயில்லை. சாதாரண தலைவலி முதல் கொடிய மலேரியா சுரம் ஏற்படக்காரணமாயிருப்பது இந்த வெயிலே! ஆகையினால் ஒவ்வொருவரும் முன் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியம். கோடைகால உபயோகத்திற்கென்றே ஸ்பெஷலாய் தயார் செய்திருக்கும்:—

(பண்டித. டி. கோபாலாச்சார்லு அவர்களின்)

## ஜீ வா மி ரு த ம்

வெயிலின் கொடுமையால் வாடி வதங்கியவர்களுக்கும், மெலிந்த தேகிகளுக்கும், புதிய இரத்தத்தையும், போதிய புஷ்டியையும் அளவற்ற உற்சாகத்தையும் கொடுத்து புத்துயிரளிப்பது. எவ்வித வியாதியால் வருந்தும் நோயாளிகளுக்கும் நமது ஜீவாமிருதம் ஓர் தேவாமிர்தம் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை. ஒரே புட்டி மருந்து உங்களுக்கு இந்த உண்மையை விளக்கும்.

**விலை புட்டி 1க்கு ரூ. 3—4—0.**

## அ மி ரு தா ம ல க தை ல ம்

புராதீன, சாஸ்திரீய ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்டது. தினசரி ஸ்நானத்தில் இதை சிறிதளவு உபயோகித்து வந்தால், மூளைக்கும் சிரசுக்கும், மற்றுமுள்ள எல்லா அவயவங்களுக்கும் போதிய குளிர்ச்சியைக் கொடுத்து உஷ்ணத்தின் உக்ரமிப்பை தணிக்கக்கூடியதும், வெயிலில் வேலை செய்வோருக்கும், ஆபீஸ் குமாஸ்தா, மானேஜர் முதலிய மூளை வேலையுள்ளவர்களுக்கும், உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்!

**விலை புட்டி 1க்கு ரூ. 1—0—0.**

இன்றே உங்கள் ஆர்டரை அனுப்பி விடுங்கள்,

**ஆயுர்வேதாசிரமம்,**

**151, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, தபால் பெட்டி 287, சென்னை.**

ரோஜா முத்தையா

# மதன ராஜதீப ஹல்வா.

தங்கரேக், வெள்ளிரேக்குகளும், உயர்ந்த பழவர்க்கங்களும், வித்துக்களும், உயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இந்த மதன ராஜதீப ஹல்வாவின் குணங்கள் அடியில் கண்டிருக்கும் கடிதங்களால் நன்கு விளங்கும். ஷை கடிதங்களும் அதிகமாய் புகழ்வதையும் குறைத்து சாராம்சத்தை மட்டும் குறிப்பிட்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஏ. டி. பன்னீர் செல்வம் பார்-அட்-லா அவர்களால்:—

நான் மதனராஜதீப ஹல்வாவை சாப்பிட ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள்ளேயே எனக்கு வேலை செய்ய முன்னிருந்த அசட்டைக் குணம் மாறி எவ்வளவு வேலையானாலும், செய்யக்கூடிய ஊக்கத்தைக் கொடுக்கிறதென உணர்ந்தேன். இது தாது புஷ்டி உண்டாக்குவதிலும, சரீரம் களைத்துப்போய் சக்தியற்றிருப்போருக்கும் குணம் கொடுப்பதில் இதைவிட வேறு எதையும் ஒப்பிட்டுச் சொல்லமுடியாது.

(ஒப்பம்) ஏ. டி. பன்னீர் செல்வம். 31—8—27.

தஞ்சை ஜில்லா மாயவரம் தாலுகா கீரங்குடி அ. பக்கிரிசாமி ராவுத்தர் அவர்களால்:—

நான் சிங்கப்பூரில் நார்த்து பிரீச்சுரோட்டில் 676, 705 நெ. கடைகளில் இருந்தேன். வெகு நாளாய் இளைப்பும், இருமலும், நீர் ரோகமும் (அதிக நீர் பிரிவது) மாய் இருந்து தேகம் மெலிந்து விட்டபடியால் ஊர் வந்துவிட்டேன். பலவித மருந்துகள் சாப்பிட்டும் குணமில்லாமல் ஜனாப் ஹக்கீம் ம. அ. ஷம்சுதீன் சாகிப் அவர்கள் தயாரித்திருக்கும் மதனராஜ தீப ஹல்வா சாப்பிட்டேன்; இதுவரை 1½ சேர் சாப்பிட்டிருக்கிறேன். என் தேகத்தை முன் கண்டவர்கள் இப்போது ஆச்சரியப்படுகிறார்கள். இருமல் இல்லை, இளைப்பு இல்லை, நீர் பிரிவதும் இல்லாமல் தேக திடமாயும், வீரிய விர்த்தியாயும் தாது புஷ்டியும் அடைந்து சுகமாக இருக்கிறேன். கூடிய சீக்கிரம் சிங்கப்பூர் ஷை கடைக்கு பயணம் புறப்பட இருக்கிறேன். ஷை ஹல்வாவின் உயர்வு என்னால் கடிததகில் எழுத முடியாது! தேக புஷ்டி உண்டாக்கி, தேகதிடம் தருவதில் இதைவிட உயர்வானது வேறு ஒன்று இருக்கும் என்று என்னால் சொல்ல முடியாது. 3—4—28.

(ஒம்ப்ப) அ. பக்கிர்சா ராவுத்தர்.

மகா-ள-ள-ஸ்ரீ ஆர். எம், கே. ஆர். சாமி புரோக்கர் அவர்கள் C/o மிஸ்டர் கே. ஏ. ஐ. தாஸ், இன்ஸ்பெகடர், ஜெனரல் ஆப், ஸிவில் ஹாஸ்பிடல்ஸ் ஆபீஸ், இரங்கூன்.

தங்கள் மதன ராஜதீப ஹல்வா ஒருவாரமாக சாப்பிட்டு வருகிறேன்; ஆனால் என் தேகம் முன்னிருந்த நிலைமைக்கு இப்போது சுருசுருப்பு, மல சுத்தம், பசி தாகமும் உண்டாக்கி தேக அசதி முதலியன நிவர்த்தியாகி வருகிறது என்பதை தங்களுக்கு ரொம்ப அன்புடனும், மன சந்தோஷத்துடனும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். ஒப்பம்) ஆர். எம். கே. சாமி, புரோக்கர். 17—2—28.

சேலம் ஜில்லா ஆரகளூர் ஜனாப், கோ. மீ கா. முகம்மது மீரான் சாகிப் அவர்களால்:—

மதன ராஜதீப ஹல்வாவில் அரைச் சேர் சாப்பிட்டதில் உஷ்ணம் தணிந்தது, மலச்சிக்கல் நீங்கிற்று, வாயுவை கண்டித்தது. தூக்கம் நன்றாய் வருகிறது. கைகால் அசதி நீங்கிற்று. தாதுவிருத்தி அதிகரிக்கிறது.

(ஒப்பம்) கோ. மீ கா. முகம்மதுமீரான் சாகிப். 2—10—27.

குற்றாலம் அஞ்சாறுவாத்தலை ரைஸ்மில் மகா-ள-ள-ஸ்ரீ நாராயணசாமி செட்டியார் அவர்களால்:—

எனக்கு நல்ல பசி இல்லாமையும், தூக்கமின்மையும், நடக்க சக்திக்குறைவும், மலச்சிக்கலும், தேகம் இளைத்தும் இருந்தது. மதனராஜதீப ஹல்வா சாப்பிட்டதில் ஷை துர்க்குணங்கள் யாவும் நீங்கி, நல்ல தாது புஷ்டி, வீரிய விர்த்தி உண்டாகி இருக்கிறது.

(ஒப்பம்) நாராயணசாமி செட்டியார். 8—2—28.

மாயவரம் கீழவீதி ஹைக்கோர்ட் வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ எம். வேங்கடாசலம் பிள்ளை அவர்களால்:—

மதனராஜ தீப ஹல்வாவை நான் சாப்பிட்டுக் கொண்டு வருகிறேன். மெலிந்த தேகத்தையும் தளர்ந்த நரம்புகளையும் வலுப்படுத்தி இயற்கையால் நேருகிற ஒய்வை நீக்கி தேக திடத்தைக் கொடுப்பதில் இது நிகரற்றது.

(ஒப்பம்) எம். ஏ. வெங்கிடாயலம் பிள்ளை. 5—12—27.

மாயவரம் First Grade Pleader மகா-ள-ள-ஸ்ரீ எஸ் ஏ. ஸ்ரீனிவாச ஸர்மா அவர்களால்:—

மதனராஜதீப ஹல்வாவை நான் உபயோகித்து வருகிறேன். அதனால் ஒய்வு நிவர்த்தியும், தேகத்தில் சுருசுருப்பும், பலமும் எற்படுகிறது. இது மிகவும் சிலாக்கியமான மருந்து. (ஒப்பம்) எஸ். ஏ. ஸ்ரீனிவாச ஸர்மா. 6—12—27.

நீடூர் மதரஸா மானேஜர் ஜனாப் ஹாஜி மௌல்வி எம். அப்துல்கரீம் சாகிப் அவர்களால்:—

தங்கள் ஹல்வா ஒரு சேர் சாப்பிட்டதில் இப்போது என் சரீர வலுவும், நரம்பின் முறுக்கும், வெகுகாலம் இளகலா யிருந்துவந்த மலம் இருகலாயும், மெலிந்த தேகம் பெருத்தும், நீண்ட நாளாயிருந்த வயிற்றிரைச்சலின் சொஸ்தமும், ஜீரணப் பெருக்கும் எனக்கு உண்டாகி சுகமாயிருக்கிறதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். (ஒப்பம்) எம். அப்துல்கரீம், நீடூர். 2—10—27.

நாகர் கோவில் கிருஷ்ணன் கோவிலில் இருக்கும் ஆயுர்வேத வைதிய ஆராய்ச்சியுடையவர் விஷ வைத்தியர் இரத்தின வியாபாரி ஜனாப், பீ. சையத் அகமத் சாகிப் அவர்களால்:—

மதன ராஜதீப ஹல்வாவை நான் உபயோகித்ததில் என் சரீரத்திற் கேற்பட்டிருந்த நாம்பிசுவுகளுக்கு ஆச்சர்ய நிவர்த்தி உண்டாய் என்று மில்லா பலமும் சுருசுருப்பும் மனதிற்கு உற்சாகமும் எற்பட்டு விட்டது. ஆகவே இந்த ஹல்வாவை ஒரு மண்டலம் உபயோகிப்பவர்கள் சுவசனம், ஹிருத்ரோகம், பிலீஹம், சோபை, அதிசாரம், கிரஹணி விஹாரம், மூத்திரஹஸ்மரி, காமலா என்னும் உதர ரோகம் முதலியவைகளைக் கண்டிப்பதில் கிராக்ஷேப முடையது என, எனது அனுபோகத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உள்ள எனது நிர்தாக்ஷண்ய அபிப்பிராயம். (ஒப்பம்) பீ. சையத் அகமத் சாகிப். 15—12—27.

தரங்கம்பாடி யூனியன் போர்டு பிரசிடெண்டு மகா-ள-ள-ஸ்ரீ கே. ஸி. ராஜதுரை செட்டியார் அவர்களால்:—

மதன ராஜதீப ஹல்வாவினால் என் உடலிருந்த வலி நீங்கிற்று, கெட்ட இரத்தம் சுத்தமடைந்தது. முழங்கால் வலி நீங்கிற்று. எவ்வளவு தூரமானாலும் என்னால் நன்றாய் நடக்க முடிகிறது. நன்றாய் பசி எடுக்கிறது. மூத்திரக் கெடுதலும் நீங்கிற்று.

(ஒப்பம்) கே. ஸி. ராஜதுரை. 12—12—27.

முக்கிய குறிப்பு:— அளவுக்குமீறி அதிகம் பெருத்த தேகிகட்கும், அதிகமான பித்தமயக்கமுடையோருக்கும் இது அதிக பயன்தராது. 48-நாள் உபயோகிக்கக்கூடிய ஹல்வா சேர் 1-க்கு விலை ரூ. 12. ஷை சேர் ½-க்கு விலை ரூ. 6—4—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியோகம்) மலாய் தேசம் முதலிய வெளிநாடுகளுக்கு தபால் செலவுடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

விலாசம்:— ஹக்கீம் ம. அ. ஷம்சுதீன் சாஹிப்,
புதுபள்ளிவாசல் தெரு. மாயவரம், தஞ்சாவூர் ஜில்லா, (தென்னிந்தியா)



நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தா தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

**பழனி. சி. எம். சாமி**

# குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி. பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்குபூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும் அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ

" " நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.
பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.
பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.
ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

சென்னைபிராஞ்சுஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை

## ஆநந்த குணபோதினி.

மூன்றும் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தா சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தா தார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## பொருள் செய்வகை.

(விலை ரூ. 1)

திரவியோற்பத்தி செய்யும் அநேக இரகசியங்களையுடையது. அநேக வியாபார தந்திரங்களடங்கி யிருக்கின்றன. இது கதையல்ல, நாவலல்ல, கைத்தொழிற் சாஸ்திரமல்ல. மிகுந்த் திரவியம் சம்பாதிக்க விரும்புவோர் கற்க வேண்டிய வியாபார சாஸ்திரம். எல்லா வியாபாரிகளுக்கும் அவசியமானது. கிரம வியாபாரம், துணிந்து செய்யும் வியாபாரம், ஒப்பந்த வியாபாரம், முதலில்லாமற் செய்யும் வியாபாரம, தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறியும் விவரம், இன்னும் அநேக இரகசியங்களும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியத்தை சம்பாதிக்க வல்லவாாவார்கள்.

### ஸத்ய தேவி
அல்லது
### தர்ம சங்கடம்.

பிரஞ்சு பாஷையில் மிகப் பிரசித்திபெற்ற கொர்ளேய் என்பவரால் எழுதிய சரித்திரங்களில் ஒன்றை அனுசரித்து இந்த ஸத்ய தேவி எழுதப்பட்டிருக்கிறது. வாசிக்க வாசிக்க மிகவும் இன்பத்தைக் கொடுக்கும். அருமையான படங்கள், இனிய காதல், ஒப்பற்ற வீரம் இவைகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற நாவல் இதுவே. இதன் விலை ரூபாய் 1.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

## டிடக்டாவ்
அல்லது
## துப்பு இரகசியம்
## அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்துகொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.



இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த ஜாதக நகல் அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவித்தால் உங்களுடைய எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், குணம், சத்ரு, களத்திரம், ஸந்தானம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரையம் ஆகிய இத்யாதி விஷயங்கள் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் எழுத ரூ. 5.

ருமநாதபுரம் ஜில்லா அ. சிறுவயல் ஒ. ஆர். எம். இராமனுதன் செட்டியார் எழுதுவதாவது:- அன்பார்ந்த ஐயா! உபய க்ஷேமம். நீங்கள் அனுப்பிய ஜாதகம் வந்தது. அதில் அநேக விஷயங்கள் மனதிற்கும் நடவடிக்கைக்கும் பொருத்தமாய் இருக்கின்றது. மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்,
வைத்திக் குப்பம், புதுவை.
(பிரஞ்சிந்தியா).

சுயமரியாதை அடைய,
பார்ப்பனியம் ஒழிய,
**'திராவிடன்' 'குடி அரசு'**
பத்திரிகைகளை வாசியுங்கள்.

## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே குவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினுல் அனுப்பித்தருகிறோம்,

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

ஓர் அரிய தமிழ் **'எங்களூர்'** வசன நூல்

"எங்களூர்" திருவாளர் உ. வே. கோவிந்தசாமி ராஜூ அவர்கள், பி. ஏ. எல் டி. எழுதியது; காலஞ்சென்ற திவான் பஹதூர் L. D. சாமிக்கண்ணு பிள்ளையவர்கள் அருளிய ஆங்கில முகவுரையோடு கூடியது. தமிழ்நடை கற்போருக்கு வழிகாட்டியாயுள்ளது; ஓயா நகைச்சுவை விளைப்பது.

"செந்தமிழ்ச் செல்வி" சென்னை:- இந்நூல் படிக்கப் படிக்க விநோதமாக இருக்கும். இம்மாதிரி நூல் தமிழ்நாட்டிற்கு புதிதாக இருக்கிறது.

"பஞ்சாமிர்தம்" சென்னை:- இந்தப் புத்தகத்தில் கொங்கு நாட்டின் வர்ணனையும் அந்த நாட்டின் வழக்க ஒழுக்கங்களும் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. புத்தகம் நல்ல தமிழில் எழுதியிருப்பதோடு, ஆங்கில முறையில் பெரிய ஆசிரியர் எழுதிய புத்தகங்களோடு ஒத்துநோக்கக் கூடியதாகவும், சந்தோஷமாக பொழுது போக்குக்கு உபயோகப்படுத்தக் கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

விலை ரூபா ஒன்றே. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் R. ரங்கசாமி ராஜூ, எ. எம். ஏ. சி.,
விருத்தாசலம், தென்னாற்காடு ஜில்லா.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

# மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியப்படி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

## ஐந்து (5) குடும்ப ஔஷதங்கள்.

சுயமான கஸ்தூரி தோலா 1-க்கு விலை 1-ம் கெ. ரூ. 75.
2-ம் கெ. ரூ. 50. 3-ம் கெ. ரூ. 40. 4-ம் கெ. ரூ. 35.
குங்குமப்பூ தோலா 1-க்கு விலை ... ... ரூ. 4.
கோரோஜனை ,, ,, ,, ... ... ரூ. 19.
பச்சை கற்பூரம்,, ,, ,, ... ... ரூ. 4.
காபூல் பெருங்காயம் 10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1.
காசி வயிரவர் பிரசாதக்கயிறு 100-க்கு விலை 1-ம் கெ. ரூ. 3.
2-ம் கெ. ரூ. 2½. 3-ம் கெ. ரூ. 2.

உத்திராக்ஷ ஜெபமாலைகள், கண்டிகள், கெவுடு தனி மணிகள், பித்தளைப் பாத்திரம், பட்டு தினுசுகள் சகாய விலைக்கு அனுப்பப்படும். விலை ஜாபிதா இனாம்.

மானேஜர், **பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், செளகார்பேட்டை, மதராஸ்.

**கடவுளை வணங்க**
**பார்ப்பனத்தரகர் வேண்டுமோ!**

## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார் செய்த அருணாக்கொடி தினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு, கடகம், மயிர்மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவி சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம் வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்குக் கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

**S. K. மாணிக்கம் செட்டி,**
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்ப்பேட்டை
சேலம்.

## அசோகி.

ஸ்திரீகளுக்கு உயரிய ஓர் திவ்ய ஔஷதம்.

ஸ்திரீகளுக்கு கர்ப்ப ஆசயத்தில் உண்டாகும் கெடுதல்களாகிய சிறுவயதில் ருதுகம நின்றுபோதல், காலக்கிரமம் தவறி ஆதல், குறைவாகக் காணுதல், அதிகம் காணுதல், ருதுக வயற்றுவலி, பெரும்பாடு ஆகிய சகல கர்ப்பக் குற்றங்களையும் 'அசோகி' என்னும் திவ்ய ஔஷதம் பூரணமாகக் குணப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும் சந்தான விருத்தியையும தருவதில் நிகரற்றது. கர்ப்பகாலத்தில் உபயோகிப்பதால் சுகப்பிரசவம் உண்டாகிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

பாரத டிஸ்பென்ஸரி,
ரங்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்

### ஆரூடம்

எதிர்கால சம்பந்தமாக நியாய விருத்தமான நான்கு கேள்விகட்கு ரூ 1 மேல் ஒவ்வொருகேள்விக்கும் 4 அணாவீதம் எழுதும் நேரத்தை குறிப்பிட்டனுப்பவும்.

### ஜாதகம்.

| | |
|---|---|
| பஞ்சாங்கப்படி கிரக சக்கர பாவசக்கர சகிதம் ஜாதகம் கணிக்க | ரூ 2—0—0 |
| விவாஹ முகூர்த்தம் பார்க்க | ரூ 2—0—0 |
| உபநயனம் கிரஹாரம்பம் கிரகப பிரவேசம், சீமந்தம் முதலானவற்றிற்கு | ரூ 2—0—0 |
| ஜாதகப்பலனுக்கு 1 வருஷத்திற்கு | 2—0—0 |
| ஸ்திரீபுருஷ ஜாதகங்கட்குபரிகார சகிதம்புத்திர ப்ரவத்திற்கு | 10—0—0 |

குறிக்கபடாத மற்றைய விபரங்கட்கு 1 அணா முத்திரை அனுப்பி எழுதித்தெரிந்து கொள்ளலாம முன்பணம்அனுப்புவது இன்றியமையாதது. கடிதப்போக்குவரவு ஆங்கிலத்திலும தமிழிலும.

திரு. சோ. சதாசிவம் பிள்ளை,
ஷண்முக விலாசம், திருவானைக்காவல்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலகமெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்ற பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

# தாளகபற்பம்.

## இருமலுக்கு அனுபத்தில் கைகண்டது.

## உத்திரவாத முள்ளது. புகையாது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது. மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைந்து ஓடிவிடும்.

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும். 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான் 8 மாதகாலமாய் ரத்தகாசவியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயந்திரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும். ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே விசம்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளியேறிக்கொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் துர்வாடையுடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கபம் இருக்கும். தலை சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சக்தியில்லை இந்த நிலைமையில் மதுரை ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். நெல்லிஷன் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப்பார்த்து, தானும் இந்தப்படியே கஷ்டப்பட்டதாயும், தங்களுடைய தாளகபஸ்பம் சாப்பிட்டு சொஸ்தமடைந்ததாயும் சொல்லி தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழாம்நாள் நல்ல எண்ணை தேய்த்து தலைமுழுகியதில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும், இருமல், வாந்தி, கபம்விழுவதும், துர்வாடை வீசுவதும் அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். நல்ல பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நல்ல நிலைமையிலிருக்கிறேன். தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுள்ள வியாதியில் போன உயிரைக் காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொண்டுவா என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வந்து தரிசித்தேன். ப. வீரமலை செட்டியார், சிங்கம்பிடாரி, ராமநாட்: 10—12—24.

ஆஸ்துமா என்பது தீராத ரோகம் அப்படியுள்ள ரோகத்திற்கு நமது தாளபஸ்பம், வகையரா சேர்த்து 20-நாள் சாப்பிட்டு பூரண சொஸ்தமாகி புகழ்ந்து எழுதியதைக் கவனியுங்கள்:— அகண்ட பரிபூரண மண்டலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், கதர் வேலுக்கு எதிர் வேலில்லை என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலத்தம்மாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்துமா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் மேற்படி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூரபத்மனுடைய சைமன்யங்களும், சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன் சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலே நீங்கள் "தெய்வம் மானுஷ ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனை வைத்துக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு சிரோரத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிச்செல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கியதால் நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பியிருக்கிறேன். ஆர் கைலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26.

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே, மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருடமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

**வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.**

ரிஜிஸ்டர்



TRADE MARK

இம் மருந்துகள் மூதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல் வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்சிலும் 25-8-23-ல் சென்னை யில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற் சாக்ஷிப்பத்திரங்கள் வந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன

## தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானால்,

### பழனி ஆர். எம். கே.

# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து!
மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இதிலமைந்திருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை நோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும், பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்தி வாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக் கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம், செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம், பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய் 100. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொடிய வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரதிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் நமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசரி லேகியமும இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவாரும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசரி அல்வாவும் ரூபாய் 50 க்கு வி. பி. செய்யவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்:— தங்களின் அருமையும் பெருமையுமான தங்க பஸ்பமும், சாலாமிசரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குகொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால், அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 80-வெளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம், தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி. செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும், மனத்திருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அனேகருக்கு அனுபோக அத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன், தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம் இவைகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது.) P- Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்தியசாலை, பழனி

தந்தி விலாசம்:— "சித்தர்" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

## லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

# வர்த்தகக் கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ, 119, சென்னை



# மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

## ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னுடிஸ மெஸ்மரிஸ மென்னும்

# மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வயப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸமரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்,



# திரிமூர்த்தி உண்மை

அல்லது

விலை அணு 12 தேவர்களின் இரகசியம் விலை அணு 12

முழு முதற் கடவுள் மூன்றுகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

ரூடன் அண்டு கோ., 14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை



முன் விலை ரூ. 14. இப்பொழுதுரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.



## டேபில் டைம்பீஸ் இனம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.



இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ் டிபார்ட்மெண்ட்

## 5-மீ இங்கிலீஷ்கோர்ஸ்

புது ஆரம்பம் ! முந்துங்கள் !!

100—மாணவர்களுக்கு மேல் எடுக்கப்படமாட்டாது.

வயதாகி விட்டதென்று நினைக்க வேண்டாம். ஹூர்க்ரைட் என்னும் மேதாவி 50-வது வயதில் ஆங்கில இலக்கணம் படிக்க ஆரம்பித்தார். 5மாத கோர்ஸ், ஜூனியர், சீனியர் இம்மூன்று கோர்ஸ்களையும் முடித்து பாஸ் பண்ணினவர்கள் டாக்டர், இன்சினியர், லாயர் முதலிய தொழில் படிப்புக்கும் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் மேலான படிப்புகளுக்கும் எடுக்கப்படுகிறார்கள். ஷை கோர்ஸ்களை தாங்கள் செய்யும் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி தபால் மூலம் படித்து தாங்கள் விரும்பும் தொழிலுக்குப் போகலாம். ஏராளமான நற்சாட்சி பத்திரங்கள். முதலாவது 5 மாத இங்கிலீஷ் கோர்ஸில் சேருங்கள். ரூ. 5—0—0 (முழுக்கோர்ஸ்) அயல்நாடுகளுக்கு வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது. ஒவ்வொரு கோர்ஸ் முடிந்ததும் உயர்ந்த சர்டிபிகேட் கொடுக்கப்படும். தமிழ் தெரிந்தவரும் சேரலாம்.

டைரக்டர்,
கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
நாகூர்.


ஸ்ரீயுத [illegible] அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.